பர்மாநாடு

The BURMA NADU The Voice of the people

ESTD 1925

ဗမာပြည်

சுதந்திரதின மலர் ★ INDEPENDENCE NUMBER

விலை 75 பியா.



பல்லாண்டு வாழ்க பாரத சுதந்திரம்!

மக்கள் யாவரும் மன்னர்கள்
என்று திக்கெட்டும் கொட்டு
முழக்கும் இன்று நம் நாட்டு
மக்களுக்கு நல் வாழ்த்து!

★

அறு சுவை

சிற்றுண்டிகளுக்கும்

பானங்களுக்கும்

சிறந்த இடம்:

செவிக்கு விருந்தூட்டும் புத்தம் புதிய
இசைத்தட்டுகளின் பாடல்களையும்
கேட்டானந்திக்கலாம்.

திருச்சி சிற்றுண்டி சாலை,

284, பிரேசர் வீதி, இரங்கூன்.

THRUCHI LUNCH HOME,

No. 284, FRASER STREET, RANGOON.

இப்புவி மீது நம் நாட்டு
மக்கள் எல்லோர்க்கும்
எமது இன்ப வாழ்த்துக்கள்!

★

சுவையான
சிற்றுண்டிகளுக்கும்
காப்பிக்கும்,
மாலை 4-மணியிலிருந்து இரவு
9-30-மணிவரை தரமான காய்
கறிகளுடன், ரொட்டியும்,
சுத்தமான பசும்பாலும்
கிடைக்குமிடம்:

பாரத பந்து
காப்பி ஹோட்டல்

Bharath Bandu
Coffee Hotel,

125, MOGUL ST., RANGOON.
அதிபர்: எம். பி. சுவாமி.

ஜெய்ஹிந்த் !

இந்தியா சுதந்திரம் பல்லாண்டு வாழ்க !

குறித்தநேரத்தில் உகந்த முறையில் பாஸ்போர்ட் படம் முதல் எல்லாவித படங்களும் செய்து கொடுக்கிறோம்.

உங்கள் இல்லங்களை அலங்கரிக்க என்லார்ஜ் கலர் படங்கள் கவர்ச்சிகரமான முறையில் செய்து தரப்படும்.

அஜண்டா ஆர்ட் போட்டோ ஸ்டுடியோ,

(நகரின் மத்திய பாகத்தில் உள்ளது)

(158, சூலேபகோடா ரோட், பிரேசர் ரோட் முகனை) இரங்கூன்.

சுதந்திர இந்தியா நீடுழீ வாழ்க !

பர்மா எங்கும் மக்கள் எல்லோரும் விரும்புவது

லவ் பாண்டு டீ

ரிஜிஸ்டர் செய்த டிரேட் மார்க்

REGD. TRADEMARK

லவ் பாண்ட் எங்கும் கிடைக்கும்.

AVAILABLE IN ALL STORES

நம் பாரத சுதந்திரதின வாழ்த்து !

பர்மாவும்—பர்மிய ஜனாதிபதியும்—பிரதமர் ஊநூவும்—பர்மிய மக்களும் நீடூழி வாழ்க !

ஜனாதிபதி டாக்டர் பாஆ

பிரதமர் ஊ நூ

ராஷ்ட்ராபதி



டாக்டர் ராஜேந்திரபிரஸாத்.

பாரதத்தின் பிரதமர்

ஸ்ரீ ஜவஹர்லால் நேரு.

"பர்மா நாடு"

சுதந்திரதின மலர்

மலர் 30	மன்மத ஆண்டு. ✻ (15-8-1955) ஆடி 30-ம் நாள் ✻ ஹிஜ்ரி 1374 துல்கஜ் 26	இதழ் 1

: : பொருளடக்கம் : :

பர்மிய ஜனாதிபதி, பிரதமர் ஊ நு, ராஷ்டிரபதி, நேருஜி, சென்னை முதல் மந்திரி திரு. காமராஜ், பர்மிய மந்திரிகள், மற்றும் பலர்	....	படங்கள்
பர்மா நாடு முரசொலி—நன்றியும் வணக்கமும்	...	
ஆசிரியர் குறிப்புகள்	....	
"பர்மா நாடு" மீது பிரிட்டிஷாரின் பாணம் வழக்கில் தோல்வி யாருக்கு?	....	"பேனா முனை"
தமிழகத்தில் 'பர்மா நாடு" மறுமலர்ச்சி	....	
ஆசிச் செய்திகள்	....	ராஜாஜி மற்றும் அறிஞர்கள்
ஆவடிக் காங்கிரசில் பர்மா பிரதிநிதிகள்	....	7 முதல் 11 வரை படங்கள்
வங்கத்தின் வணங்காமுடி	....	இளந்தமிழன்
சுதந்திரப் போரில் நேதாஜி	....	எம்.எஸ். சுப்ரமணிய ஐயர்
பரிசு பெறுவதா? உண்மை உரைப்பதா?	....	ஜி.பி.சார்லஸ். எம்.ஏ டி.டி.
உயிர் கொடுக்கும் உழவன்	....	நாமக்கல் கவிஞர்
தமிழ் மொழி வாழ்த்து	....	பாரதியார்
அமரர் 'கல்கி'யின் வாழ்த்து	....	ரா. கி.
திரைகடல் தாண்டிய தமிழர்க்கு	....	எஸ்.விஜயலட்சுமி,எம்.ஏ.எம் லிட்
ஏ, விஞ்ஞானமே!	....	புரொபஸர் கே. ஜி. கிருஷ்ணன்
தமிழக வங்கப் புரட்சி	....	கா. அப்பாதுரை;எம்.ஏ.எல்.டி
சிங்கம் வீழ்ந்தது!	....	திரு வி. க.
தமிழகத்தின் பழமையும்—புதுவாழ்வும்	....	பரலி. சு. நெல்லையப்பர்
தமிழாக வாழ்க!	....	வெ. சாமிநாத சர்மா
மருள் மாலை	....	டாக்டர் மு. வ.
போஜோ அவுங்சான்	....	அரு. காந்தி அண்ணாமலை
"தென்னாட்டின் போஸ்" தேவர்	....	தொடர்பன்
தேவர் வாழ்த்து	....	உ. முத்துராமலிங்கத்தேவர்
சொந்த வாழ்வு	....	வேத்தரசன்
புதுமை வாழ்க	....	எஸ். டி. சுந்தரம்
காதல் கவர்ச்சி	....	காரா. நாச்சியப்பன்
மகரயாழ்	....	மேகலை
நல்லோர் உறவு	....	யோகிசுத்தானந்த பாரதியார்
என் தாய்நாடு	....	வி. லட்சுமி, பி. ஏ.
இந்தியா ஒரே இனமாக	....	காந்தியடிகள்
பர்மா நாடு வாழ்க!	....	ஆர். எடில்மாரல்
இன்பத் தமிழ்!	....	பாரதிதாசன்
ப. ஹ. ச.வின் இலட்சியம்	....	பர்மியத் தேனீ
நினைவும் நிழலும்!	....	இ. எம். பாஞ்ச்பீர்
அ. ப. த. சங்க போஷகர்களும் தலைவர்களும்	....	படங்கள்
அன்பின் அணையாச் சுடர்!	....	தேவதாஸ் காந்தி டேவிட்

மற்றும் வாழ்த்துச் செய்திகள், கவிதைகள், படங்கள் இடம் பெறுகின்றன.

மலர் விலை 75 பியா!

பாரதத்தின் சுகாதார மந்திரி

ராஜகுமாரி அமிர்த கௌரி

சென்னை முதல் மந்திரி

திரு. காமராஜ் அவர்கள்

உத்ரபிரதேச கவர்னர்



டாக்டர் பட்டாபி சீத்தாராமய்யா

தமிழ் வாழ்க !

‘பர்மா நாடு’ முரசொலி !

“பர்மா நாடு”வின் நீண்ட லட்சியப் போராட்டத்தின் குறுக்கே ஏற்பட்ட சிறுசிறு தடைகள் எல்லாம் இன்று நமது தளரா ‘முயற்சி’ என்னும் போராற்றலால் முறியடிக்கப்பட்டுவிட்டன! விரிகதிர்ச் செல்வன் கருமுகில் கூட்டத்தை விரட்டிடும் தன்மையில் “பர்மா நாடு” வீர சுதந்திரத் தமிழ் முழக்க நிறைவுடன் வெளிவரும் ‘சுதந்திர மலரை’ மக்கள் மன்றத்தின்முன் சமர்ப்பிக்கின்ரேம். தமிழ்ப்பெரு மக்களின் உள்ளங்களில் ‘பர்மா நாடு’ இன்று எதிரொலிப்பதில் நமக்கு பெருமகிழ்ச்சியே! ‘பர்மா நாடு’ ஆரம்பமுதல் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களின் ஆதரவை பெற்றிருந்தது. இதன் வளர்ச்சிக்கும், வாழ்வுக்கும் மக்கள் அளித்த ஆதரவுக்கு நமது நன்றி. சுமார் முப்பது ஆண்டுகளாக அரிய சேவை செய்த “பர்மா நாடு”வுக்கு மக்கள் தொடர்ந்து அளிக்கும் ஆதரவு பெருக வேண்டும் என்பதே நமது பிரார்த்தனை.

விடுதலை விழாவைக் கொண்டாடும் இத் திருநாளில் வேதனை தந்த சுதந்திரப் போராட்டமும் நம் நினைவில் நிற்கிறது! போராட்டத்தால் விளைந்த கொடுமைகளையும் கொந்தளிப்புகளையும் நினைக்கும்போது பயங்கரத் தோற்றமளிக்கின்றன! கடமையே கருத்தாய்க் சொண்டு—லட்சியமே உயிராய் மதித்து--இன்ப வாழ்வைத் துச்சமாய் எண்ணி விடுதலை வேட்கையால் உரிமைப் போரில் குதித்து வீரமரணமுற்ற தியாகச் செம்மல்களை நினைக்குப்போது நமது நெஞ்சம் நெக்குருகின்றது. அவர்களுக்கு நமது முதல் வணக்கம்!

“பர்மா நாடு” பத்திரிகையின் சென்ற முப்பது வருட வாழ்வின் வரலாற்றில் கண்ட சரித்திரப் பெருமைகள் பல. ஆனல் இடையில் நிகழ்ந்த மூன்ருண்டு நிறுத்தத்தால் அவை யாவும் கனவு போலாகிவிட்டன. இறந்த காலத்தின் ஏற்றத்தையும் தாழ்வையும் எண்ணுவதை மறந்து, இனி எதிர்காலத்தில் ஆற்ற வேண்டிய செயல் என்ன என்பதைச் சிந்தித்த பின்னரே இன்று உறுதியான நம்பிக்கையுடன் “பர்மா நாடு” மறுமலர்ச்சி பெற்று-தேசத் தந்தை அண்ணலின் முகப்பைத் தாங்கி சுதந்திர தின மலராக சுடர்விட்டுப் பிரகாசிக்கிறது! முயற்சி எனும் இமயத்துக்குமுன்னல் எதிர்ப்பு மடுவுகள் எம்மாத்திரம்?

பாரதம் சுதந்திரம் பெற்று எட்டாம் ஆண்டு நிறைவு பெறும் இந்நாளில் தமிழ்ப் பெருமக்களுக்கு எமது சுதந்திர வாழ்த்துக்களை “பர்மா நாடு” மூலம் தெரிவிக்கின்ரேம். இந்தியா இன்று ஆசியாவின் தலைமை தாங்கி உலக அரங்கில் சிறப்பான இடம்பெற்றுள்ளது. இது பற்றி பெருமை கொள்ளாதார் யாரும் இரார். இதற்குக் காரணம் புரட்சிகரமான சுதந்திரப் போராட்டத்தில் காந்தியடிகளின் அறப் போரில் கண்ட அன்பின் சக்தியால் முடிந்ததேயாகும். இச்சுதந்திரத் திருநாளில் பெருமை கொள்ள பர்மிய மக்களுக்கும், “பர்மா நாடு” பத்திரிகைக்கும், பர்மா வாழ் தமிழ் மக்களுக்கும் உரிமையுண்டு!

‘காந்தீயம்’ வகுத்த போராட்டங்களில் ‘பர்மா நாடு’ புரிந்த சேவை மகத்தானது. பர்மா இந்திய சமுதாயத்தில் தாய் நாட்டின் அறப் போரின் குரல் கேட்டவுடன் **தமிழர்கள்** வீறு கொண்டெழுந்தனர் அடக்குமுறை-தடியடி-துப்பாக்கிக்குண்டு-சிறைவாசம் எல்லாம் ஏற்றனர். கடல் கடந்த இந்தியர் அளித்த ஆதரவுப் படலத்தில் பர்மா வாழ் தமிழர்கள் தொண்டு இடம் பெற்றுள்ளதில் நமக்கும் பெருமையுண்டு.

ஜப்பான் படையெடுப்பில் பர்மாத் தமிழர்கள்-நம் தலைவர் பெருந்தகை-வங்கத்தின் வணங்காமுடி—சாவையும் வென்ற சக்திச்சுடர் நேதாஜீயின் தலைமையில் நடந்த போராட்டத்தில் காட்டிய வீரத்தை ஈண்டு ஓரளவில் குறிப்பிடமுடியாது! இந்திய சுதந்திரப் போரில் **தமிழகம்** முன்னணியிலேயே இருந்துவந்திருக்கிறது. ஏன்? வழிகாட்டியாகவும் இருந்திருக்கிறது! இருந்தாலும் பயனென்ன? தமிழர்களின் பெருமை தமிழகத்திற்கே தெரியாத அளவில் இரட்டிப்பான இருட்டடைப்பில் மூழ்கிவிட்டது. என்பினும் ஆசியாவின் ஜோதியான நம் பிரதமர் நேருஜி சென்னைப் பத்திரிகை நிருபர் கூட்டத்தில் ‘பலவகையிலும் பாரத நாட்டுக்குச்

சென்னை மாகாணமே வழிகாட்டியாக இருந்து வந்தது' என்று சொன்னது நமக்கு ஓரளவு ஆறுதலளிக்கிறது. உண்மையை உரக்க ஒலித்த நேருஜிக்கு நமது ஜேய் ஹிந்த்.

அண்ணல் காந்தியார் தமிழர்களை வாயாரப் போற்றினார் தமிழர்களிடையே வாழ்ந்தார். ஆரம்பகாலத்திலேயே காந்தியை எதிர்காலத்தில் "பாரதத்தின் மகாத்மா" என்று முதலில் உணர்ந்தவர்கள் தமிழரே! தென்னாப்பிரிக்காவில் தமிழர்கள் செய்த தொண்டே அவரின் அறப்போரின் வெற்றிக்கு ஆதாரமாகவிருந்தது! வள்ளுவன் அளித்த–திருக்குறளையும் அதிலுள்ள அறநெறியை பழுதற ஒழுகியதால்தான் அவர் 'மகாத்மா' ஆனார். அதை அண்ணலே ஓரிடத்தில் கூறியிருக்கின்றார். காந்திஜியின் புகழ் ஒளியில் தமிழர்களுக்குப் பங்கு உண்டு. ஆனால் இன்றுங்கூட தமிழர்களில் பெரும்பாலோர் 'தம் நிலை'யை உணராத நிலையிலிருப்பதுகண்டு நாம் வருந்துகிறோம். மகாத்துமா காந்தி என்ன சொன்னார்? "இந்தியா ஒரே இனமாக'வேண்டுமானால் சென்னைக்கும் வடக்கேயுள்ள வடநாட்டு மக்களும் 'தமிழை'க் கற்கவேண்டும்" என்று அறிவுரை கூறியிருக்கிறார். இன்று தமிழகத்தில் 'இந்தி' வலிய–கட்டாயமாகத் திணிக்கப்படுகிறது. 'தமிழ்' சென்னை அரசாங்க நிர்வாக மொழியாகக்கூட ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இந்த அவலநிலையை நினைத்துக் கவலைப்படாத தமிழர் யார் இருக்கமுடியும்? தமிழ் மொழிதான் அமிழ்த மொழி எனச்சொன்ன மகாத்மா இன்று இருந்திருந்தால் உண்மையிலேயே தமிழை–அகில இந்திய அரசாங்க மொழியாகக் கூட ஆக்கியிருப்பார்! தமிழ் மொழி வளர்ச்சியில் தமிழர் விழிப்போடிருக்கவேண்டும்!

நன்றியும் வணக்கமும்

"பர்மா நாடு" பத்திரிகைக்கு சொல்லால் அன்பும்—செயலால் ஆதரவும், பாராட்டிய பெரியோர்—சிறியோர் எல்லோருக்கும் நமது நன்றி. எண்ணற்ற வாழ்த்துச் செய்திகள் மூலம் நமது சேவா உணர்ச்சியைப் பெருக்கி வழிகாட்டி வரும் சான்றோர் எல்லோருக்கும் நமது வணக்கம். "பர்மா நாடு" முன்பு வாழ்ந்த வாழ்வை மக்கள் அறிந்ததே! வாழ்வும்—தாழ்வும், மலையும் மடுவும் போன்றவை. இவை வாழ்வில் மாறி மாறி வருவது இயற்கை. இன்று "வாழ்வோர்" இறுமாப்படையவோ அல்லது "வழுக்கி விழுந்தவர்" மனமுறிந்து கவலைக்குள்ளாகவோ காரணமில்லை. வாழ்வில் வறுமையும், எடுத்துக்கொள்ளும் பெரும் முயற்சிகளில் தோல்வி மேல் தோல்வியும் ஏற்படுவது எதிர்கால வெற்றியின் அறிகுறிகள் என்பதே ஆன்றோர்களின் மணிவாக்கு! இவ் அறிவுரையிலே திளைத்துப்போன நம் இதயத்திலே, இனி அச்சமில்லை, எதிர்ப்பு சக்தி இல்லை என்று முழக்குவோம். தமிழ் மக்கள் மனதைத் தொட்டுத் துடிதுடிக்கச் செய்யும் அறிவுரைகள், வாழ்வாங்கு வாழ மகத்தான திட்டங்கள், முதலியவற்றை விளக்குவதுடன் பர்மா நாட்டின் அரசியல் வாழ்வில் நாமும் கலந்து, பர்மா நாட்டை பொன்னாடாக்க முயலுவதில் நமக்கு உரிமை உண்டு என்ற உரிமைக் குரலோடு—அரசியலார்க்கும் அறிவுரை கூறத்தயங்கமாட்டோம். பர்மிய மக்களோடு உடன் நின்று—தோளோடு தோள் கொடுத்து--இந்நாட்டின் பண்பு,அன்பு அறம்,சத்தியம், அகிம்சை எல்லாம் ஓங்கிய நல்வாழ்விலேயே—தமிழர் இனம் வாழவும், மொழி, கலை, கலாச்சாரம் வளரவும் பாடுபடுவோம். தமிழ் மக்கள் பர்மாவில் எங்கெங்கு வாழ்ந்தாலும் அங்கெல்லாம் "பர்மா நாடு" வுடன் மனம், சொல்-செயல் அனைத்தும் ஒன்றி ஒற்றுமையுடன் வாழும் முயற்சிகளில் தளரமாட்டோம்! 'தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்வோம்' என்ற முழக்கத்துடன் செயலாற்றி வரும் தமிழகப் பெரியார்களுடன் நாமும் உயிர் கொடுத்து **தமிழ் மொழிக்கு** உழைப்போம் என்று உறுதி கூறுகிறோம்.

•

இம்மலரைக் குறுகிய காலத்திற்குள் வெளியிட நேர்ந்தமையால், நாம் திட்டமிட்ட அளவில் வெளியிட முடியாவிட்டாலும், ஓரளவு நிறைவேறியிருக்கிறது. மலரின் அமைப்பில் எழுத்தில் காணும் குறைவுகளை நீக்கி "குணம் நாடிக் குற்றம் நாடி அவற்றுள் மிகை நாடி மிக்க கொளல்"—(குறள்)

—வணக்கம்!

ஊநா—நேருஜி யாத்திரை !

அணுசக்தி வளர்ச்சியின் விளைவாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ள ஹைட்ரோஜன் குண்டைப் பற்றி உலகமெங்கும் மக்கள் நடுநடுங்கிக்கொண்டிருக்கிறார்கள். சிந்தனை சக்தி மிக்க விஞ்ஞானிகள் ஏகக்குரலாக அணுக்குண்டு உற்பத்தியை நிறுத்தவேண்டுமென்று எச்சரிக்கை செய்துள்ளனர் இந்த விஞ்ஞானத்தை வளர்த்து பயங்கரமான அணுக்குண்டு பூதத்தை உற்பத்தி செய்த வல்லரசுகளான அமெரிக்காவும், ரஷியாவும் என்ன செய்வதென்றறியாமல் பீதியுடன் திகைத்து நிற்கின்றனர். இந்நிலையில் உலக அரங்கில் யுத்தக் கொந்தளிப்பும் போராட்டங்களும் ஓயவில்லை.

அடுத்த விநாடியில் அணுக்குண்டு யுத்தம் ஏற்படலாம் என்ற திகிலின் பயங்கரத்திலிருந்து விடுதலை சய்ய ஆசியாவின் இருஜோதிகளான பிரதமர் ஊநா அமெரிக்காவுக்கும், பாரதப் பிரதமர் நேருஜி ரஷ்யாவுக்கும் உலகின் சமாதானத் தூதர்களாகச் சென்று திரும்பியும்விட்டார்கள். ரஷ்யாவை நேருஜியும், அமெரிக்காவை ஊநாவும் தங்களின் களங்கமற்ற அன்பின் போதனையால் வசப்படுத்த முடிந்தது. நெருக்கடியான சூழ்நிலையில் வெற்றிகாணும் நல்லறிகுறிகள் ஓரளவில் தோன்றுகின்றன.

நான்கு வல்லரசுத் தலைவர்களின் மாநாடும் முடிந்துவிட்டது. இன்று உலகில் அமைதி நிலவுகின்றது.

உலக மக்கள் எல்லோரும் ஊநாவையும் நேருஜியையும் வாழ்த்துகிறார்கள். நாமும் போற்றுகின்றோம்.

நேருஜி – ஊநா வாழ்க !

இலங்கையின் உறவு.

இன்று இமயந்தொட்டுக் குமரி மட்டுமல்ல—உலகமெங்குமே — அசோகச் சக்கரம் பொறித்த பாரத மணிக்கொடி வானளாவப் பறந்துகொண்டிருக்கக் காண்போம். விண்ணதிர மேடைகள் தோறும் சுதந்திர முழக்கம் ஒலித்திடக் கேட்போம். இந்நாளில்—கடல் கடந்து வாழும் நமக்கு பாரதமும், நாட்டு மக்களும் நினைவில் தோன்றுகிறார்கள்.

இந்த இன்ப நாளில் இலங்கை—இந்தியர் குடிஉரிமை பிரச்னை பயங்கரமான நிலையை எட்டுகிறது. இந்நிலை நீடிக்குமானால் என்ன ஏற்படும் என்பதைச்சொல்ல முடியாது. பன்முறை முயன்றும் நேருஜிவிரும்பியும் இந்தியா-இலங்கை உறவு ஒப்பந்தம் ஏற்படவில்லை. கீரியும் பாம்பும் போன்ற நிலையை இன்றைய சூழ்நிலை வலியுறுத்துகிறது. இருண்ட பயங்கர உலகில் சமாதான ஒளியைப் பரப்ப முயன்று ஓரளவில் வெற்றி கண்ட நேருஜி இலங்கைப்பிரச்னையிலும் உடனே ஒரு முடிவு காண வற்புறுத்துகிறோம். வட துருவம் தென் துருவம் போன்றிருந்த செஞ்சீனாவையும் அமெரிக்காவையும் உறவு பூணச் செய்த நம் பிரதமர் நேருஜியின் பிரதிநிதி திரு. மேனன், இலங்கை உறவில் விமோசனம் ஏற்பட வழிகாண உடனே விரைந்து செல்ல வேண்டுமென யோசனையும் கூறுகிறோம். கடல் கடந்து வாழும் இந்தியர்கள் இந்தியா–இலங்கை பிரச்னையில் சுமூகமான நல்லுறவு ஏற்படும் நன்னாளை எதிர்பார்க்கிறார்கள்.

கப்பல் பிரச்னை!

கப்பல் பிரயாணிகளாகிய நம்மை மரக்கட்டைகள் போன்று உருட்டி விளையாடிவரும் சிந்தியாக் கப்பல் கம்பெனியின் பைத்தியக்காரச் செயல்கள் ஏராளம்.

கப்பலை நிறுத்திய செயலும், அதற்குக் கூறிய காரணங்களும் அர்த்தமற்றது என்று அஞ்சாது துணிந்து கூறுவோம். "ஜலகோபால்" கடலில் செல்வது ஆபத்து என்று நாம் வன்மையாக எதிரொலித்தபோது 'சிந்தியா'

நம்மை பூச்சாண்டிகாட்டி மிரட்டியது. இன்று ஜனசபையில் உதவி அமைச்சர் திரு. அழகேசன் நாம் கூறிவந்ததின் உண்மையை அம்பலப்படுத்தி விட்டார்.

இவ்வளவுதூரம் ஆபத்துவிளைவிக்கும் நிலைமையிலிருந்தும்—இதே கப்பலில் நம்மக்களை பலமுறைகளில் ஏற்றிச் சென்றது மன்னிக்க முடியாத குற்றமாகும். அதற்குக் கூறிய காரணங்களோ எல்லோரையும் முட்டாள்களாக்கியதைக்கண்டு, நம் மனம் கொதித்தது; நெஞ்சம் துடித்தது. சிந்தியாவின் இந்த அவலக் கருத்துக்களைத் துணிந்து அம்பலப்படுத்துவோம். தன் கடமை தவறிய செயலை வன்மையாகக் கண்டிப்போம். பர்மாவிலும் தமிழகத்திலும் ஏககாலத்தில் எழுப்பிய அபாயச் சங்கொலியின் எதிரொலிப்பால் —விழித்த இந்திய அரசாங்கத்தின் வற்புறுத்தலில் திணறிவிட்டதின்பிறகே "சோனவதி" எனும் மற்றொரு மட்டமான்க் குட்டிக் கப்பல் வருகிறதாம்! வரட்டும்! ஆனால் இப்பிரச்சினையை நிரந்தரமாக தீர்க்க நாம் தொடர்ந்து எழுதுவோம். ஆனால் இன்று எழுதவோ மலரில் இடமில்லை!

விளம்பர நேயர்களுக்கு நன்றி!

முழு மன நிறைவோடு வளரும் கையால் விளம்பரப்பகுதியை ஆரம்பித்துவைத்த அன்பருக்கும் விளம்பரங்கள் கொடுத்து மலரைச் சிறப்பித்த எல்லா நண்பர்களுக்கும் நன்றி. சில விளம்பரங்கள் இறுதிநேரத்தில் ஏற்றுக்கொள்ள முடியாமைக்கு வருந்துகிறோம்.

மந்திரியான முதல் பெண்மணி

கரின் ஸ்டேட் மாஜி மந்திரி

ஸ்ரீமதி பா-மாங் செய்ன்

பத்திரிகாசிரியர்

மாஜி மந்திரி ஊ டுன் பே

தமிழகத்தில் 'பர்மா நாடு' மறுமலர்ச்சி !

[ஜப்பான் யுத்த காலத்தில் கிழக்காசியாவின் பல நாடுகளிலிருந்து, குறிப்பாக பர்மாவிலிருந்து சென்ற மக்களுக்கு 'பர்மா நாடு' அகதிகள் குரல் (EVACUEES' VOICE) மூலம் சிறந்த தொண்டாற்றியது. இமயம் முதல் குமரிவரை எதிரொலித்த நமது சேவையைப் பாராட்டிய பெரியார்களில் ஒரு சிலரைமட்டும் இவண் குறிப்பிடுகின்றோம்.]

சர் டார்மன் சிமித்.

(பர்மா மாஜி கவர்னர், சிம்லா)

"இந்த நெருக்கடியான சூழ்நிலையில் துணிச்சலுடன் 'பர்மா நாடு' அகதிகளின் குரலாக ஆற்றிவரும் சேவைகளைக்கண்டு வியப்படைகிறேன்............உண்மையான பர்மா—இந்தியர்களின் எதிர்கால உரிமைகள் என் மனதில் ஆழமாகப் பதிந்துள்ளன. தங்கள் பிரஸ்தாபக் கட்டுரைகளின் போக்கில் தொடர்ந்து தொண்டாற்றினல் வெறுப்பும், அவநம்பிக்கையும் மறைந்து சுமூகமான கூட்டுறவு ஏற்படும் என்பதில் ஐயமில்லை."

* * *

காலஞ்சென்ற ஊட்டுன்டுட்.

(மாஜி பொக்கிஷ—அயல்நாட்டு மந்திரி)

'நல்ல பயனுள்ள விபரங்களுடன் வெளிவரும் 'பர்மா நாடு' பத்திரிகையை மிக்க கவனத்துடன் தொடர்ந்து படித்து வருகிறேன். எதிர்காலத்தில் இதைவிடப் பன்மடங்கு முன்னேற்றச்சுடர்வீசித் திகழும் என்று நம்புகிறேன்."

* * *

காலஞ்சென்ற மகாகனர் வி. எஸ். சீனிவாச சாஸ்திரியார்

"திரு டேவிட் அவர்கள் இம் மாபெரும் பணியை ஏற்றுச் செயலாற்ற காரணம் இருக்கிறது. சென்னையிலிருந்து வெளிவரவிருக்கும் 'பர்மா நாடு' ஆசிரியரின் அநுபவமிக்க கரங்களில் ஒரு சக்திவாய்ந்த கருவியாக விளங்கும். புகழ்பெற்ற பல பெரியார்களின் பாராட்டுதல்களை ஏற்கனவே (ஆசிரியர்) பெற்றுவிட்டார். என்னையும் கௌரவப்படுத்திக் கேட்பதால் பெருமகிழ்வுடன் எனது வாழ்த்துக்களைச் சமர்ப்பிக்கின்றேன்."

திரு ஏ.வி. பாய் சி.ஐ.இ.; ஓ.பி.இ.; ஐ.சி.எஸ்.

(இந்திய அயல் நாட்டு இலாகா மாஜி காரியதரிசி)

"பர்மா நாடு" பத்திரிகையை கவனிப்புடனும் ஒழுங்காகவும் படித்துவருகிறோம், என்று உறுதிகூறுகிறோம். தங்களின் எல்லா தலையங்கங்களையும், கட்டுரைகளையும் ஒழுங்காகப் படிக்கத் தவறுவதில்லை. தங்களின் கருத்துக்களை நாங்கள் மதிப்பதுடன் சர்க்காரும் பூரணமாக கவனிக்கும் என்பதில் சந்தேகமில்லை."

* * *

உலகப் புகழ்பெற்ற "இந்து" (HINDU)

(சென்னையில் வெளிவரும் ஆங்கில தினசரியின் மதிப்புரை)

"படையெடுக்கப்பட்ட நாட்டிலிருந்து ஓடிவந்த மக்களின் பரிதாபகரநிலை மனதை உருக்குகின்றது. இத்தகைய மக்கள் நமது உதிரத்தின் உதிரமாகவும், சதைக்குச் சதையாகவும் இருக்கும் நிலையை எண்ணும்போது நமது துயரம் இன்னும் மிகைப்படுகிறது. பர்மா, மலேயா, மற்றும் தூரகிழக்கத்தியத் தீவுகளிலிருந்துவந்த இவர்களுக்கு நம்மால் இயன்றளவு ஆதரவும், அன்பும் எல்லாவித உதவிகளும் அநுதாபமும், ஆறுதலும் அளிக்கக் கடமைப்பட்டுள்ளோம். மறுமலர்ச்சி காணும் 'பாமா நாடு' இத்தகைய மக்களின் துயரங்களையும் தேவைகளையும் வெளியிட்டு அரசாங்கத்தினரும், தனிப்பட்ட மக்களும் ஆதரவு அளிக்க குரலெழுப்ப முன்வந்திருக்கிறது. இரங்கூனில் வெளிவந்த இப்பத்திரிகை மீண்டும் இந்திய பூமியில் வெளியிடும் முயற்சியை இப்பத்திரிகையின் முதல் மலரில் காணப்படும் எண்ணரிய வாழ்த்துச் செய்திகளின் மூலம் எல்லோராலும் வரவேற்கப்படுகின்றதே இதற்குப்போதிய சான்றாகும்."

காலஞ்சென்ற,
டாக்டர் ராஜா சர். அண்ணமலை
செட்டியாரவர்கள்.

"சென்னையிலிருந்து மீண்டும் 'பர்மா நாடு' உதயமாகிறது என்று கேட்க சந்தோஷமடைகிறேன். பர்மாவின் அகதிகள் அடையும் கஷ்டங்களையும் சிரமங்களையும் வெளிப்படுத்த எதிரொலிக்குமென நம்புகிறேன். அநுபவமிக்க நம் ஆசிரியர் இம் மகத்தான பொறுப்பை தாமே வலிய மேற்கொண்டிருப்பதில் வெற்றிகாண கஷ்டமிராது என்று நம்புகிறேன். தங்களின் நன்முயற்கி வெற்றிபெற விரும்புகிறேன்."

* * *

சர் மிர்ஜா இஸ்மாயில் அவர்கள்
(மைசூர், ஜெய்பூர், ஹைதராபாத் போன்ற சமஸ்தானங்களின் மாஜி திவான்)

"இரங்கூனிலிருந்து வெளிவந்த பிரபல்யமிக்க தமிழ்த் தினசரியான 'பர்மா நாடு' சென்னையில் மீண்டும் உதயமாவதைக்கேட்டு மகிழ்கிறேன். அகதிகளுக்கு ஆதரவளிக்க முன்வந்திருக்கும் பத்திரிகைக்கு எல்லாவித உதவிகளும் அளிக்கவேண்டும். உற்ற சமயத்தில் தொண்டாற்ற முனைந்துள்ள பத்திரிகை வளர்ந்துவாழ வாழ்த்துகிறேன்."

* * *

சர் டுன் ஹாங்ஜோ (மாஜி பொக்கிஷ மந்திரி), ஸ்ரீ ஜெம்னதாஸ் மேத்தா, எம்.எ.எல்.எல்.பி. (பர்மாவின் முதல் இந்தியப் பிரதிநிதி), ஸ்ரீ. ஸி. பி. சின்ஹா, எம். எ., சர் ஆர்தர் ஹோப் (சென்னை மாஜி கவர்னர்),சர் ஆண்ரூ குலோ (அஸாம் மாஜி கவர்னா), ஸ்ரீ எம். எஸ். அனே (பீகார்), மிஸ்டர் வில்லியம் பிலிப்ஸ் அமெரிக்கா பிரஸிடெண்டு ரூஸ்வெல்ட் அவர்களின் பிரதிநிதி), காலஞ்சென்ற ஸ்டில்வெல் (மாஜி இந்தியா, பர்மா சீனு, அமெரிக்கா ரணுவ தளகர்த்தர்), டாக்டர் எம். பி. கேரே (மாஜி இந்திய வைசிராய் கவுன்சில் மெம்பர்), சர் புருஷோத்தம தாக்கூர்தாஸ், பம்பாய், சர் சி. பி. ராமசாமி ஐயர் (மாஜி திவான், திருவாங்கூர்), மே. த. ஸ்ரீ. ஜி. எல். மேத்தா (இன்று அமெரிக்காவில் இந்தியத் தூதுவர்), மே. த. ஸ்ரீ டாக்டர் ரவூப்(ஜப்பானில் இந்தியத் தூதுவர்) சர் லீச் (சென்னை மாஜி பிரதம நீதிபதி), சர் ஜே. பி. வாஸ்தவா (மாஜி வைசிராய் கவுன்சில் மெம்பர்), சர் ஜோகின்தர சிங், (மாஜி கவுன்சில் மெம்பர்), சேத் ஸ்ரீ இராமகிருஷ்ண டால்மியா, சேத் ஆர். டி. பிர்லா, சர் டாக்டர் ஆர். எம். அழகப்பா செட்டியார் அவர்கள், காலஞ்சென்ற சர் பாரன் ஜெயதிலகா (இந்தியாவில் சிலோன் முதல் தூதுவர்), சர் அகமத்சேட் கான் சத்தாரி நவாப் (ஐதராபாத் சமஸ்தான மாஜி தலைவர்), ராஜ மன்திர பிரவா என். மாதவ ராவ் (மைசூர் மாஜி திவான்), ராஜா சர் எம். ஏ. முத்தையா செட்டியார் அவர்கள் (செட்டி நாடு ராஜா), காலஞ்சென்ற ஸ்ரீ எம். ஸி. டி. எம். சிதம்பரம் செட்டியார் அவர்கள் (தலைவர் இந்தியன் ஓவர்சீஸ் பேங்க்), காலஞ்சென்ற ஸ்ரீ அ. மு. மு. வெள்ளையன் செட்டியார் அவர்கள் (மாஜி தலைவர் பர்மா நாட்டுக்கோட்டை செட்டியார்கள் சங்கம்), டாக்டர் எஸ். ஜான் அவர்கள், ஸ்ரீ டக்ஸன், ஐ. ஸி. எஸ். (கொச்சின் மாஜி திவான்), ராவ்பகதூர் ஸி. தாதுலிங்கம் (மாஜி மேயர் சென்னை),ஸ்ரீ சக்கரை செட்டியார் (மாஜி மேயர்), ஸ்ரீ ராதா கிருஷ்ண பிள்ளை (மாஜி மேயர் சென்னை), கேப்டன் ஸி. மாணிக்கம், கோவை

* * *

நன்றி வணக்கம் !

நமது "பர்மா நாடு" தாய்நாட்டில்—குறிப்பாக நாம் பெருமைபடத் தக்க நிலையில் தமிழகத்தில் சிறப்புடன் வெளிவந்த சரித்திர வரலாற்றை ஈண்டு எழுத்தில் சொல்லி முடியாது. கிழக்காசியாவிலிருந்து சென்ற அகதிகளின் அவலம் நிறைந்த சூழ்நிலையை எதிரொலிக்க குரல் கொடுத்த "பர்மா நாடு"வைப் பாராட்டி—வாழ்த்திய மாபெரும் தலைவர்கள் எல்லோருக்கும் நமது வணக்கம் உரித்தாகும், இப்பெரியார்களில் சிலர் அமரத்துவம் அடைந்துவிட்டாலும் நாம் இன்றும் அவர்களை நன்றி உள்ளத்தோடு நினைவு கூறக் கடமைப்பட்டுள்ளோம், அவர்களின் ஆன்மா அமைதியுறுமாக! மேலும் தொடர்ந்து வெளியிடுவதற்கு இடமின்மையால் மதிப்புக்குரிய பல பெரியார்களின் பெயர்கள் இடம்பெறவில்லை. எல்லோருக்கும் எமது நன்றி வணக்கம்!

★

அரசியல் மேதை ராஜாஜி அவர்களின் ஆசி.

"நின்றுபோயிருந்த 'பர்மா நாடு' இப்போது வாரப் பத்திரிகையாக மறுபடியும் வெளியிடுவதை அறிந்து மகிழ்ச்சியடைந்தேன். என் ஆசிகள்."

இராசகோபாலாச்சாரி,
சென்னை.

"இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாகப் பணியாற்றித் தமிழ் நலம், தமிழர் நலம் கருதி உழைத்துவந்த "பர்மா நாடு" மீண்டும் புத்துணர்ச்சியுடன் வரும் செய்தி கேட்டு மகிழ்ந்தேன்.

பழம் பெருமையும் பழம் பண்பாடும் வாய்ந்த தமிழர் காலப்போக்கை நன்கு உணர்ந்து விடா முயற்சியும், தளரா ஒற்றுமையும் பூண்டால்தான், தழைத்து விளங்கமுடியும். இந்த நன்னோக்கம் கொண்டு "பர்மா நாடு" தமிழர் உள்ளங்களைப் பிணிக்கும் அருந்துணையாகத் திகழ்ந்து தொண்டாற்றி மென்மேலும் சிறப்புறுவதாக! வளர்க உங்கள் நன்முயற்சி! வாழ்க 'பர்மா நாடு'!"

—மு. வரதராசனர் (பேராசிரியர்)

"பர்மா நாடு" மீண்டும் வெளிவரப் போவதாக அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். சென்ற கால் நூற்றுண்டுக்கு மேலாகத் தாங்கள் செய்துள்ள பத்திரிகைத் தொண்டை பர்மாவிலுள்ள தமிழ் மக்கள் நன்கறிவார்கள்.

எனக்குத் தெரிந்தவரையில் தாங்கள் தங்களுக்கு மாறுபட்ட கருத்துடையவர்களை 'பர்மா நாடு' பத்திரிகையில் இழிவாகத் தாக்கி எழுதியதே கிடையாது.

"பர்மா நாடு" எப்பொழுதும் தேசிய விஷயங்களில் முன்னணியில் நின்று வந்திருக்கிறது. ஒருசமயம் கம்பையில் நடைபெற்ற மகாநாடு ஒன்றில் தாங்கள் கலந்து கொண்டீர்கள். அச்சமயம் ஸ்ரீ வி. ஜே. படேல் காலமான செய்தி கிடைத்தது. உடனே தாங்கள் இரங்கூனுக்கு விரைந்துசென்று சில மணி நேரத்தில் ஓர் அநுபந்தம் வெளியிட்டு அதனைப் பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கியது எனக்கு ஞாபகமிருக்கிறது.

தங்களுடைய முதிர்ந்த அனுபவத்தைப் பர்மாவாழ் தமிழர்கள் தங்கள் நன்மைக்கு நன்கு பயன்படுத்திக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். 'பர்மா நாடு' நல்லமுறையில் நடைபெற ஆண்டவன் அருள் புரியவேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்.

ஏ. கே. செட்டியார்,
ஆசிரியர் "குமரி மலர்", சென்னை.

"வெளிநாட்டிலே வாழும் தமிழர் குமாரைச் சந்தித்து அளவளாவியதில் எனக்கேற்பட்ட மகிழ்ச்சி எழுத்தில் அடங்காது. இந்த இளந்தமிழர் வாயிலாகத் தமிழ்க் கலைஞனாகிய நான் பர்மாவில் வதியும் தமிழர்களுக்கு விடுக்கும் வேண்டுகோள் இதுதான்.

தமிழர்களே! உங்கள் நாகரீகம் உன்னதமானது. உங்கள் மொழி ஒப்பற்ற இலக்கிய வளம் நிறைந்தது. நீங்கள் எங்கிருந்தாலும், உங்களுக்குள் எவ்வளவு கருத்துவேற்றுமைகள் இருந்தாலும் ஒன்றுபட்டு வாழுங்கள். உங்கள் வாழ்வு சிறப்புறுவதாக! "பர்மா நாடு" "பர்மா வாழ் தமிழினித்தின் குரலாக ஒலிக்கட்டும்.

தமிழ்க்கலையும், தமிழ்ப் பண்பும் பர்மிய மக்களிடையே உங்களுக்குத் தனிச் சிறப்பைத் தேடித் தருவதாக".

அன்பு டி. கே. சண்முகம்,
"நடிப்புக் கலைஞர்", சென்னை.

சந்தித்தேன்

"சகோதரர் குமார் அவர்களைச் சந்தித்தேன். தமிழார்வமும், பொதுநல ஆர்வமும் கொண்ட நல்லிளைஞர் அவர். "பர்மா நாடு" இதழ் பர்மியப் பூமியிலே தமிழர்களுக்காகப்

பாடுபடுகிறது என்ற இன்பச் சேதியைச் சொன்னார். வெளிநாடுகளிலே சிதறிக் கிடக்கும் தென்னகத்துப் பொன்மலர்களை ஆங்காங்கே மாலையாகக் தொடுத்து மணம் பரப்பும் பொது நலத் தொண்டர்கள்—தலைவர்கள்—எழுத்தாளர்கள் தேவை. அந்தத் தேவையை நிறைவேற்றும் பொறுப்பிலே "பர்மா நாடு"ம் பங்கு பெறுகிறது என்பது களிப்பூட்டும் செய்தி தானே!

தமிழகத்தைச் சுற்றிப் பார்க்கவும், தமிழ்ப் பெருமக்களைச் சந்தித்துப் பேசவும் வந்துள்ள தம்பி குமார், தென்னகத்துச்சிறப்புகளையும், அது வேற்றோர் பிடியில் சிக்கி தேய்ந்திடும் நிலைமைகளையும், விடுதலைப் போரின் அணி வகுப்புகளையும், பர்மாவுக்கு எடுத்துச் செல்வாராக! அங்குள்ள தென்னவரும் எழுச்சி பெறுவாராக! என்னைச் சந்தித்த குமாருக்கும், அவரை அறிமுகப்படுத்திய தோழர் திரு டேவிட் ("பர்மா நாடு" ஆசிரியர்) அவர்கட்கும் என் இதய நன்றி உரியதாகுக!"

—மு. கருணாநிதி

ஆசிரியர் "முரசொலி" சென்னை.

"பர்மாநாடு" இதழின் அருமைகளையும், பெருமைகளையும் அறிந்தேன். பர்மாவாழ் தமிழர்களுக்கு அரும்பணி ஆற்றிவரும் இதழை நான் வாழ்த்துகின்றேன். இந்தச் சிறந்த இதழின் முன்னேற்றத்திற்காகப் பாடுபடும் அனைவரின் தொண்டையும் எண்ணி மகிழ்கிறேன். தமிழ் தாய் பர்மாவில் வீரநடை போட்டு நடக்க உதவும் நண்பர்களையும் நான் வாழ்த்துகிறேன். நிற்க!

பர்மாவாழ் தமிழர்கள் ஓரளவு வசதியாக வாழ்கிறார்கள் என்று கேட்டு மன ஆறுதல் பெறுகிறேன்.

நல்ல காலம் வரும் என்ற நம்பிக்கையும் சீர்கெட்ட திராவிடத்தை திருத்தி செம்மைப், படுத்துவோம் என்ற நம்பிக்கையும்தான் திராவிடத்தின் இலட்சிய வீரர்களுக்கு இருக்கின்றன. திராவிடம் பல அரிய சாதனைகளை திராவிட முன்னேற்றக் கழகத்தின் வாயிலாக அடைய இருக்கிறது. அதுபோது உங்களுடைய உதவியும் அநுதாபமும் எங்களுக்குத் தேவை. அதனை

அ. ப. த. ச. விழாவில்

யே. த. இந்தியத் தூதுவர்

திரு. சக்சேனா

நீங்கள் திராவிடத்திற்கு அளிப்பீர்கள் என்ற உறுதியும் எங்களுக்கு உண்டு!

நல்லதோர் சமுதாயம் வேண்டும்—நல்லதோர் அரசியல் வேண்டும்—நல்லதோர் பொருளாதார மாற்றம் வேண்டும்—இதற்காகவே உழைக்கும் திராவிட முன்னேற்றக் கழகம் நிச்சயமாக வெற்றி பெறும். அந்த வெற்றியின் மகிழ்ச்சியில் பங்குகொள்ள உங்களுக்கும் உரிமை உண்டு.

வாழ்க பர்மிய தமிழர்கள்! வாழ்க பர்மிய நாடு! வாழ்க உண்மை!

—பால்வண்ணன்,

ஆசிரியர், "அறிவொளி" சென்னை.

பர்மா மந்திரிகள் வாழ்க!

கனம் ஊ வின்
(மத இலாகா மந்திரி)

கனம் சோகுன்ஸோ
(அயல்நாட்டு இலாகா மந்திரி)

கனம் ஊக்கின் மவுங்லாட்
(நீதி இலாகா மந்திரி)

கனம் ஊட்டின்
(நில தேசிய இலாகா மந்திரி)

பர்மிய மந்திரிகள் வாழ்க !

கனம் ஊட்டின்
(நிதி மந்திரி)

கனர் ஊ பாசுவே
(பாதுகாப்பு மந்திரி)

கனம் ஊட்டுன் வின்
(பிரச்சார இலாகா மந்திரி)

கனம் போக்கின் மவுங்லே
(உள்நாட்டு மந்திரி)

“பர்மா நாடு” மீது பிரிட்டிஷாரின் பாணம்!

வேடிக்கையான வழக்கின் எதிரொலி!

தோல்வி யாருக்கு?

[பேனாமுனை]



தாழ்வுற்று வறுமை மிஞ்சி, விடுதலை தவறிக் கெட்டுப் தன்னை வாழ்விக்க வந்த மகான் காந்தியின் அரசியல் காலத்திலேதான் நம் ‘பர்மா நாடு’ தோன்றியது!

காந்தி யுகத்தில் பிறந்த ‘பர்மா நாடு’, காந்தீய வழியில் நின்று ‘காந்தீயம்’ பர்மாவிலும் பரவ அரிய பணிகள் பல ஆற்றியிருக்கிறது. காந்தியடிகளின் ஒத்துழையாமைத்திட்டம்—சத்தியாக்ரகப்போராட்டம் நாடெங்கும் பெரிய பரபரப்பை—சீறும் புயலை—குமுறும் கடலை—கக்கும் எரிமலையை உண்டாக்கியது. கொழுந்து விட்டெரிந்த புரட்சித்தீயைக்கண்ட பிரிட்டிஷ் அரசாங்கத்தின் சூழ்ச்சிகளும், தந்திரங்களும் எதிர்பாராத விதமாகப்பலிக்காது தகர்ந்துவிட்டன. அவமானத்தால் நாணியது அரசாங்கம். ஆணவத்தின் உச்சியிலே, அதிகாரத்தின் சிகரத்திலே வீற்றிருந்த பரங்கியர் அரசு, கேவலம் ஏடு தூக்கிப் பள்ளி செல்லும் சிறுவர்களின் கிண்டலடிக்குக்கூட ஆளாகியது. இப் புரட்சிகரமான போராட்டத்தைப் பின்பற்றியே பர்மாவிலும் ‘மாணவர் மறியல் புரட்சி’ உருவானது. இப்புரட்சியில் உதயமான தலைவர்களே நமது போஜோ அவுங்சானும், பிரதமர் ஊ நூவும் ஆவார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இப்போராட்டத்தின் இறுதியில் வெற்றி காணாதபோதிலும், இந்திய—பர்மிய மக்கள் இனி அஞ்சாது சுதந்திரப்போரில் இறக்கவும் துணிந்துவிட்டார்கள் என்பதை இந்திய—பர்மியத்தலைவர்களுக்கு காந்தி அண்ணல் தெளிவாக விளக்கிவிட்டார்.

1798-ல் நடந்த போராட்டம், மக்கள் போராட்டமாக நடந்ததும், உயிரைத்திரணாக மதித்துப் போராடினர். ‘முதல் முழக்கம்’ செய்த பாஞ்சை வீரன்—குறுநில மன்னன் வீரபாண்டியக்கட்டபொம்மன் தான் அண்டிப்பிழைக்க வந்த அந்நியர்க்கு வீணில் வரிகட்ட மறுத்த தியாகச்செம்மல். ‘வானம் பொழியுது, பூமி விளையுது; மன்னவன் காணிக்கு ஏது திறை?’ என்று முகத்தில் ‘பளார்’ என்று மிளாரால் அடித்ததுபோல், அடித்துப்பேசி—தீரமுடன் போர்புரிந்து—வெள்ளையரின் இரும்புப்பிடியில் சிக்கி முக மலர்ச்சியுடன் தூக்குமேடை ஏறிய வீரபாண்டியக் கட்டபொம்மனின் போர் முறிந்து, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் வேரூன்றிய ஒரு நூற்றாண்டு கழிந்த பின்னர்தான் காந்தி மகான் தோன்றி மக்களைப்பரீட்சை பார்த்த காலம்.

விஷப்பரீட்சையில் மக்கள் தேறிவிட்டனர் என்பதற்கு அறிகுறியாக நாடெங்கும் ‘அச்சமில்லை! அச்சமில்லை!! உச்சிமீது வானிடிந்து வீழ்கின்றபோதிலும், அச்சமில்லை! அச்சமில்லை! அச்சமென்பதில்லையே!’ என்றெல்லாம் எழுகோடி கிராமங்களின் மூலை முடுக்குகளிலும் பெருங்குரலாக எதிரொலித்தது. அண்ணல் தொடுத்த அறப்போர், அணுக்குண்டையும்விட

வலிமைபெற்றது என்பதை மகான் காந்திஜி யைத்தவிர மற்றையோர் உணரமுடியாத உண் மையாகும்! ஆயிரமாயிரம் அணுசக்திகள் புரி யும் ஆர்ப்பாட்டங்களைவிட இது வன்மை மிக்க ஆயுதம் என்பதை சரித்திர வரலாறு விளக்கும்!

ஒத்துழையாமை என்னும் சத்தியாக்ரகம் மூலம் மக்களிடையே வலிமை, வீரம், அறிவு, ஆற்றல் எல்லாம் பெருகியது! இவற்றிற்கும் மேலாக எதிரியிடம் 'அன்பு' காட்டும் தனிப் பண்மை—கருணை உள்ளத்தைக்கண்ட பிரிட் டிஷ் அரசாங்கமே ஒருங்கே வியப்பும், திகிலும் அடைந்தது!

இடைக்காலமான 1939-ல் இரண்டாம் உலகமகா யுத்தம் ஏற்பட்டது. சூழ்நிலையை உணர்ந்த பரங்கியப்படைகள் ஆட்டங் கண்டு போயின. பிரிட்டிஷ் மானத்தைகாக்க சர்ச்சில் அமெரிக்காவிடம் உதவி தேடி ஓடினர். கிரிப்ஸ் ரஷ்யாவிடம் 'காவடி' எடுத்தார். இட்லர் படை யெடுப்பில் 'ஐரோப்பா' பட்டபாடு ஈண்டு எழுதிமுடியாது! கடலாதிக்க இறுமாப்பில் திமிருடன் வீற்றிருந்த பிரிட்டன் மீது ஜெர்மன் விமானங்கள் சீறிப்பாய்ந்தன விமானிகள் இல்லாத இராட்சச விமானங்கள் குண்டு மழை பொழிந்தன. பிரிட்டன், வீழ்ந்துபடும் நிலை கண்டு வெருண்டது. பேராபத்தில் சிக்கிய பரி தாபகரத்தைக்கண்டு பேரச்சம்கொண்டது! 'தப்பினுல் தம்பிரான் புண்ணியம் என்ற எண் ணத்துடன் பிரிட்டிஷார் தனது வழக்கமான பிரித்தாளும் சூழ்ச்சியால் ரஷ்யாவையும், ஜெர் மனையும் மோதவிட்ட போராட்டத்தின் மூலம் பிரிட்டிஷார் மூச்சுவிடமுடிந்தது. அதற்குப் பின் நடந்த சம்பவம் எல்லோருக்கும் நினைவு இருக்கும்.

இவ்வாறு இட்லர் பிரிட்டனைப்பதம்பார்த்த போது—டோஜோ, அமெரிக்காவை ஆழம் பார்த்துவிட்டார். முன்பின் அறிவிப்பு இன்றி ஜப்பான், அமெரிக்க ஆதிக்கத்தை எதிர்பாராத மின்னல்வேகத்தில் கடுமையாக தாக்கிவிட்டது! ஏககாலத்தில் ஜப்பான், அமெரிக்காவையும் பிரிட்டனையும் எதிர்த்து 1941-டிசம்பர் 6-ம் நாள்போரில் இறங்கியதையும் அதன்பின் நிகழ்ச் சிகளையும் மக்கள் அறிவர். இனி நமது 'பர்மா நாடு' பத்திரிகை பர்மாவில் பிரிட்டிஷ் சர்க்கார் சரித்திரத்தின் ஒரு பகுதியில் இடம்பெற்ற கதைக்கு வருவோம்!

ஐரோப்பா யுத்தம் ஆரம்பமானபின் இந்தி யாவைப்பின்பற்றி பர்மாவிலும் அரசியல் கொந் தளிப்பு ஏற்பட்டது. இதைச்சமாளிக்க பிரிட் டிஷ் பாராளுமன்றத்தின் அங்கத்தினரும், உதவி அமைச்சராக இருந்து ஆட்சிமுறையில் நல்ல அநுபவம் பெற்றவருமான சர் டார்மன் ஸ்மித் 1941-ம் ஆண்டின் துவக்கத்தில் புதிய கவர்ன ராக வந்து சேர்ந்தார். கவர்னர் பதவி ஏற்ற தும், ஆரம்பதில் சில நல்ல அறிகுறிகள் தோன் றின. ஆயின் ஆட்சிமுறையில் கவர்னருக்கு யதேச்சதிகார உரிமைகள் பல இருந்தாலும் சிவில் சர்வீஸ் (ஐ. சி. எஸ்.) பிரிட்டிஷ் அதிகாரி களின் ஆட்சியில் குறுக்கிடமுடியாது. இவர்கள் தான் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் இரும்புத் தூண்கள்! இந்தச் சூழ்நிலையில் பெயருக்காக சோளக்கொல்லைக்காவற் பொம்மை போன்ற அமைச்சர்களைக்கொண்ட 'மந்திரிசபை'யும் இருந்துவந்தது. பதவி மோகத்தால் பிரிட்டிஷ் சர்க்காருடன் ஒத்துழைக்க முன்வந்தவர்கள் தானே!

1941-ல் அமைச்சராயிருந்தவர் மியோ—சிட்' கட்சித்தலைவர் ஊசோ. இவரைக் 'கலூன் ஊசோ' என்றும் அழைப்பதுண்டு. இதற்கு முன்னர் பல மந்திரி சபைகளைக்கவிழ்க்க உதவிய பின்னர் தமே பிரதமர் பதவி ஏற்றவர். ஐரோப்பா யுத்த நெருக்கடியின்போது பர்மா சுதந்திரம் குறித்துப்பேச்சுவார்த்தை நடத்த ஊசோ லண்டன் செல்வதாகக்கூறிச்சென்றார். லண்டனில் இவர் ஜப்பான் தூதுவரிடம் கள்ளத் தனமாக நட்பும், பேச்சுத்தொடர்பும் கொண் டார் என்பதைக்கருதி பிரிட்டிஷ் சர்க்கார் இவரைக்கைதியாக்கி தென் ஆப்பிரிக்காவுள்ள உகாண்டாவில் பந்தோபஸ்துடன் சிறை வைக் கப்பட்டார். ஜப்பான் சரணடைந்த பலமாதங் களுக்குப்பின் விடுதலையாகி பர்மா வந்தபோது மீண்டும் தம் சதிகார சூழ்ச்சிகளில் இறங்கி விட்டார். இன்று சுதந்திர சர்க்காரை பிரதமர் ஊ நு தலைமையில் அமைத்துள்ள ப. ஸ. ப. லா.

கட்சியின் தலைவராக இருந்த மேஜர் ஜெனரல் அவுங்சான் கவர்னர் சர். டார்மன்ஸ்மித்துடன் பேசிய மந்திரிசபை அமைப்பு முறிந்தது, இத் தருணத்தில் ஜெனரல் அவுங்சானுக்கு ஆதரவளித்து நின்ற 'மியோச்—சிட்' கட்சித்தலைவர்களான ஊ—பா—ஓன், ஊ—யே இருவரும் இரகசியமாக கவர்னர் அமைத்த கவுன்சிலில் இடம்பெற்றுவிட்டார்கள். ப. ஸ. ப. லா. கட்சியின் ஆதரவற்ற முறையில் சர்—பாட்டுன் தலைமையில் கவர்னர் கவுன்சில் அமைந்தது. இதை வன்மையாக எதிர்த்து, மக்களின் சர்வ கட்சிப்பிரதிநிதித்துவம் பெற்ற மேஜர் ஜெனரல் அவுங்சான் தலைமையை மறுக்கும் கவர்னருடன் ஒத்துழைக்க மறுத்துவிட்ட நெருக்கடியில் சர். டார்மன்ஸ்மித் பதவியைத்துறந்து செல்ல, இதற்குமுன் இராணுவ பரிபாலனம் செய்துவந்த சர் ரான்ஸ் கவர்னரானதும்—பர்மாவின் அரசியல் சூழ்நிலையை உணர்ந்து மேஜர் ஜெனரல் அவுங்சான் கேட்ட சில நிபந்தனைகளுக்கு இணங்க, மந்திரி சபை அமைந்தது. இந்தச் சமயத்தில் ஊசோ மீண்டும் தனது சதித்திட்டங்களை வகுத்து 1947-ல் ஜூலை 19-ல் ஒரே மூச்சில் 'சுதந்திர பிதா' அவுங்சானையும், இதர ஆறு மந்திரிகளையும் சுட்டுக்கொன்ற சதி வழக்கில் தூக்கில் மாண்டார், இவ்வாறு மாஜி பிரதமர் ஊசோ வாழ்வு முடிந்தது!

நமது பிரஸ்தாப வழக்கு 1941-ல் ஊசோ பிரதம மந்திரி பதவிவகித்த காலத்திலே தான் ஏற்பட்டது என்பதையும், இவரவு சகா ஊயே உள்நாட்டு மந்திரியாக இருந்தார் என்பதையும் ஞாபகமூட்டவே மேலே குறிப்பிட்ட சம்பவங்களை நாம் விரிவாக விளக்க நேரிட்டது. ஊயே 1941-ல் உள்நாட்டு மந்திரியாக இருந்தபோது, சிறகுமுறிந்த பறவைபோன்றே பதவி வகித்தார். போலீஸ் பிரதம அதிகாரிகளும், ஐ. சி. எஸ் அதிகாரவர்க்கமுமே ஆட்சி நடத்தியதின் காரணமாகவே நம்மீது வழக்குத்தொடரப்பட்டது. வழக்கை அக்காலத்தில் போலீஸ் கமிஷனராக இருந்த மிஸ்டர் ஆர். ஜி. பி. பிரஸ்காட் பதிவு செய்தார். இவர் நல்ல திறமைசாலி; ஆனால் பிடிவாதம் மிகுந்தவர். 'பர்மா நாடு'வின் செல்வாக்கிலும் அடிக்கடி சர்க்காரின் செயல்களை கண்டித்து அழுத்தம் திருத்தமாக எழுதிவந்ததால் 'பர்மா நாடு'வுக்கு சோதனைகள் பல ஏற்பட்டதென்றாலும் அசைக்கமுடியவில்லை.

நம் பத்திரிகை வழக்கின்போது இன்னும் சுகஜீவியாயிருக்கும் ஜில்லா மாஜிஸ்ட்ரேட் ஊபாத்துவே (எ) ஏ. டி. எம். அவர்கள் நம்மீது அன்பும் மரியாதையும் கொண்டவர். இரட்டை ஆட்சியில் பாதுகாப்புச்சட்டம் என்ற யதேச்சதிகாரம் மிகுந்த சர்வாதிகார சட்டத்தின் கீழ் நீதி, நியாயம், நெறி, வரம்பு, என்பதெல்லாம் நிலைக்கமுடியாமல் எல்லை மீறியவை! இதற்குச் சாதகமாக ஐரோப்பா யுத்தமும் கிழக்காசியாவில் ஏற்பட்ட அரசியல் விழிப்பும், இந்தியாவில் ஏற்பட்ட கொந்தளிப்பும் காரணங்களாக அமைந்தன.

யுத்த அரங்கில் முதன் முறையாக பிரிட்டன் மீது ஜெர்மன் விமானங்கள் வெடிக்குண்டுகளை வீசின. அதுவரை பிரிட்டன் யுத்தத்தின் தாக்குதலுக்கு ஆளாகும் என்றும் எதிர்பார்க்கவே இல்லை. கடல்தரை-ஆகாயம் மார்க்கமாக எவ்வகையிலும்பிரிட்டனுக்குள் விரோதி நுழைய முடியாது என்றே கற்பனையில் மூழ்கியிருந்த பிரிட்டிஷார், பிரிட்டன் மீது ஜெர்மன் வெடிகுண்டு என்றவுடன் அலறிவிடவில்லை. என்றாலும் இச்செய்தி சுதந்திரம் வேண்டுமெனத்துடிக்கும் மக்கள் வாழும் நாடுகளில் பரவிவிட்டால் பிரிட்டனுக்குள்ள 'மதிப்பு'க் குன்றிவிடும் என்ற திகில் இந்த ஐ. ஸி. எஸ். அதிகாரிகளுக்கு உள்ளூர இருந்துவந்தது.

இருப்பினும் பிரிட்டிஷ் தற்காப்பு அமைச்சர் அதிகாரத்துடன் வெளியிட்ட தந்திச்செய்தியை எல்லா பத்திரிகைகளைப்போலும் 'பர்மா நாடு'ம் பிரசுரித்தது!

★

நுண்ணறிவு அன்புடன் சேர்ந்துவிட்டால் அதனால் அடைய முடியாதது எதுவும் அவனியில் கிடையாது.

—"கதே"

வெளியிட்ட செய்தி இதுதான்:

பிரிட்டன் மீது ஜெர்மன் வெடிகுண்டு வீச்சு !

ஆறு பேர் மரணம்; அறுபது பேர் காயமுற்றனர்

GERMAN AIR-RAID OVER BRITAIN

6 KILLED ; 60 INJURED.

இச்செய்தி இரங்கூனில் அதுபோழ்து ஆங்கிலத்தில் வெளிவந்த **'ரங்கோன் கெஜட்,' 'ரங்கோன் டெய்லி நியூஸ்,' 'ரங்கூன் டைம்ஸ்'** ஆகிய தினசரிகளிலும், பர்மிய மொழியில் **'நியூலைட் ஆப் பர்மா,' 'ஸன்'** போன்ற பத்திரிகைகளிலும் பிரசுரமாயிற்று. இதேசெய்தி அகில இந்தியாவிலும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் எங்குமுள்ள பத்திரிகைகளிலும் வெளிவந்தது. அங்ஙனமிருந்தும் சுதந்திர மக்களின் எழுச்சி முரசாக எதிரொலித்த **"பர்மா நாடு"மீது மட்டும் பிரிட்டிஷ் சர்க்கார் பாணம் தொடுத்தது !**

நம்மீது தொடர்ந்த வழக்கிற்கு, வேடிக்கையான வியாக்கியானம் கூறப்பட்டது. நாம் பிரசுரித்தது நமது அபிப்பிராயமோ, அல்லது பொய்யான செய்தியோ அன்று! ஒருவகையில் அரசாங்கத்தை எதிர்த்துப் புரட்சிசெய்வோரின் செய்தியுமல்ல! மேலும் ஹிட்லரோ அல்லது டோஜோவோ அனுப்பிய இரகசியச் செய்தியுமன்று! இந்தச்செய்தி பிரிட்டிஷ் சாம்ராஜ்ய யுத்தப் பாதுகாப்பு மந்திரியின் அரசாங்க அறிக்கை. பிரசுரமான செய்தியின் மொழி பெயர்ப்பிலும் தவறு இல்லை. அப்படியானால் இச்செய்திமீது வழக்குத்தொடரக் காரணமென்ன? இதுதான் நமக்கு விளங்காத புதிர். பழி ஒருபக்கம்; பாவம் ஒரு பக்கமாக நிகழ்ந்தது. இச்செய்தியை வெளியிட்ட இரங்கோன் பத்திரிகைகளை எல்லாம் விடுத்து நம்மீது மட்டும் வழக்குத்தொடர்ந்தது வேடிக்கையும், வினோதமுமாகும்! அதனால்தான் இது பிரிட்டிஷ் சர்க்காரின் வழக்குச் சரித்திரத்தில் இடம்பெறும் அளவில் முடிந்தது. 'பர்மா நாடு'மீது தொடுத்த வழக்குகளைப் போன்ற அவலம் நிறைந்த முறையில் எவ்வாறு இங்கு விசாரணைகள் நடத்தப்படுகிறது என்பதற்கு அத்தாட்சியாக மிஸ்டர் காலின்ஸ் (ஐ. ஸி. எஸ்) என்பவர் எழுதிய [TRIALS IN BURMA] என்ற புத்தகமே அத்தாட்சியாகும். இவர் சுமார் 23 வருடங்கள் பர்மா சர்க்காரில் பதவி ஏற்று பின்—வெறுப்போடு தனது ஐ. ஸி. எஸ். பதவியை ராஜினாமா செய்துவிட்டு வெளியேறினார். இவர்தான் நமது தேசப்பிரியா கே. எம். சென்குப்தா அவர்களை விசாரித்து ஒரு வார வெறுங்காவல் தண்டனை விதித்துப்போட்டு—நம் வங்கத்தின் வைரமணி பெருந்தகை சிறை சென்றதும் உடன் ஓடோடி கட்டிப்பிடித்துத் தழுவியது ஏன்? ஒன்று, அவர்கள் இருவரும் பால்ய சிநேகிதர்கள் என்பது; மற்றொன்று சிறந்த தேசபக்தனை வீணாகத் தண்டிக்க "தான்" காரணமானது! ஒன்று அல்லது இரண்டு வருட கடுங்காவல் தண்டனை விதிக்கவில்லை என்று அன்றைய அரசாங்கம் மிஸ்டர் காலின்ஸ் மீது வெருண்டு பாய்ந்தபோது, உடனே தம் பதவியைத் துச்சமாகக் கருதி, ராஜினாமாச் செய்து வெளியேறினார். நமது தேசப் பிரியா—வங்கம் தந்த சிங்கம் ஜே. எம். சென்குப்தாவுக்கும் மாஜி ஜில்லா மாஜிஸ்டிரேட் மிஸ்டர் காலின்சுக்கும் 'பர்மா நாடு' வுக்கும் உள்ள தொடர்பு பற்றி பல ருசிகரமான விபரங்களைப் பின் வெளியிடுகிறோம்.

ஜில்லா மாஜிஸ்டிரேட் முன் வழக்குப் பதிவாகிவிட்டது. இதற்காகப் "பர்மா நாடு" அஞ்சவில்லை, மலைபோன்ற துணிச்சலோடு மன்றம் ஏறி விசாரணை நடத்த விரும்பியது. இனி இந்த மாதிரி எழுதுவதில்லை' என்று வாக்குறுதி அளிக்கும் நிபந்தனையில் இந்த இரும்புப் பிடியினின்றும் தப்பித்துக்கொள்ளலாம் என்று உள்நாட்டு மந்திரி ஊயே அவர்களால் நமக்கு உபதேசிக்கப்பட்டது. எனினும் 'பர்மா நாடு' முன் வைத்த காலைப் பின்வாங்கவில்லை! இதற்கு முன்னர் எத்தனையோ உருட்டலுக்கும், மிரட்டலுக்கும் அஞ்சாத நாம் நேரிலேயே போலீஸ் கமிஷனரிடம் சென்று இது முடியாது என்று ஒரே வார்த்

தையில் பேச்சை முறித்துக்கொண்டோம். மாஜிஸ்டிரேட்டிடமிருந்து உடனே 'பிடி' வாரண்ட் கோரப்பட்டது! பர்மிய மாஜிஸ்டிரேட்டோ ஓரளவில் வழக்கின் போக்கை யறிந்து "வாரண்டு"க்குப் பதில் 'சம்மன்' அனுப்ப இசைந்தார்.

இச்சேதி பர்மா பத்திரிகை உலகமெங்கும் காட்டுத் தீபோல் பரவிட்டது. அதனல் நமது 'டெலிபோனு'க்கு தீராத தலைவலி ஏற்படும் அளவில் சதா கண, கணத்துக்கொண்டேயிருந்தது, ஓய்வு ஒழிச்சலின்றி!

இன்று பிரதமர் ஊநு சர்க்காரின் பொக்கிஷ மந்திரியாக இருந்துவரும் கனம் ஊட்டின் அவர்கள் அக்காலத்தில் பிரபல பர்மிய தினசரியான 'நியூ லைட் ஆப் பர்மா" வின் ஆசிரியராகப் பணியாற்றி வந்தார். ஊட்டின் அவர்கள் உள்பட ஏனைய பர்மியப் பத்திரிகை ஆசிரியர்கள் எல்லோரும் ஒருங்கே "பர்மா நாடு" மீது அன்பும், ஆதரவும் காட்டினர். உடனே நேரில் நீதிபதியிடம் ஆஜராகி ஜாமீன் பெற்றேம். பர்மா சர்க்காரின் பாதுகாப்புச் சட்டத்தின் பெயரால் பத்திரிகை மீது தொடர்ந்த முதல் வழக்கின் பெருமை "பர்மா நாடு"க்கே கிடைத்தது! அது குறித்து நீதி மன்றத்திலிருந்து மகிழ்ச்சியோடு திரும்பினேம்!

இறுதியில் இதே வழக்கு தான் முன்னளில் பர்மாவில் பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் பத்திரிகைகள் மீது தொடுத்த கடைசி வழக்காக முடியும் என்று அன்று பிரிட்டிஷ் சர்க்கார் எதிர்பார்க்கவில்லை. ஏன்? யாருமே எதிர்பார்த்திருக்கமாட்டார்கள்!

வழக்கு விசாரணை சில தினங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டது. வழக்கை துரிதமாக நடத்தி முடிக்க இருதரப்பிலும் விரும்பப்பட்டது. பல பெரும் வழக்கறிஞர்களும் நீதிமன்றத்தில் கட்டணமின்றி ஆஜராகி நம் பக்கம் விவாதிக்க முன் வந்தனர். அவர்களில் சில அன்பர்களைக் குறிப்பிடாமலிருக்க முடியாது. நம் பிரதமர் நேருஜீயின் அந்தரங்க அன்பிற்குரியவரும், மாஜி சுப்ரீம் கோர்ட் நீதிபதியுமான பாரிஸ்டர் ஊச்சோ—மிண்ட், மாஜி மேயரும் அக்காலத்தில் இந்தியத் தலைவர்களில் ஒருவருமான பாரிஸ்டர் மிஸ்டர் எம். எம். ரபீ; மற்றும் இன்றைக்கும் பொதுஜன வாழ்வில் சிரத்தையுள்ள பிரபல அட்வொகேட்டுகளான மாலிக்ராம், பி. ஜி. சுந்தரம், பி. கே. தாதாஸான்ஜி, எஸ். ஏ. ஆறுமுகம் பிள்ளை, மற்றும் இன்று வர்த்தக இலாகா மந்திரியாக விளங்கும் கனம் எம். ஏ. ரஷீத், பி. ஏ. பி. எல். ஆகியவர்களாகும். சர்க்கார் தரப்பில் காலஞ்சென்ற பாரிஸ்டர் ஊபாட்டுன் ஆஜரானர். வழக்கு விசாரணை நாளும் வந்தது. நீதிமன்றத்தில் எள் விழ இடமில்லாதவாறு மக்கள் திரள். எல்லோரும் வழக்கு விசாரணையை ஊன்றிக் கவனித்தனர்.

பிரிட்டிஷ் பர்மா சர்க்கார் தரப்பில் போலீஸ் கமிஷனரே நேரடியில் கூண்டிலேறி சாட்சியம் கொடுத்தார். பிரஸ்தாபச் செய்தி மக்களிடையே பயத்தையும் பீதியையும் உண்டாக்கக் கூடுமென்று தாம் நம்புவதாகக் கூறினர். வழக்கத்திற்கு நேர் மாற்றமாக கமிஷனர் இரண்டு முறைகளில் விசாரிக்கப்பட்டார். விறுவிறுப்பாகவே குறுக்கு விசாரணைகளும் நடந்தன! அரசியில் வழக்காக இருந்தாலும் சாட்சியம் கொடுக்க வந்தவர் நகரப் போலீஸ் இலாகாவின் பிரதம அதிகாரி என்ற ரீதியிலும் சாற்றிய குற்றம் வேடிக்கையாக இருந்தாலும் நம் வழக்கறிஞர்கள் சரமாரியாக கேள்வி மேல் கேள்விகளைக் கேட்டார்கள். நமது வழக்கறிஞர் திரு மாலிக்ராம் ஒரு கேள்வியில் "இத்தகைய பிரஸ்தாபச் செய்தியால் பிரிட்டிஷ் சாம்ராஜ்யமே மூழ்கிவிட்டதாக தங்கள் கருத்தா?" என்று கேட்டார். பதில் இல்லை!

இந்தப் பிரஸ்தாபச் செய்தியால் யாரும் பீதியோ, கலக்கமோ அடையவில்லை என்பதற்கு பலதரப்பட்ட மக்களின் சாட்சியங்களும் பதிவாகின. நாம் சாட்சியம் கூறவேண்டும் என்று கேட்ட கனவான்கள் எல்லோரும் பொறுப்புடனும், அச்சமின்றியும் முன் வந்தனர். பர்மியப் பத்திரிகைகள் இந்த வழக்கின் விபரங்களை விளக்கமாக வெளியிட்டன. இறுதியில் வழக்கறிஞர் மிஸ்டர் மாலிக்ராம் தம்முடைய விவாதத்தில் பிரிட்டிஷ் சர்க்கார் அந்நிய நாட்டை அடக்கி ஆளவேண்டும் என்ற நோக்கத்தில் பர்மா பாதுகாப்புச் சட்டமும், குறிப்பாக

பத்திரிகைகளின் எழுத்துச் சுதந்திரத்தை அழித்து ஒழிப்பதற்கென்றே இந்த உப–விதியும் சட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறதென்றும், இந்த வழக்கின் முடிவு எதுவாக இருந்தாலும், இது பிரிட்டிஷ் சர்க்காரின் நீதி பரிபாலனத்திற்கே ஒரு கறை—மாசு—என்றும் கூறிமுடித்தார்.

சர்க்கார் எதிர்வாதம்

வழக்கின் ஆரம்ப முதல் இறுதி வரையிலும் பொறுமையோடு—ஆனல் வழக்கின் எதிர்வாதங்களில் சிரத்தையின்றி இருந்த பாரிஸ்டர் ஊபாட்டுன், பர்மா பாதுகாப்புச் சட்டப் புத்தகத்தைக் கையில் எடுத்துக்கொண்டு குறிப்பிட்ட உப—விதிப் பகுதியை ஒரு நிமிடத்தில் பிரித்து சட்டத்தைப் படித்தார். அது பின் வருமாறு:

"ஆட்சேபிக்கப்படும் பிரஸ்தாபச் செய்தி திகிலையும் பீதியையும் மக்களிடையே உண்டாக்கலாம் என்று போலீஸ் கமிஷனர் **நினைத்தால்** எதிரி குற்றவாளியாகிறார்" என்றிருந்தது. போலீஸ் கமிஷனரும் தமது விசாரணை வாக்குமூலத்தில் "பிரஸ்தாபச் செய்தி மக்களை கலவர நிலைக்குள்ளாக்க முடியும் என்று தாம் நினைப்பதாகக் குறிப்பிட்டிருந்ததை மட்டும் அழுத்தமாகக் கூறிவிட்டு அமர்ந்துவிட்டார்.

மறுநாள் மாஜிஸ்டிரேட் பிற்பகல் 2 மணிக்குத் தீர்ப்புக் கூறுவதாகக் கூறினர். அது போன்றே அடுத்த நாள் தீர்ப்பு வழங்கப்பட்டது. தீர்ப்பில், பர்மா பாதுகாப்புச் சட்டத்தின் உப–விதியின்படி நாம் குற்றவாளி எனக் கூறி, **'கோர்ட் கலையும் வரை சிறைவாசமும், அபராதம் ரூபாய் 100-ம் கட்ட வேண்டியது'** என்று தெரிவிக்கப்பட்டது. 'கோர்ட் கலையும் வரை' என்பதைக்கருத்தில் கொண்டு, மறுநிமிடமே கோர்ட்டைவிட்டு வெளியேறிவிட்டார், நீதிபதி! (நம் மீதும், 'பர்மா நாடு' மீதும் மதிப்புக் கொண்டிருந்ததே நீதிபதியின் இச்செயலுக்குக் காரணம் என்பதை இங்குக் குறிப்பிடத் தக்கது!) நீதிபதி ஆசனத்தைவிட்டு எழுந்தவுடன் நமது சிறைவாசமும் பூர்த்தியாகிவிட்டது. மறு கணமே மகிழ்ச்சியுடன் அபராதத்தைக் கட்டிவிட்டுத் திரும்பினேம். அடுத்த நாளே அப்பீல் செய்ய முயற்சித்து, அப்பீலை மிஸ்டர் எம். எம். ரபி (பாரிஸ்டர்) அவர்கள் தயாரித்து, அக்காலத்தில் ஐகோர்ட்டில் கிரிமினல்–சிவில் வழக்குகளில் 'புலி' என்று நன்கு மதிக்கப்பட்டவரும், குற்றவாளிகள் கண்டு அஞ்சும் அளவில் பாரபட்சமின்றி நீதி செலுத்திய ஜஸ்டிஸ்—டன் கிலி (பாரிஸ்டர்) ஐ. சி. எஸ். அவர்களிடம் அப்பீல் மனுவைச் சமர்ப்பித்து ஒப்புக்கொள்ளச் செய்தார். ஆனல் வழக்கை விசாரிக்க முடியாதவாறு பிரிட்டிஷ் அரசாங்கமே ஒரே மூச்சில் 21-2-42ல் இரங்கோன் நகரையும், அதனைத் தொடர்ந்து இரண்டொரு மாதங்களில் பர்மாவையும் ஜப்பானியா கையில் ஒப்படைத்துவிட்டு வெளியேறிவிட்டனர்.

இந்தியாவில் எதிரொலி!

பர்மாவில் 'பர்மா நாடு' மீது தொடுத்த வழக்கின் தீர்ப்பு இந்தியாவிலும் எதிரொலித்த சம்பவமும், அதனைத் தொடர்ந்து நடந்த சம்பவங்களும் இந்தியப் பத்திரிகை உலகில் சரித்திரப் புகழ் பெற்றதாகும். இன்றைய நம் பிரதமர் நேருஜியின் ஆதரவிலும், பாதுகாப்பிலும் அலகாபாத்தில் நடந்து வந்த "நேஷனல் ஹெரால்டு" (NATIONAL HERALD) என்ற ஆங்கிலப் பத்திரிகையை பிரபல ஆசிரியர் திரு. ராமாராவ் என்பவர் நடத்திவந்தார். நெருப்புப்பொறி பறக்க எழுதக்கூடியவர். இப்பத்திரிகையின் முன் பக்கத்தில் ஏதோ ஒரு செய்தியைக் கொட்டை எழுத்துக்களில் தலைப்புக்கொடுத்து பிரசுரமாக்கியதை ஆட்சேபித்து,—'பர்மா நாடு' மேல் தொடர்ந்த வழக்குப்போல- அலகாபாத் மாஜிஸ்டிரேட் ஜாமீன் கோரினர். இச்செயலையும் 'பர்மா நாடு' மீது பிரிட்டிஷ் சர்க்கார் தொடுத்த செயலையும் கண்டித்து–அகில இந்தியப் பத்திரிகாசிரியர்கள் மாநாட்டில் ஒரு கண்டனத்தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

பர்மாவில் ஆத்திரம்:

இவ்வாறு இந்தியாவில் இந்தியப்பத்திரிகைகளின் ஏகக்குரலால் ஏற்பட்ட கண்டனத்தை பர்மா பிரிட்டிஷ் அரசாங்கத்தால் சகிக்கமுடியவில்லை. இதற்கிடையில் நம் வழக்கும் முடிந்தது. தீர்ப்பைக் கேள்வியுற்ற இந்திய ஆங்கிலப் பத்திரிகைகளில் சுதந்திரப்போர் முனையில் எக்கா

லத்திலும் முன்னணியில் நின்றுள்ள "அமிர்த பசார்" பத்திரிகையில் அதன் ஆசிரியர் திரு. துஷார் காந்தி கோஷ் அவர்கள் பர்மா சர்க்காரின் தீர்ப்பை வன்மையாகக் கண்டித்துத் தலையங்கம் எழுதியிருந்ததை கண்டதும் அன்றைய பிரிட்டிஷ் அதிகார வர்க்கத்தினர் ஆத்திரமும் கோபமும அடைந்துவிட்டனர் தலையங்கத்தில் தெளிவாக ஆங்கிலத்தில் எடுத்துக்கூறியிருந்ததைப் படித்த பிரிட்டிஷ் அதிகாரிகளில் சிலர் வெட்கித்தலைகுனிந்ததோடு, 'பர்மா நாடு' மீது இத்தகைய வழக்குத் தொடுப்பதற்கான எத்தகைய காரணமும் இல்லையே என்று அங்கலாய்த்துக் கூறினர். இருந்தாலும் தங்கள் நீதி பரிபாலனத்தின் 'திராசு'—அளவுகோல் மீது களங்கம் கூறி தாக்கி எழுதிய வங்கப் பத்திரிகையின் இதழ்களைப் பறிமுதல் செய்ய உத்திரவிட்டனர். பறிமுதலாவதற்குள் பத்திரிகைகள் ஜில்லாப்புறங்களுக்கு தபால் மூலம் பட்டுவாடா ஆகிவிட்டது.

இதற்கிடையில் நமக்கு இச்செய்தி விரைவாக எட்டியது. ஆனல் பத்திரிகைமட்டும் கிடைக்கவில்லை. என்பினும் அக்காலத்தில் பாசீன் நகரில் பிரபல வழக்கறிஞராக இருந்த மிஸ்டர் டட் அவர்கள் 'அமிர்த பசார்" பத்திரிகையில் பர்மா சர்க்கார் "பர்மா நாடு" மீது தொடுத்த வழக்குத் தீர்ப்பின் முடிவைக் கண்டித்து எழுதியிருந்ததைக் கண்டவுடன் உடனே நமக்கு அனுப்பி "அமிர்த பசார்" பத்திரிகையின் தலையங்கத்தில் "பர்மா நாடு" இடம் பெற்றது பெருமைபடத்தகும் சம்பவமென்று குறிப்பிட்டு அருமையாக நம்மைப் பாராட்டி ஊக்கமளித்த அந்த அன்பரை இன்றும் நம்மால் மறக்கமுடியாது. இது விரிக்கின்பெருகும். ஆனல் இரங்கூனில் மட்டும் கிடைக்கவில்லை "அமிர்த பசார்" பத்திரிகையின் தலையங்கத்தில் "பர்மா நாடு" இடம் பெற நேரிட்டதே. "பர்மா நாடு பெற்ற வான்புகழ்" என்று சிறப்பித்துக்கூறலாம்.

இறுதியில் நடந்ததென்ன ?

நம்மீது காரணமின்றி வழக்குத் தொடர்ந்த பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் என்ன ஆனது? "பிரிட்டிஷ் சாம்ராஜ்யம்" என்ற வார்த்தையே நமது எட்டிலும் நாட்டிலும் மறைந்துவிட்டது. இன்று இந்தியாவும், பர்மாவும் சுதந்திரம் பெற்ற நாடுகள் ! நாம் இன்று சுதந்திரத் தாய் நாடுகளில் உரிமையோடு வாழ்கிறோம். "பர்மா நாடு" சுவிகார சுதந்திர பர்மாவில் சுதந்திர முரசு கொட்டுகிறது. ஆனல் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமோ வந்தவழியே திரும்பி வெகு காலமாகி விட்டது. **இதில் தோல்வி யாருக்கு ?** என்பதை **மக்கள் மன்றமே** தீர்ப்பளிக்கட்டும் !

—இவை அனைத்தும் நமது ஞாபகக் குறிப்பிலிருந்து எழுதியதாகும்.

தமிழகம் தந்த வாழ்த்துக் குவியல்.

"தமிழகத்துக்குப் பாலமாகத் திகழட்டும் 'பர்மா நாடு'.

—ஸி. ஸ்ரீநிவாஸன்,
"சுதேசமித்திரன்"

"நிறுத்திவைக்கப்பட்ட 'பர்மா நாடு' மீண்டும் வெளிவர விருப்பது குறித்து மகிழ்ச்சியுறுகின்றேன். கடல்கடந்த பிறமொழி நாடொன்றில் தமிழ் பத்திரிகையொன்று செல்வாக்குடன் உலவுகிறதென்றால் தாய்த் தமிழக மக்களுக்கு களிப்புதானே ! ஆகவே, 'பர்மா நாடு' எல்லா வகையிலும் சிறப்புடன் புகழ் வீசி தமிழர் வாழும் நாடுகளிலெல்லாம் பரவுவதாக ! இப்பத்திரிகையின் பிரதிநிதி திரு. மு. குமார் மிகவும் என்னைக் கவர்ந்துவிட்டார். ஆம்; சில நிமிடப் பேச்சில் ! அவர் மூலம் 'பர்மா நாட்'டிற்கும் பர்மியத் தமிழர்களுக்கும் எனது வாழ்த்து"

—ம. பொ. சிவஞானம்,
(தமிழரசுக் கழகத் தலைவர்), "தமிழன் குரல்" ஆசிரியர்.

"பர்மா நாடு' மீண்டும் பிரசுரமாகப்போகிறது என்று கேட்டு மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். பர்மாவில் வாழும் தமிழர்களின் தேவையை எடுத்துக்காட்டுவதோடு, அங்குள்ள தமிழர்கள் பர்மியருடன் எவ்வாறு பழகிக் கொள்ளவேண்டும் என்பதற்கும் 'பர்மா நாடு' அங்குள்ள நிலைக்குத் தக்கவாறு வழிகாட்டுவதாக. சுபமாகட்டும்".

—ஏ. என். சிவராமன்,
தினமணி ஆபீஸ்.

"பர்மா நாடு" திரும்ப வருவது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். பர்மாவாழ் தமிழர்களுக்கும், இந்தியாவிலுள்ள தமிழர்களுக்கும் உறு சேவை செய்யவேண்டும். கடல் கடந்துள்ள தமிழர்களுக்கு எம்போன்ருர் கூறுகிற அன்பை மனமுவந்து கூறுகிறேன். 'பர்மா நாடு' வாழ்க! பர்மாவாழ் தமிழர்கள் வாழ்க்கை எல்லா வளமும் பெறுக!

எஸ். எஸ் மாரிசாமி,
ஆசிரியர், "பேரிகை".

"ஏழ் கடல் வைப்பினும் தன் மணம் வீசி இசைகொண்டு வாழியவே!"

—சோமு,
ஆசிரியர், "கல்கி,; சென்னை.

"கடல்கடந்து சென்றும் கன்னித் தமிழ் வளர்க்கும் 'பர்மா நாடு' மீண்டும் வெளிவர விருப்பது கேட்டு மிக்க மகிழ்வுறுகின்றேன். அறிவு பெருகி, நெஞ்சு குறுகி வரும் இக்காலத்தில் கலையோடு மொழியன்பு நாட்டன்பு பேணும் கருத்திதழாக 'பர்மா நாடு' விளங்கவேண்டும் என்பதே என் அவா. இதன் ஆசிரியர் டேவிட் அவர்கட்கு தமிழ் நாட்டு மக்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் அவசியம் கிடைக்கும். 'பர்மா நாடு' வாழ்க! தமிழ் வாழ்க!

—அழ. வள்ளியப்பா,
தலைவர், 'குழந்தை எழுத்தாளர் சங்கம்', சென்னை.

"உலக வியலில் ஆங்கிலத்திற்குக் கிடைத்திருக்கும் வாய்ப்பு, நமது தமிழ் மொழிக்கும் வரவேண்டும் என்று ஆசைப்படுபவர்களில் நானும் ஒருவன். இந்தத் தூய–பெரிய–ஆசை நிறைவேறுமா என்று சில நேரங்களில் ஐயுறுவதுகூட உண்டு. ஆயினும் 'பர்மா நாடு' போன்ற பத்திரிகைகள் துவங்குவதாகக் கேள்விப்படும்போது, என் தூய ஆசை நிறைவேறும் என்று நம்பி மகிழ்ந்துகொள்கிறேன்.

வருக 'பர்மா நாடு'! வாழ்க 'பர்மா நாடு'!
பரவுக 'பர்மா நாடு'!

—என். எஸ். கிருஷ்ணன்,
(கலைவாணர்) சென்னை 17,

"மீண்டும் துவங்கும் 'பர்மா நாடு', பர்மாவாழ் தமிழருக்கும் தாயகத்தினருக்குமிடையே தொடர்பேற்படுத்துவதில் தலைசிறந்து நிற்குமென நம்புகிறேன்.

—எஸ். கே. ஜி. அப்துல் காதிர்.
'முஸ்லிம் முரசு' சென்னை.

"என் நாடு என்று எனக்கு ஒன்றும் இல்லை. எல்லாம் எனக்கு ஒன்றுதான். நான் மண்ணுக்கு மதிப்புத் தருவதில்லை. மக்களுக்குத் தாம் மதிப்பு அளிப்பேன். அந்நிலையில் பர்மியர்களின் கருத்தைப் பிரதிபலிக்கும் 'பர்மா நாடு' பத்திரிகைக்கு என் ஊழியம் என்றும் உண்டு. வாழ்த்துவதற்கு வயதானவன் அல்ல நான்! ஆகையால் 'பர்மா நாடு' பத்திரிகைக்கு என்னாலான உதவிகளைச் செய்யக் காத்திருக்கிறேன், என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பர்மா நாட்டில் வாழும் நண்பர்களையும், 'பர்மா நாடு' பத்திரிகைத் தொண்டில் ஈடுபட்டிருப்பவர்களையும் பார்க்கத் துடிக்கும்—"

—தமிழ்வாணன்,
ஆசிரியர், 'கல்கண்டு' சென்னை.

"ஒரு சமூகத்தின் பண்பாட்டை, கலாஞானத்தை, நெறியை, வர்த்தகத்தை நன்கு தெரிந்துகொள்ளவேண்டும் எனில் அங்கே பிரசுரமாகும் பத்திரிகைகளைப் பார்த்தால் போதுமானது. பர்மாவிலே மீண்டும் தொடங்கப்படும் 'பர்மா நாடு' பத்திரிகை தமிழர்களின் பெருமையை நன்கு எடுத்துக்காட்டும் சாதனமாக—மங்கள தீபமாக—திகழும் என்று நான் எதிர்பார்க்கிறேன்".

—ஆர். மகாதேவன்,
(ஆனந்த விகடன்).

"கடல் தாண்டித்திக் கெட்டும் முழங்கவிருக்கும் 'பர்மா' நாடு, இதழில் தமிழின் வளர்ச்சிக்குரிய, தமிழர் தம் வளர்ச்சிக்குரிய பக்கங்கள் பலப்பல ஒதுக்கப்படவேண்டும். தமிழின் வாழ்வில் 'பர்மா நாடு' பெருமிதம் கொள்ளுமென்று நம்புகிறேன்".

—பூவை. எஸ். ஆறுமுகம்,
'உமா' சென்னை.

"பர்மா நாட்"டுக்கு என் மனமார்ந்த வாழ்த்து. தமிழ்ப் பத்திரிகை எங்கிருந்து வந்தாலும் பெருமகிழ்ச்சி தருகிறது. புத்துயிர் பெறும் தமிழ்ப் பத்திரிகையான 'பர்மா நாடு' சிரஞ்சீவியாய் வாழ்ந்து—வளர்ந்து அருஞ்செயல் புரிய வேண்டும்.

—தி. ஜ. ர.,
நிர்வாக ஆசிரியர், 'மஞ்சரி', சென்னை.

கடல்கடந்து தம்திறமை காட்டித் தொண்டு
கையாரச் செய்துபொருள் ஈட்டி வாழும்
அடல்சிறந்த தமிழர்பலர் பர்மா நாட்டில்
அன்புபெரு முயற்சியொடு சார்ந்து நின்றார்
முன்னுளில் உழைப்பவர்கள் வேண்டுமென்று
முன்னிமுயற் சியிற்சிறந்த தமிழர் தம்மை
எந்நாடு போதுமென்றே அழைத்துப் போற்றி
இணங்கிவாழ் தரச்செய்தார் பின்னர் அன்னார்
பல்லினிடை நாக்கு நிற்கும்
இயல்பெனவே வாழ்கின்ற தமிழர் தங்கள்
கவனமுறு நலங்களையே பாது காக்கக்
கவிகின்ற குறைகளையும் எடுத்துச் சொல்ல
அவமதியொன் றில்லாமல் மானத் தோடே
ஆரோடும் ஒன்றிவாழ் வுறவே தத்தம்
குவிகின்ற எண்ணத்தை உணர்த்த அங்கே
குறையிலாப் பர்மாநா டதனைக் கொண்டார்
தமிழினிலே பர்மாநா டென்னும் பேரைத்
தாங்கியபத் திரிகைபல ஆண்டு தொண்டை
அமைதியுறச் செய்துசில கார ணத்தால்
அயர்வாகி நின்றுவிடத் தமிழர் தங்கள்
இமிழ்குறைகளை சொல்லின்றி ஏங்கி ஞர்கள்
இப்போதப் பத்திரிகை மீண்டும் தோன்றிச்
சமைவுறுநற் றெண்டுசெயும் என்று கேட்டேன்
தழைகஉயர்ந் தோங்கவென்று
வாழ்த்தினேனே
இக்காலத்தினிற்பலவும் சொல்லற் கேற்ற
எழிற்கருவி பத்திரிகை தமிழர் நாட்டில்
தக்கார்கள் பத்திரிகை தோற்றி வைத்தார்
சகம்போற்ற அவைவிளங்கும் தகைமை
கண்டோம்
எக்காலம் எவ்விடத்தில் தமிழர் தங்கட்
கெதுநிகழ்ந்த தெதுசெய்ய வேண்டுமென்றே
மிக்கார்வத் துடன் காட்டிப் 'பர்மா நாடு'
மேன்மேலும் தழைத்தோங்கி வாழ்க! வாழ்க!!

—கி. வா. ஜகந்நாதன்,
ஆசிரியர், 'கலைமகள்' சென்னை.

"கடல் கடந்து தமிழின் சங்கநாதம் முழங்கப்போகின்றது! நினைக்கும்போதே நெஞ்சம் ஆர்வத்தால் பேருவகை கொள்கிறது. தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல்வேண்டும் என்ற அமரகவியின் கனவு நனவாகவேண்டும். இதுவே என் லட்சியம். அந்தப் பணியில் 'பர்மா நாடு'ம் தன்னாலானதைச் செய்யும் என்று பெரிதும் நம்புகிறேன்".

ஜி. உமாபதி,
ஆசிரியர், 'உமா' சென்னை.

"பர்மாவில் வாழும் தமிழ் மக்களுக்காக, 'பர்மா நாடு'' என்ற தமிழ்ப் பத்திரிகை வெளிவருவதைக் கண்டு, உண்மையிலேயே நான் மகிழ்ச்சியடைகிறேன். உலகெங்கும் பரவி வாழும் தமிழ் மக்களுக்கு தங்கள் தாய்மொழியில் ஒரு பத்திரிகை அதுவும் வெளிநாட்டிலிருந்து வருகிறதென்றால், அவர்களுக்கு இதைவிட வேறு மகிழ்ச்சி இருக்கவே முடியாது. அவர்களின் புகைந்த மனத்தில் எழும்பிய பூரிப்பிற்கு, நல்லதொரு புதுப் பாதையை 'பர்மா நாடு' காட்டும் என்று இதயப்பூர்வமாக நம்புகிறேன்.

—கோவி. மணிசேகரன்,
ஆசிரியர் 'கலை அரங்கம்', சென்னை.

"தமிழ் மக்கள், உலகின் எப்பகுதியில் வாழ்ந்தாலும், இனமும் மனமும் ஒன்றுபட்டவர்கள். நீண்ட தூரத்திலிருப்போருக்கிடையே ஒரு நட்பையும், பாசத்தையும் ஏற்படுத்திவைப்பதே தமிழின் தன்மை. தமிழர்களின் தூயமனமும் இதே பண்பாடுடையதே. முன்பின் அறியாதவர்களாக இருப்பினும் தமிழர்கள் ஒன்றுகூடினல் உள்ளங்களும் ஒன்றிவிடுகின்றன.

பன்னாட்களுக்குமுன், போரின் கடுமையால் நின்றுபோன தமிழ் இதழ் மீண்டும் தளிர்விடுகிறதென்ற செய்தி திரு குமார்மூலம் கேட்டு பேருவகைகொண்டோம், கடல் கடந்த பர்மா நாட்டில் தமிழர்களின் தனிப்பண்பை இவ்விதழ் நிலைநாட்டி அவர்களின் முன்னேற்ற வளர்ச்சியில் தொண்டாற்றவேண்டுமென்றே நாம் விரும்புகிறோம்.

ஹாபிஸ் முஹம்மது யூசுப்பு (பாகவி)
ஆசிரியர், 'நூருல் இஸ்லாம்' சென்னை.

"...பொற்கோபுரங்களும், செழிப்பும், மத நம்பிக்கையும் மிக்க நாடான பர்மாவிலே தமிழர்கள் உழைக்க வாழ்கிறார்கள்; வாழ்வதற்காக உழைக்கிறார்கள். பண்பாடு—நாகரீகம் குறையாது, மீறுது அவர்கள் வாழச் சூழ்நிலையும் சரியாக இருக்கவேண்டுமல்லவா? பர்மியர்களைத் தமிழர்கள் சகோதரர்களாகக் கொள்ளவேண்டும். தமிழர்களைப் பர்மியர்கள் பயங்கரப் பார்வையில் கண்டு 'ஒழிக்கவும்' முயலக்கூடாது.

பர்மியர்களுக்கும், தமிழர்களுக்கும் சிறந்த பாலமாக 'பர்மா நாடு' அமையவேண்டும். பத்திரிகை சிறந்து, நீடூழி வாழ வாழ்த்துகிறேன்"

—கே. வேம்பு.
ஆசிரியர், "அமுத சுரபி" சென்னை.

"புதிய தமிழகம் உருவாகிக்கொண்டிருக்கிறது. வருங்காலத் தமிழன், குடத்திலிட்ட விளக்காக இருக்கமாட்டான்; குன்றின் மேலிட்ட தீபமாகத் திகழ்வான்! தமிழனுடைய அன்பும், ஆண்மையும், இந்தப் புரட்சியைச் சாதிக்க உதவப்போகின்றன. கல்வித் துறையிலும், கலைத் துறையிலும், பொருள் துறையிலும் தமிழன் காணப்போகும் முன்னேற்றம், உலகத்தையே வியப்பில் ஆழ்த்தப்போகிறது இந்தச் சாதனையில், அயல்நாடுகளில் வாழும் தமிழருக்கு பெரும் பங்குண்டு. பர்மாவாழ் தமிழர்கள் அந்தப் பங்கைத் தாங்குமாறு 'பர்மா நாடு' தூண்டும் என்று நம்புகிறேன்.

அன்பு ஓங்குக! அறம் வெல்க!!

எஸ். ஏ. பி. அண்ணாமலை,
ஆசிரியர் 'குமுதம்' சென்னை.

வாழ்க திராவிடம்!

"கடலைக் கடந்தாலென்ன; தூரம் பிரித்தாலென்ன; தமிழுணர்ச்சி விலகியாபோகிறது? விரிந்த பூமியிலே பரந்துகிடக்கும் தமிழரனைவரையும் இழுத்துப் பிணைக்கிறதே! அந்த வலிமையை என்னென்பேன்! என்னைக் காண வந்த 'பர்மா நாடு' அன்பர்களைக் கண்ட காலையிலே தமிழ் வாவியிலே குளித்து எழுந்ததுபோன்ற உணர்வினை உணர்ந்தேன்.

தமிழர் பண்புக்கும், கலைக்கும் தொண்டாற்றும் 'ஊழிய இதழாக' 'பர்மா நாடு' வளர்ந்து வாழ ஆசிக்கிறேன்".

விருதை ந. இராமசாமி
ஆசிரியர் "கலைமன்றம்" சென்னை.

"பர்மா நாடு பைந்தமிழர்களின் உழைப்பால் சிறந்த நாடாகியது. பர்மாவில் வாழும் தமிழர்கள் இன்று உரிமைக்கு போராடுகிறார்கள். தாய்த்தமிழகம் அவர்களுக்கு எல்லா வகையிலும் உதவி புரியும். பர்மாவில் வாழும் தமிழ் மக்களுக்கு ஆதரவாக "பர்மா நாடு" என்ற பத்திரிகை ஜனசக்தியின் அளவைக் காட்டும் ஒரு வலிமை மிக்க சாதனம். ஆகவே "பர்மா நாடு" தமிழன் குரல் எழுப்பி, ஒற்றுமை உணர்ச்சியை ஊட்டி பர்மா தேசம் செழிப்படையவும் அதில் தமிழர்கள் நல்வாழ்வு பெறவும் உழைத்து வெற்றிபெறட்டும்".

சின்ன அண்ணாமலை,
ஆசிரியர், 'சங்கப்பலகை', சென்னை.

"பர்மா நாடு செழிக்க, பர்மியத் தமிழர் வாழ்வு கொழிக்க 'பர்மா நாடு' உழைக்குமென நம்புகிறேன்".

சாண்டில்யன்,
'சுதேசமித்திரன்', சென்னை.

"பர்மாவில் வாழும் தமிழர் வாழ "பர்மா நாடு" சேவை புரியுமென நம்புகிறேன்".

எஸ். நீலமேகம்,
'சுதேசமித்திரன்', சென்னை.

"பர்மாவிலுள்ள தமிழர்கள் அந்நாட்டு மக்களுக்குத் தமிழ்ப் பண்புகளைப் பிரச்சாரம் செய்து நம் நாட்டின் நல்லெண்ணத் தூதர்களாக விளங்குவார்களென எதிர்பார்க்கிறோம்".

பி. கோதண்டராமன்,
'சுதேசமித்திரன்' சென்னை.

பர்மா நாடு ஒரு காலத்தில் நம்முடையதாக இருந்தது. இன்று அது தனி நாடாக சுதந்திர நாடாக ஆகிவிட்டது. "பர்மா நாடு" பத்திரிகையும் அப்படித்தான். முன்பெல்லாம் அதைத் தாய்த் தமிழக மக்களும் ஆர்வமுடன் படித்துவந்தார்கள். யுத்தம் அதைத் தடுத்தது; பிறகு பர்மா நாட்டை நாம் காணவே முடியாதுபோயிற்று. மீண்டும் அந்த நல்ல நாள் வெளிவ நகிறதென்ற நல்ல செய்தியைச் சுமந்து வந்திருக்கிறார், இளைஞர் குமார். "பர்மா நாடு" தமிழ்ப் பேசும் என்பதை அறியும் தமிழர்கள் பூரிக்காமல் இருப்பார்களா? பர்மா நாட்டில் தமிழைப் பரப்பும் தமிழர்களை நாம் மறக்க முடியுமா? "பர்மா நாடு" வாழ்க! கடாரம் கொண்டான் தமிழன். இன்று கடாரம் தமிழனைக் கொண்டிருக்கிறது. ஆகவே அது என்றும் இன்பமுடன் வாழ்க! மாந்தலே இந்தியத் தலைவர்களின் சிறைக்கூடமாக முன்பு இருந்தது. இன்று மாந்தலேயில் இந்தியர்கள்—குறிப்பாகத் தமிழர்கள்—சிறையற்ற சுதந்திர வாழ்வு நடத்துகின்றனர். அவர்களை ரக்ஷிக்கும் மாந்தலே வாழ்க! வாழ்க உலகம். வளர்க தமிழ்! வருக சோஷலிசம்!

கவி. கா. மு. ஷெரிப்,
ஆசிரியர் 'தமிழ் முழக்கம்" சென்னை,

"அடிவானத்திற்கு அப்பாலும் உறவு கொள்ளத்தயங்கமாட்டார் தமிழர். அதற்கு ஓர் எடுத்துக்காட்டு "பர்மா நாடு". உருவாகப் போகும் புதிய தமிழகத்திற்கு உறுதுணையாக விளங்கும் "பர்மா நாடு" என்றும் வாழ்க!

அரு. இராமநாதன்.
ஆசிரியர் "காதல்", சென்னை.

"பல ஆண்டுகளாக நல்ல சேவை செய்த "பர்மா நாடு" மீண்டும் வெளிவருவது அறிய மகிழ்ச்சியுறுகிறேன். "பர்மா நாடு" சிறந்த தொண்டாற்றி, பர்மாவாழ் தமிழ்ப் பெருமக்களும், பர்மியர்களும் சீரும் சிறப்புடன் இனிது வாழ பிரார்த்திக்கின்றேன்".

கோ. சாரங்கபாணி,
ஆசிரியர், "தமிழ் முரசு" அண்ட்
"இண்டியன் டெய்லி நியூஸ்", சிங்கப்பூர்.

தமிழ் நாடு, தாய்நாடு என்ற ஆவலுடன் பறந்தோடிப் பார்க்க வரும் கடல் கடந்து வசிக்கும் தமிழர்களுக்கு உற்ற வார்த்தைகள் என்னிடம் போதிய அளவு இல்லை. என்னிடம் என்னும்போது என்போன்ற லட்சக்கணக்கானவர்களையும் எண்ணித்தான் சொல்கிறேன். அந்த ஊக்கத்தையும் ஆர்வம் மிகுந்த உற்சாகத்தையும் நம்மில் பலரால் புரிந்து உணர்ந்துகொள்ளவே முடியவில்லை என்றுதான் தோன்றுகிறது. தாய் நாட்டிடம் மாறாத அன்பும் தமிழ் மொழியிடம் பெருகிநிற்கும் அன்பும் தூய்மையானவை. பலன் கருதாதவை. அந்தத் தூய்மைக்கு ஈடு இணையே கிடையாது. காடும் மலையும் கடலும் நதியும், அவர்களைப் பிரித்தாலும் அவர்கள் தமிழ் நாட்டின் உயர் பண்புகளை மிகப் பத்திரமாகப் போற்றுகிறார்கள். நூறாண்டுகள் கழித்துத் தமிழ்நாடு மாறினாலும் மாறும். தமிழ் கலாச்சாரம் இங்கே வேறுபட்டுப் போனாலும் போய்விடும். ஆனால் கடல்கடந்து வசிக்கும் தமிழர்களிடத்திலிருந்து அவை குன்றப்போவதுமில்லை. மாறப்போவதுமில்லை. அவ்வளவு நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

"பர்மா நாடு" வாழ்க! வாழ்க தமிழர்!

"ஆர்வி"
ஆசிரியர்; கண்ணன், சென்னை.

"கடல் கடந்த தமிழர்கள் பல நாடுகளில் சிதறிக்கிடக்கிறார்கள். பர்மாவில் லட்சக்கணக்கான தமிழர்கள் வாழ்கிறார்கள். ஆனால் அவர்களுடைய நிலை என்ன என்பது வெளியே தெரியாமல் இருக்கிறது அக்குறையை நீக்கி தமிழன் குரலை ஒலிக்கச் செய்யும் எல்லா முயற்சிகளும் வரவேற்கத்தக்கவை ஆகும். இதுவிஷயத்தில் "பர்மா நாடு" உதவும் என்று நம்புகிறேன்".

வெ. ராமச்சந்திரன்,
"தினத்தந்தி", சென்னை.

காலஞ்சென்ற தேசத் தியாகிகள்

வங்கம் தந்த வைரமணி
'தேசபந்து' சித்தரஞ்சன் தாஸ்

நம் தாதாபாய் நௌரோஜி வழிவந்த
புரோஷிசா மேத்தா.

குறிப்பு:-

'பர்மா நாடு' வின் பிரதிநிதியாக தமிழகம் சென்ற திரு. மு. குமார் ஆர்வமிக்க இளைஞர் இத்தகைய இளம் இளைஞர்களுக்கு ஊக்கம் அளிப்பதையே கடமையாகக் கொண்ட 'பர்மா நாடு' பெருமைபடத் தக்க முறையில் குமாரின் முயற்சிக்குமேலும் ஊக்கமளித்துள்ளது. பர்மாவில் இளம் எழுத்தாளர்களில் புகழுடன் விளங்கும் அன்பர் திரு. ஹஸ்புல்லாகான் அவர்களின் அரிய ஆற்றல்மிக்க சேவைக்கும் நமது நன்றி தமிழ் நாட்டின் பிரபல பத்திரிகை ஆசிரியர்களும், சிறந்த எழுத்தாளர்களும் நம் பிரதிநிதியை வரவேற்று—ஆசிச்செய்திகளை அனுப்பியுள்ள அறிஞர்கள் எல்லோருக்கும் நமது இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

தமிழகத்தின் தலைநகராகிய சென்னைமாநகரின் அருகில் உள்ள ஆவடியில் அமரர் ஸ்ரீ சத்தியமூர்த்தி அவர்களின் ஞாபகார்த்தமாக அமைந்த காங்கிரஸ் விழா பந்தலின் முகப்புத் தோற்றம்— கண்கொள்ளா கலைக்காட்சியாகும்.



பர்மாவிலிருந்து ஆவடியில் நடைபெற்ற காங்கிரஸ் மகாநாட்டிற்கு சென்ற தமிழ் அன்பர்களான, அகில பர்மா தமிழர் சங்கத்தின் மாஜி தலைவர் எ.எஸ். ஏகாம்பரம், சாந்தா ஆர்ட்போட்டோ ஸ்டுடியோ அதிபர் எஸ். லெட்சு மணன், இந்தோ-பர்மா லைம் கம்பெனி அதிபர் எம். ஆர். ஆறுமுகம் செட்டியார், அரு. காந்தி அண்ணாமலை முதலியோரை காணலாம்.

படங்கள்: சாந்தா ஆர்ட் போட்டோ ஸ்டுடியோ.

நமது பாரத சுதந்திர தின வாழ்த்து!

எமது மகத்தான ஆரம்ப விழா! 12-8-55 ந் தேதி முதல்

கெயிட்டி சினிமாவில் AT The GAIETY

தினசரி 12, 3-15, 6-30, 9-30 மணிக்கு
ஞாயிறன்று காலை 9 மணிக்கு குறைந்த கட்டணத்தில் ஸ்பெஷல் காட்சி உண்டு.

❊ வீரத் தமிழர்களே! ❊ வெற்றி நம்முடையதே!!
❊ கலக்கம் அடையாதீர்!!! ❊ வீறுகொண்டு எழுங்கள்!!!!

★ பெண்ணரசி ★

(தமிழ்)

பிறந்த நாட்டின் உரிமையைப் பறிக்கப் படையெடுத்து வந்தவர்களை தவிடு பொடியாக்கி விரட்டி யடித்தான் தளபதி விக்கிரமன்! உண்மை உழைப்பால், உள்ளத்தின் உரத்தால், தங்களது உடைவாட்களின் கூர்மையால் உயர்ந்தோங்கி நின்றன பெண்ணரசியின் சிங்கப் படைகள்| தரணி யெங்கும் நிழலிட தாய் நாட்டின் கொடியை உயர்த்தி பறக்கவிட்டனர்.

"சூழ்ச்சிக்காரர்களும், சூதுக்காரர்களும் ஒழிந்துவிட்டனர்! அக்கிரமமும் அநியாயமும் அழிந்துவிட்டன! நியாயம் நிலைத்துவிட்டது! நேர்மை பலித்துவிட்டது! என்று இறுமாப்புகொண்டாள் பெண்ணரசி! முன்வாயிலிலே ஏற்பட்ட கலகத்தை அடக்கிவிட்ட மகிழ்ச்சியிலே பின்வாயிலில் மூண்டெழப்போகும் புரட்சியை உணரத் தவறிவிட்டாள்! அவளது உயிருக்கு உலைவைக்க அவளது நிழலிலேயே வாள் தீட்டப்பெற்றது! பயங்கரத் திட்டங்களும் அங்கேதான் உருவாயின! காரணம்? மண்ணுங்கட்டியை மாணிக்கம் என்றுநினைத்துமதியிழந்தாள்! காஞ்சிரங்காயை கருநெல்லிக் கனி என்று கருத்திழந்தாள்! உண்மையை உணரத் தவறிவிட்டாள்!

மக்களின் கண்களிலே மண் தூவுவதில் கைதேர்ந்தவன் மார்த்தாண்ட வர்மன்! குதர்க்க புத்திக்காரன் மதிசேகரன் அவனது வலதுகரம் தீட்டப்பட்ட திட்டங்களை காற்றுவேகத்தில் நடத்திவைக்கும் கலைவாணி ஜீவா அவனுக்கு இடது கரம்!

நடிகர்கள்:- ஏ. பி. நாகராஜன், வீரப்பா, நம்பியார், கருணாநிதி, ஏழுமலை, கண்ணாம்பா, ராஜ-சுலோசனா, சூர்யகலா இன்னும் பலர்.

எல்லா இந்திய அன்பர்களுக்கும்

"ஷாமி" கன்பெக்ஷனரியின்

சுதந்திர தின வாழ்த்துக்கள் !

SHAMIE CONFECTIONERY.

வாழ்க பாரத சுதந்திரம் பல்லாண்டு!

உயர்தரமான—காப்பி—பலகாரங்களுக்குச் சிறந்த இடம்

வசந்தா சிற்றுண்டிசாலை

மாலையில் ரொட்டியும், பசும்பாலும் கிடைக்கும்

செ. வெங்கடாசலம். 81—29-வது வீதி, இரங்கூன்.

சுதந்திர இந்தியா நீடூழி வாழ்க!

நாகரீம்—சுத்தம்—சுகாதாரம் இவற்றுடன் கூடிய

ஜெயகுஞ்சர விலாஸ்

மிலிட்டரிசாப்பாடுஹோட்டல்

(நெ 320—322, மொகல் வீதி, இரங்கூன்)

நாவிற்கு ருசியும், மனதிற்கு குஷியும் தரத்தக்கவிதத்தில், கைதேர்ந்த வேலையாட்களைக்கொண்டு, சிறப்புப்பட, அறுசுவைமிக்க தென்னிந்திய சைவ, மிலிட்டரி சாப்பாடு வகைகள் தயாரிக்கப்படுகின்றன.

அன்பர்களது தேவையறிந்து சேவை செய்வதே எங்களது குறிக்கோள்

☞ ஒருமுறை வருகைதந்தால் உண்மை விளங்கும்.

அதிபர்:- S. கோவிந்தசாமி பிள்ளை,

ஜெயகுஞ்சர விலாஸ் மிலிட்டரி சாப்பாடு ஹோட்டல்.

வங்கத்தின் வணங்காமுடி

'இளந்தமிழன்'

பாரதத்தின் வங்கம் தந்த சிங்கமாக விளங்கியவர் நமது நேத்தாஜி சுபாஷ் சந்திர போஸ்! இன்றும், என்றும் சுதந்திர தேவியின் மணிமுடியில் ஜொலிக்கும் ஒப்பற்ற ரத்னம். மகான் காந்தியடிகளின் இரு நேத்திரங்களில் ஒன்றாக விளங்கினர். விடுதலைப் போரில் பல துறைகளிலும் முன்னணியில் நின்று போராடிய வீரர். அறிவிற் சிறந்த மிதவாதிகளையும், குடியேற்ற சுதந்திரம் கிடைத்தால் போதுமென்ற காங்கிரஸ் வாதிகளையும் திணரடித்து பரிபூரண சுதந்திரம் கோரி, எதிர்த்து நின்று போராடிய தீரர்!

1897-ஜனவரி 23-ல் பிறந்த இவர், 1920-ல் தமது 23-ம் பிராயத்தில் கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையில் படித்துப் பட்டம் பெற்று ஐ. சி. எஸ். பரீட்சையில் தேறிவிட்டார். தேசபந்து சித்தரஞ்சன் சி. ஆர் தாஸ் அவர்களின் அன்புக்கு ஆளாகி தனது எதிர்கால வாழ்வையே நாட்டுக்கு அர்ப்பணம் செய்யத் துணிந்து, ஐ. சி. எஸ். பட்டத்தைத் துறந்து-உதறிவிட்டு தாய்நாடு திரும்பி வந்தார். ஒத்துழையாமை இயக்கத்தில் முன்னணியில் நின்று போராடினர் கல்லூரி ஆசிரியர், பத்திரிகை ஆசிரியர், சட்டசபை அங்கத்தினர், கல்கத்தா மேயர், தொண்டர் படைத் தலைவர் போன்ற பதவிகளையெல்லாம் ஏற்று வங்கத்தின் முடிசூடா மன்னராக விளங்கினர். சி. ஆர். தாஸின் மறைவுக்குப் பின் வங்கத்தின் ஜீவநாடியாகவும், பாரதத்தின் கலங்கரை விளக்கமாகவும் திகழ்ந்தார்.



சிறைவாசத்தால் நேத்தாஜியின் உடல்நலம் குன்றியது என்றாலும், மனவலிவு உறுதியாகி வந்தது!

பாரத நாட்டின் விழிப்புக்கு மூலகாரணமாக விளங்கிய முற்றும் துறந்த முனிவர் பெருந்தகை சுவாமி விவேகானந்தரின் அருள்மொழிக்கு ஆளானவர். இளம் பிராயத்தில் 'சுவாமிகளின் அழைப்பு' என்றும் நிலைபெயராதவாறு சுபாஷின் இருதயத்தில் இடம் பெற்றுவிட்டது. பிரமச்சாரியம், தியானம், ஹடயோகம் போன்ற சித்தர் முறைகளைச்செவ்வனேகற்றுக் கொண்ட சிறப்பால் அஞ்ஞானம் நீங்கி ஆன்மார்த்திக ஞானமும் பெற்று எத்தனையோ அற்புதமான நிகழ்ச்சிகளை எல்லாம் புரிந்துள்ளார்.

காங்கிரசின் எதிர்ப்பு முறைப் போராட்டங்களில் காந்திஜீக்கும், நேத்தாஜீக்கும் அபிப்பிராயபேதம் ஏற்பட்டாலும் இருவரிடையேயும் அன்பும்,மதிப்பும் வளர்ந்தது. அதுவரை காங்கிரஸ் கண்டிராத இளைஞர்களின் துடிதுடிப்பை, சுபாஷின் தலைமையில் பகிரங்கமாக வெளியாகி எரிமலைபோல் குமுறியது. முற்கால மிதவாதி-தீவிரவாதி என்ற அரசியல் மொழிகள்

நீங்கி, இடதுசாரி, வலதுசாரி என்ற புதிய சொற்கள் பழகின. வலதுசாரி—காந்திஜி தலைமையிலும், இடதுசாரி—நேத்தாஜி தலைமையிலும் இயங்கியதை மக்கள் ஆதரித்தனர். போஸ் தலைமையில் இளைஞர்கள் வீறுகொண்டு போரிடத் துணிந்தனர்.

காங்கிரஸ் தலைவர் தேர்தலில் காந்திஜி டாக்டர் பட்டாபி சீத்தாராமையாவை நியமிக்க வேண்டுமெனக் கோர, இறுதியில் நேத்தாஜியே தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். காந்திஜியின் சொல் எடுபடவில்லை. பட்டாபி சீத்தாராமையா தோல்வியுற்றார். அன்றிலிருந்து காங்கிரஸ் பேரவையில் பெரும் மாறுதல் ஏற்பட்டது. இமயம் முதல் குமரிவரை புதிய எழுச்சி இயக்கம் தோன்றியது. காலப்போக்கில் வலதுசாரி மகாத்துமாவின் ஆதரவைப் பயன்படுத்திக் கொள்ள நினைத்தபோது நேத்தாஜி 1939-ல் தேசிய முன்னணிக் கட்சியை ஆரம்பித்தார் முன்னணிக் கட்சியை இன்றளவும் நேத்தாஜி தோற்றுவித்தார் என்று பெருமை தந்து, ஒரு சில தேசபக்தர்களால் இக்கட்சியைப் பலம் பொருந்தியதாக ஆக்கி வருகிறார்கள்.

1941-ல் நாடெங்கும் போர்ப் புயல் நெருங்கிவிட்டது. இந்த யுத்த நெருக்கடியில் பல நாடுகளுக்கும் சென்று, சுதந்திரம் வாங்குவதற்குரிய வீரச் செயல்களைப் புரிந்து, படைகள் திரட்டி பயங்கரப்போர் செய்ததை யாரும் மறந்திருக்கமாட்டார்கள்.

பாரதத்திற்கு ஒரு சுடராக விளங்கிய நேத்தாஜி, ஜப்பானுக்குச் சென்றுகொண்டிருந்த நடுவழியில் விமான விபத்துக்கு ஆளாகினார் என்ற செய்தி உலகெங்கும் பரவிய நேரத்தில் ஒரு துளி கண்ணீர் வடிக்காத எந்தவொரு ஜீவனும் இல்லையென்றே கூறலாம்.

மனிதன் தலைவனாகி ஆற்றவேண்டிய செயல்களையெல்லாம் செய்துமுடித்து, வகிக்க வேண்டிய பதவிகளையெல்லாம் திறமையுடன் வகித்துப் புகழடைந்தவர் ஒரு சிலரே! அந்த ஒரு சிலரில் நம் நேத்தாஜியும் என்றால் அது மிகையாகாது!

நேத்தாஜி உயிருடன் இருக்கிறாரா, இல்லையா என்பது பற்றிய பிரச்னை நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே வருகிறது. இவ்விஷயத்தில் நேருஜிகூட திட்டமான ஒரு முடிவை கூறஇயலவில்லை. எனினும் நாம் கூறுவோமானால் தென்னாட்டின் ‘போஸ்” உ. முத்துராமலிங்கத் தேவர் உயிருடன் இருந்துவரும்வரை நேத்தாஜி இறந்திருக்கமாட்டார் என்றே தேவர் கூறலாம். அவர் உயிருடன் இருந்துவருகிறார் என்பதற்குரிய ஆதாரங்களும் தேவரிடம் இருப்பதாக ‘கண்ணகி”யில் எழுதியிருக்கிறார்.

நேத்தாஜி, அன்று காங்கிரஸின் மாபெரும் தலைவர்களில் ஒருவரான சுபாஷ் சந்திர போஸாக இருந்தபோது “பர்மா நாடு” பத்திரிகைக்கும், “பர்மா நாடு” ஆசிரியர்க்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது ஒரு அற்புதமான சம்பவம். இது பற்றிய விபரங்களை பின்வரும் இதழ்களில் வெளியிடுவோம்.

ஜெய் ஹிந்த்!

பாரத சுதந்திரம் பல்லாண்டு வாழ்க!

சா. மு. சண்முகம்
அண்ட் கம்பெனி,

(நகை வியாபாரிகள் & ஏஜெண்ட்கள்)
134, மொகல் வீதி, இரங்கூன்.

எங்களிடத்தில் கைதேர்ந்த வேலையாட்களைக்கொண்டு தற்காலத்திற்கேற்றவாறு புதிய தினுசுகளில் நகைகள் தயார் செய்து கொடுத்து வருகிறோம். ஆர்டர் நகைகள் குறிப்பிட்ட நேரத்தில் செய்து கொடுக்கப்படும்.

Grams: NETAJI. P. B. No. 343.

S. M. SHUNMUGAM & Co.
JEWELLERS & AGENTS
134, MOGUL ST., RANGOON.

சுதந்திரப்போரில் நேதாஜி

"சுதந்திரப் போரில் தமிழகம்" என்ற தலைப்பில் தினமணி சுடரில் தேசபக்தர் எம். எஸ். சுப்ரமணிய ஐயர் அவர்கள், இன்றைக்கும் நாம் நேரில் பார்ப்பது போல் சித்தரிக்கும் சில பகுதிகளை கீழே காணலாம்.

உதிரபானம்

"சுதந்திரம் சும்மா வராது. உங்களது உதிரத்தை ஆறாகப் பெருக்குதல் வேண்டும். அப்படியானால் பாரத மாதாவுக்கு விடுதலை கிடைக்கும்" என்று கோரினார் சுபாஷ் சந்திர பாபு, "டில்லியை நோக்கிச் செல்லுகையில் பசி வயிற்றைக் கிள்ளும்; தாகம் நாக்கை வறளச் செய்யும். முடிவிலே சாவும் கிட்டும் தயார் தானா?" என்றும் சுபாஷ் பாபு வினவினார்.

வினவியவுடனே சிங்கப்பூரிலே ரப்பர் தோட்டங்களில் வேலை செய்துவந்த தமிழ் தொழிலாளரிலே நூற்றுக்கணக்கான பேர் மார்தட்டி முன் வந்தனர். தேசியச் சேனையில் சேர்ந்தனர். அவர்களிலே பலரும் இந்திய மண்ணிலே இம்பால் என்னும் நகரிலே தங்களது உதிரத்தை வடித்து ஆவியையும் விடுத்தனர். மொத்தத்திலே நாலாயிரம் வீரர் தாங்கள் வாக்களித்த வண்ணம் உதிரத்தைப் பெருக்க உள்ளம் களித்தனர்.

நம்மவரைக் காத்த நேதாஜி

1945 ஆம் வருஷம் எப்ரல் மாதம் விதியின்றி நேதாஜியின் இந்தியத் தேசிய சேனையும் ரங்கூன் நகரிலிருந்து பின்வாங்க நேர்ந்தது. தோல்வியுண்ட ஜப்பானியர் தலைகால் தெரியாமல் ஓடுகின்றனர். அங்கிலையிலே ரங்கூன் நகரில் இருந்த இந்தியரைக் காப்பாற்றுவது யார்?

கொள்ளைக்காரருக்குப் பணந்தான் பிரதானம். திக்கற்று நிற்கும், இந்திய, ஆடவர், மாதர், குழந்தைகள், இவர்களில் ஏறக்குறைய சரிபாதிப் பேர் தமிழ் மக்கள். இவர்களின் வீடுகளில் புகுந்து கொள்ளையடிப்பார்கள். இந்த ஆபத்திலிருந்து நம்மவரைக் காக்கவேண்டும். தளபதிகளில் யாரை நியமிப்பது?

மேஜர் லோகநாதன்

தேசியச் சேனையின் வீரரிலே ஐயாயிரம் பேரை அந்த நகரிலேயே நிறுத்தினார் சுபாஷ் பாபு. அவர்களுக்குத் தலைவராக மேஜர் ஜெனரல் லோகநாதன் என்னும் தமிழ்ப்பெரு மகனையே நியமித்தார். இவரோ இந்தியரின் உடமை, உடல், உயிர், மானம் அனைத்தையும் காத்து, இந்தியரின் வந்தனத்திற்குப் பாத்திரமானார். வினை ரையும் அடக்கினார்.

இரங்கூன் நகரைவிட்டு அகலுகையில் "வா", என்னும் நதி குறுக்கிட்டது. அந்நதியிலோ ஜலம் அதிகம். படகுகளைக் கொண்டே தாண்ட வேண்டும். படகுகளையெல்லாம் ஜப்பானியர் எடுத்துக்கொண்டனர். நேதாஜி சுபாஷுக்கு ஒரு படகு கொடுத்தனர். இதில் ஏறிக்கொண்டு ஆற்றைக் கடக்க வேண்டினார் ஜப்பானிய தளபதி. நேதாஜி யாது பதில் கொடுத்தார்?

ஆற்றில் நீந்தல்

"ஜான்ஸி ராணி சேனையைச் சேர்ந்த முந்நூறு மாதர் இருக்கின்றனர். அவர்கள் அனைவரும் ஆற்றைக் கடந்தால் அல்லாது, நான் கடவேன்" என்றார் நேதாஜி. ஜப்பானியர் போய்விட்டனர். நதியைக் கடக்க மாதருக்கு உதவுதல் எங்ஙனம்? சுபாஷ் சற்றே சிந்தித்தார். ஆற்று வெள்ளத்தின் ஆழத்தை ஒரு தளபதியை அறிந்துவரச் செய்தார்!

ஓர் இடத்திலே வெள்ளத்தின் ஆழம் ஆறே அடி என்று தென்பட்டது. அந்த இடத்தின் வழியே மாதரை நீந்திச் செல்லும் வண்ணம் சுபாஷ் வேண்டினார். வெடிகுண்டையும் துப்பாக்கி ரவைகளையும் எதிர்த்து நின்ற வீராங்கனைகள் அலட்சியமாக ஆற்றில் குதித்து நீந்தத் தொடங்கினர்.

தோளில் சுமந்து

அப்போது அவர்களின் தோளிலே துப்பாக்கி. இடுப்பிலே உடைவாள்; முதுகிலே சிறிய மூட்டை. இவற்றுடன் அம்மாதர் நீந்திச் சென்றனர். ஆறடி உயரத்திற்கு மேலிருந்த

வீரரிலே சிலர் அந்த ஆற்றின் நடுவே இங்கும் அங்கும் நின்றுகொண்டு மாதருக்கு உதவக் காத்திருந்தனர்.

ஒரு மாது நீரிலே மூழ்கும் சமயம் கர்னல் மல்லிகா என்பார் அம்மாதைத் தூக்கிச் சென்று அக்கரை சேர்த்தார். மற்றொரு மாது நீரில் தத்தளிக்கையில், நேதாஜி விரைந்து பாய்ந்து அம்மாதைத் தமது தோளில் சுமந்து காத்தார். இவ்விதமெல்லாம் மாதரும், ஆற்றைக் கடந்த பின்பே நேதாஜி கடந்தார்.

வெடிகுண்டு மழை

மாதர் அனைவரும் ஆற்றைக் கடந்து அக்கரை சேர்ந்ததுதான் தாமதம்; ஆறு ஆங்கில விமானங்கள் தொடர்ந்து வந்து, அம்மாதரையும் நேதாஜியையும் வெடிகுண்டு வீசித் தாக்கத் தொடங்கின. கரையிலே அடர்த்தியான மரங்களின் நடுவே மாதர் அனைவரும் நின்றிருந்தனர்.

வான வீதியிலே விமானங்களைக் கண்டதும், ஒரு குழியிலே பதுங்கிக்கொள்ளும், வண்ணம் நேதாஜியிடம் அனைவரும் வேண்டிக் கொண்டனர். முந்நூறு மாதர் பதுங்க இடமில்லாது நிற்கையில், எனக்கு மட்டும் பாதுகாப்பு என்? என துயிர்வெல்லமோ? என்றார் அவர் அம்மாதரும் வேண்டிக்கொண்டும் அவர் ஒப்பவில்லை.

கைகொட்டிச் சிரித்தல்

அவரோ சிகரெட் ஒன்றுபிடித்துக்கொண்டு யாதோர் கவலையும் இல்லாதிருந்தார். மாதரும் விமானங்களைக் கண்டு சிறிதும் அசையாது மரத்தடியிலே குந்திக் கிடந்தனர். விமானங்களோ குண்டுகளை இங்கும் அங்கும் வீசின. பட்டாசு வேட்டைக்கண்டு பையன்கள் கைக்கொட்டிச் சிரிப்பதைப் போல் அம்மாதர் சிரித்து நின்றனர்

குண்டுகளோ அம்மாதரின் மீது விழவில்லை. மரத்தடியில் மாதர் இருப்பதை விமானிகளும் அறியவில்லை. விமானங்கள் மறைந்த பின்பு எல்லாரும் மேலே செல்லத் தலைப்பட்டனர். ஆதிமுதல் அம்மாதரின் மனவலி கண்டு நேதாஜி சுபாஷ் பூரிப்புக்கொண்டார். டில்லி மாநகரை எட்டிப் பார்க்கவில்லையே என்று மனம் கரைந்து மொழியாத மாதர்க்கிடையாது.

நானிலம் அறியின்

சீன, மிசிரம், யவனரகம், என்னும் தீவு பலவினும் சென்றேறி, அங்குத் தங்கள் புலிக் கொடியும், மீன் கொடியும் நாட்டிய தமிழ் மூதாதையரின் வழியில் வந்த தமிழ் மக்கள் மலாயாத் தீவுகளிலே மகிமைச் செயல் புரிந்ததை மாநிலம் நன்கறியின் உச்சி மீது கொண்டு தமிழரைப் போற்றும் என்பது திண்ணம்.

கோடைக்குப்பின் வேனில்; இரவுக்குப்பின் பகல்; அரும்புக்குப்பின் அழகு மலர்; புயலுக்குப் பின் தென்றல்; அதுபோலவே போராட்டத்திற்குப்பின் சுதந்திரம்!

— "யாரோ"

ஜேய்ஹிந்த்!

சுதந்திர பாரதம் வாழ்க!

எல்லோருக்கும் என் இதயங்கனிந்த அன்பும், நன்றியும் இந்நாளில் உரித்தாகுக!

திகட்டாத தெள்ளமுது திடம்அளிக்கும்

நல்ல சைவ உணவு

கைதேர்ந்த நல்ல ஆட்களைக் கொண்டு பல வகையான காய்கறி, மற்றும் நல்ல தயிர், மோர், வடை, பாயாசங்களுடன் அமிர்த்தமான சைவ உணவுக்கு மொகல் வீதியில் புகழ் பெற்ற எனது ஹோட்டலுக்கு ஒரு முறை வந்து உண்டுகளிக்க வேண்டுகிறேன்.

அதிபர்:—பி. கே. பிள்ளை.

நியூ மெட்ரூஸ் பிராமணாள் சாப்பாடு ஹோட்டல்,

நெ. 103, மொகல் வீதி, இரங்கூன்.

பரிசு பெறுவதா, உண்மை உரைப்பதா?

[ரெவரண்டு ஜி. பி. சார்லஸ், எம். ஏ, டி. டி]

அறிவை வளர்க்கவும், அலுவலில் ஊக்கம் பெறவும் கலாசாலை அதிகாரிகள் முயற்சியினால் மாணவர் மாணவிகள் அநேகர் பழைய புதிய ஸ்டாம்புகள் சேகரிப்பதில் மிக்க அவாவுடையவர்களாயிருந்தார்கள். வருஷத்திற் கொருமுறை தங்கள் தங்கள் சேகரிப்புகளை மாணாக்கர் கொண்டுவந்து கலாசாலை மண்டபத்தில் விரித்துக்காட்டுவார்கள். நவீன ஸ்டாம்புகள், அபூர்வ ஸ்டாம்புகள் உடையவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும். வருஷத்திற்கிடையில் ஒன்றுக்கதிகமான ஸ்டாம்புகள் உடையவர்கள் ஒருவருக்கொருவர் மாற்றிக்கொள்வார்கள்.

ராஜனும், மாலதியும் ஒரே வகுப்பில் படிக்கிறவர்கள், ஒரே தெருவில் வசிக்கிறவர்கள்; ஸ்டாம்பு சேகரிப்பதில் அளவிறந்த வாஞ்சையுடையவர்கள். பரிசுப் போட்டி நடைபெறும் நாட்கள் சமீபித்து வந்தன. ஒருவருக்கொருவர் அதிகமாயுள்ள ஸ்டாம்புகளை மாற்றிக்கொண்டு வந்தார்கள். ஒரு நாள் மாலதி தன்னிடத்திலுள்ள ஒரு அபூர்வமான அழகுள்ள ஸ்டாம்பை ராஜனிடத்தில் காட்டி இதுதான் எனக்குப் பரிசை வாங்கித்தரும் ஸ்டாம்பு, இது என் மாமா சிங்கப்பூரிலிருந்து அனுப்பினார், என்று சொன்னாள். ராஜன் அந்த ஸ்டாம்பை பார்த்தபோதே கண் உறுத்த ஆரம்பித்தது. அது விசேஷமான ஸ்டாம்பு என்பதையும், அதுவே பரிசளிக்கும் ஸ்டாம்பு என்றும் அறிந்துகொண்டான். பொறாமைத் தீயும் அவன் உள்ளத்தில் உதித்தது.

பரிசளிக்கும் தினத்திற்கு இரண்டு நாள் முன்னதாக ராஜன் தனது தெருவில் நடந்துகொண்டு போகும்போது. மாலதியின் வீட்டு



"பர்மா நாடு" மறுமலர்ச்சி காண விழையும் தங்களுக்கு எனது இதயங்கனிந்த பிரார்த்தனையும் ஆசியும் துணைபுரியுமாக!"

தங்கள் அன்புள்ள,

ஜி. பி. சார்லஸ்.

வாசலருகே ஒரு உறை கிடந்தது. அதைக் கையில் எடுத்து திறந்து பார்த்தபோது, அதனுள்ளே மாலதி தனக்குப் பெருமையாய் காட்டின அந்த அபூர்வ ஸ்டாம்பு இருந்தது, அவனுக்கு உடனே உள்ளத்தில் பூரிப்பு உண்டானது. தனக்கு நல்ல புதையல் கிடைத்தது என்று நினைத்தான். ஆனால் மனச்சாட்சி உடனே அவனுக்குள் பேசி, அது மாலதியின் ஸ்டாம்பு அல்லவா, அவளுக்கு அதைக்கொடுத்துவிட வேண்டுமல்லவா, என்று சொன்னது. இவனோ தனக்குள்ளே, அப்படியல்ல, கண்டவன் எடுத்தான், எடுத்தவன் உடையவன் என்று சொல்லிக்கொண்டான். மாலதி என் பெருமையடித்துக்கொண்டாள்? அதற்குக் தக்க பலன், என்றும் சொல்லிக்கொண்டான்.

அடுத்த நாள் மாலதி ராஜனை சந்தித்தபோது தன்னுடைய பரிசளிக்கும் ஸ்டாம்பு தவறிப்போனது என்று துக்கம் தாளாமல் மிகுந்த விசனத்தோடு சொன்னாள். ராஜனுடைய மனச்சாட்சி, உண்மையைச் சொல் என்று தூண்டிவிட்டது. ஆனால் ராஜன் தனக்கு

பரிசு கிடைக்கவேண்டுமே என்று தனக்குள்ளாகச் சொல்லிக்கொண்டான். மாலதியிடம் உண்மையைச் சொல்லவில்லை. அடுத்த நாள் பரிசளிக்கும் தினம். அன்றிரவு ராஜன் நித்திரை செய்யும்போது, மனச்சாட்சியின் வாதனையினால் பயங்கரமான கனவுகளைக் கண்டான். அந்த மாலதியின் அபூர்வ ஸ்டாம்பு தன் பெட்டியில் தீப்பற்றி எரிவதுபோல கண்டான். தான் அடுத்த நாள் பரிசு வாங்கும்போது அந்தப் பரிசு தன் கையில் உஷ்ணமடைந்து தன் கை வெந்து போவது போலவும் உணர்ந்தான், நடு இரவில் விழித்து தன் படுக்கையில் உட்கார்ந்தான், தன் மனச்சாட்சி வேதனையுடன் போட்டியிட்டது.

பரிசு பெறுவதா, உண்மை உரைப்பதா? எது விசேஷம், என்று ஓயாமல் திரும்பத்திரும்ப யோசித்தான், மாலதியின் மனத்துயரத்தைப் பற்றி மீண்டும் சிந்தித்தான். உடனே தன் கெட்ட யோசனையைப் பற்றி வெட்கப்பட்டான். அதிகாலையில் எழுந்து மாலதியின் வீட்டைத் தேடிச் சென்று தட்டி எழுப்பி மாலதியிடம் உண்மையைச் சொல்லி அந்த ஸ்டாம்பை திரும்பக் கொடுத்தான். மாலதி மிகவும் சந்தோஷமடைந்தாள். ராஜன் அதிலும் மிகவும் சந்தோஷத்தோடே வீட்டுக்குப் போனான். உண்மையை சொல்ல மறுத்த நெஞ்சின் அழுத்தம் அப்பொழுதுதான் நீங்கியது. மனப் போராட்டத்தின் இறுதியில் மனச்சாட்சி வென்றது.

ஒருவன் பிறர் லட்சியத்திற்காக இறக்க முடியும். ஆனால் அவன் வாழ்வதானால் தன் லட்சியத்திற்காகவே வாழவேண்டும்.

—இப்ஸன்

ஃ ஃ ஃ

ரோஜா மலரும்போதே அழகு மிகுந்திருக்கும்; அச்சம அகலும்போது அரும்பும் நம்பிக்கையே அதிக உற்சாகம் அளிப்பதாகும்.

—ஸ்காட்

ஃ ஃ ஃ

நீ எண்ணுவது எல்லோர்க்கும் சொந்தம், நீ உணர்வதே உனக்குச் சொந்தம்.

ஹிட்லர்—

உயிர்கொடுக்கும் உழவன்!

(ஆஸ்தான கவிஞர் வெ. ராமலிங்கம் பிள்ளை)

உணவுப் பொருள்களை அடையாமல்
உயிரோடிருப்பது முடியாது;
பணமும் அதுதரும் பலமெல்லாம்
பயிர்கள் விளைவதன் பலனேயாம்.

உழவுத்தொழிலே உணவுதரும்,
உடையும் அதனால் அணியவரும்;
பழகும் பற்பல தொழில்யாவும்
பயிர்த்தொழில் இன்றேல்
விழல் ஆகும்.

தங்கமும், வெள்ளியும் இருந்தாலும்
தானியம் ஒன்றே விருந்தாகும்;
இங்கதன் உண்மையை
உணர்ந்திடுவோம்;
ஏர்த்தொழில் சிறக்கத்
துணிந்திடுவோம்;

* தமிழ் மொழி வாழ்த்து *

* பாரதியார் *

வாழ்க நிரந்தரம், வாழ்க தமிழ் மொழி
வாழிய, வாழியவே!
வானம் அளந்த(து) அனைத்தும் அளந்திடு
வண்மொழி வாழியவே!
ஏழ்கடல் வைப்பினும் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே!
எங்கள் தமிழ்மொழி! எங்கள் தமிழ் மொழி!
என்றென்றும் வாழியவே!
சூழ்கலி நீங்க, தமிழ் மொழி ஓங்க
துலங்குக வையகமே!
தொல்லை வினைதரு தொல்லை அகன்று
சுடர்க தமிழ்நாடே!
வாழ்க தமிழ் மொழி! வாழ்க தமிழ் மொழி!
வாழ்க தமிழ் மொழியே!
வானம் அறிந்தது அனைத்தும் அறிந்து
வளர் மொழி வாழியவே!

அமரர் "கல்கி"யின் வாழ்த்து

சென்னையில் "கல்கி" என்ற வாரப் பத்திரிகையை நிறுவி, அதை உலகெங்கும் பரப்பிய பெருமை திரு. ரா. கி. அவர்களைத்தான் சாரும். "கல்கி" நமக்கு அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தி சென்ற ஆண்டில் வெளிவருவதாக இருந்த "பர்மா நாடு" பொங்கல் மலருக்கென அனுப்பியதாகும்.

கல்கியின் அரசியல் கட்டுரைகளும் கற்பனைக் கதைகளும் மக்களைப் பரவசப்படுத்தியுள்ளன. இவரின் எழுத்தோவியங்களில் காணப்படும் சொல்லழகும், பொருளாழமும் பிரமிப்பூட்டும் தன்மையன. கல்கியின் தமிழ் நடையை, தமிழ்ப் பேராசிரியர்களுங்கூட "கல்கி வளர்த்த தமிழ்" எனச் சிறப்பித்துக் கூறுகிறார்கள்.

திரு. ரா. கி. தலைசிறந்த எழுத்தாளர்களில் ஒருவர் என்பதை நெடுங்காலத்துக்கு முன்னராகவே "ஆனந்த விகடனி"லும், ராஜாஜியின் "விமோசன"த்திலும் வெளிவந்த கட்டுரைகள் வலியுறுத்திக் காட்டுகின்றன.

அரசியல் மேதை ராஜாஜியின் அன்பையும், மதிப்பையும் பெற்றவர். சுதந்திரப் போரில் மூழ்கி எழுந்த தியாகி. காந்தியடிகளின் ஒப்பற்ற சீடர். காந்தி அண்ணல் தொடுத்த அறப் போரில் தமிழகத்தைத் தனது எழுத்தால் தட்டி எழுப்பித் துணைபுரிந்த செயல் வீரர்.

சென்ற ஆண்டில், தமிழகத்தில் புதுமைத் தமிழின் இனிமையை உருவேற்றிய வீரத் தமிழன் குரல் ஒடுங்கிவிட்டது. தமிழுக்குப் பேரொளியைத் தந்த பேரறிவாளனின் பேனாவும் ஓய்வு எடுத்துக்கொண்டது! தமிழ் வளர்த்த தமிழரை —அமரர் கல்கியை தமிழ் கூறு நல்லுலகம் இழந்தது குறித்து பர்மாத் தமிழர்களின் கண்கள் கலங்கின; இதயம் துடித்தன!

சிரஞ்சீவியாக அமரத்துவம் பெற்றுவிட்ட நம் அன்பர் வாழ்க!

வளர்க "கல்கி"யின் புகழ்!

★

கற்பனைச் சிற்பி

தமிழ் வளர்த்த தமிழர்!

"பர்மா நாடு" பத்திரிகை பர்மாவிலுள்ள தமிழ் மக்களுக்குச் சிறந்த தொண்டுகள் ஆற்றி, அங்கு வாழும் தமிழர்களுக்கும் தாய்த் தமிழ்நாட்டுக்கும் தொடர்பு அளிக்கும் சாதனமாகவும் விளங்கவேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

"பர்மா நாடு" பொங்கல் மலருக்கு என் மனமார்ந்த வாழ்த்துக்கள். இவ்வாண்டு பொங்கல் பண்டிகையின்போது பர்மாவிலுள்ள தமிழர்களின் இல்லங்களில் பால் பொங்கட்டும்! அவர்களுடைய உள்ளங்களில் அன்பும், இன்பமும் பொங்கட்டும்!

—ரா. கிருஷ்ணமூர்த்தி.

(ஆசிரியர் "கல்கி" 31—12—53)

திரைகடல் தாண்டிய .... தமிழர்க்கு

திருமதி: எஸ். விஜயலட்சுமி எம்.ஏ.,எம்.லிட்.

பண்டை நாகரீகம் படைத்த தமிழர்கள் நாகரீக உச்சியில் திளைத்துக்கொண்டிருந்த காலத்தில், கடல்கடந்து சென்று வியாபாரம் செய்தனர். "திரைகடலோடியும் திரவியம் தேடு" என்ற வாக்கிற்குத்தகுந்த வாழ்க்கையை மேற்கொண்டவர்கள் கடல்கடந்து சென்ற தமிழகத்தின் குழந்தைகள் ஆங்காங்கே சென்ற இடமெல்லாம் குடியேறி வாழ்க்கையை நடத்திய இவர்கள் நம் கலை உணர்ச்சியையும், பண்பாட்டையும் அயல்நாட்டினர் நன்கு அறியச்செய்தவர்கள், உங்களைப்போன்ற தமிழகத்தின் குழந்தைகள் தான்!

வெகு தூரத்தில் பர்மா நாட்டில் நீங்கள் வாழ்ந்தபோதிலும்கூட, நீங்கள் தமிழகத்தின் குழந்தைகள் தானே! ஆகவே எங்கள் நினைவு உங்களிடம் இருக்கிறதென்பதை தெரிவிக்க விரும்புகிறேன்.

பரந்த நோக்கத்தை உடைய தமிழ் மக்களாகிய நீங்கள் எங்கு சென்றாலும் நம் தாய் நாட்டில் இருப்பதுபோன்று சரளமாகப் பழகி வாழ்க்கையை இனிதே நடத்தக்கூடியவர்கள். உலகமெல்லாம் நாம் இருக்குமிடம்; உலகிலுள்ள மக்களெல்லாம் நம் சுற்றத்தார்கள், என்ற பண்டைத்தமிழர்களின் குறிக்கோளிற்கு நீங்கள் தான் எடுத்துக்காட்டு.

பல ஆயிரம் மைல்களுக்கு அப்பால் பர்மா நாட்டில் வாழும் நீங்கள், கன்னித்தமிழகத்தின் பெருமைகளையும், கலைச் செல்வங்களையும் அந்நாட்டவர் போற்றும் வகையில், தமிழர்களின் அறநெறி வாழ்க்கையை கடைப்பிடிப்பீர்கள் என்பதில் சந்தேகமே இல்லை. அதுவே நீங்கள் தமிழன்னைக்கு அளிக்கும் காணிக்கை. தமிழகம் தந்த குழந்தைகளாகிய உங்களுக்கு எனது வாழ்த்துக்களை இந்தநன்நாளில் அனுப்புகிறேன்.

குறிப்பு: திருமதி விஜயலட்சுமி அவர்கள் தமிழ் நாட்டில் பிரபல சோஷலிஸ்ட் பேச்சாளர்—எழுத்தாளர்—அகில இந்திய இளைஞர் இயக்கத்தின் கூட்டுச் செயலாளர். மாதர் சமுதாய முன்னேற்றத்தில் பேரார்வம் கொண்டு ஓயாது உழைக்கிறார். "பர்மா நாடு"விலும் தொடர்ந்து எழுதுவார் என்று நம்புகிறோம்.

நெடிது வாழ்க!

"முகிலரசு"

செந்நெல்லும் செம்பொன்னும்
செம்மையோடு விளைவுதந்து
சிந்தை மகிழ் வாழ்வீந்து
சீரியநற் பண்புடைய
நன்னாடாம் நானிலத்தில்
நனிசீர்மிகு நந்தமிழகம்
எந்நாளும் எழிலோடு
ஏழ்மையற்று நீடுவாழ்க!
வஞ்சகமாய் வேடம்பூண்டு
வளமான தமிழகத்தை
நஞ்சுள்ள வெள்ளையர்கள்
நயமாக அடிமைகொண்டு
நெஞ்சுருக கொடுமையிந்து
நேர்மையெனும் நெறிதவறி
கொஞ்சமேனும் அஞ்சாத
கொடுங்கோலைக் கண்டவுடன்
வீரமிகு வேங்கைபோல்
வெகுண்டெழுந்த "தளபதிகள்"
தீரமுடன் அறப்போர் செய்து
தயங்காது சுதந்திரத்தை
நேரிய நற்றுறையினிலே
நீணிலத்தி லமைத்தீந்து
வீரியமாய் வெற்றிகண்ட
வீரர்குழாம் நெடிது வாழ்க!

விஞ்ஞானமே............ நீ சிறிது ஓய்வு எடுத்துக்கொள்ளுகிருயா ?

புரோபஸர் கே. ஜி கிருஷ்ணன்,
பி. எஸ். ஸி. (ஹானர்ஸ்) எம். எஸ். ஸி,
பௌதீகக் கலை தலைமை ஆசிரியர், அழகப்பாகல்லூரி, காரைக்குடி.

[விஞ்ஞானத்தின் சக்தி விசித்திரமானது; அதன் வளர்ச்சி அற்புதமானது; அதன் ஆற்றல் அளவிடற்கரியது. இன்றைய, நிலையோ குலைநடுங்கும் பயங்கரமானது. மக்களே எளிதில் புரியாத விஞ்ஞானத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்து அன்பர் எழுதியுள்ள விஞ்ஞானம் நிறைந்த இந்த அரிய கட்டுரையை ஊன்றிப் படிக்கவும்]

ஏ விஞ்ஞானமே !

நீ உலகந் தோன்றிய காலத்திற்கு முன்பே தோன்றினுய். உன் அடியை ஒருவாறு கண்டதாகக் கொண்டாலும் உன் முடிவைக் காண்பது எக்காலமோ? நீ எங்கும் நிறைந்தவன். புத்தப் புதியவற்றிலெல்லாம் வியாபித்திருக்கிருய். உன் வளர்ச்சியிலே ஆனந்தப்பரவசம் அடைவோர் பலர். உன் அருளினுல் இயற்கையை வெற்றி கொண்டுவிட்டோம். மனிதன் மகாத்மா, மிகுந்த சக்திவாய்ந்தவன் என்று வெறிபிடித்திருப்பவர் பலர். உன் பலாபலன்களையும், விஞ்ஞானிகளையும் அடக்கி ஆண்டு சுரண்டி பிறர்களை நசுக்கித் தங்கள் சுயநலங்களை மாத்திரம் தேடிக்கொள்ள தவங்கிடப்பவர் பலர். இவ்வாருக உலகப்போக்கில் உன்னைப்பலர் பலவிதமாக நட்புக்கொள்ள ஆரம்பித்துவிட்டனர். ஆனுல் விஞ்ஞானிகள் மாத்திரம் தங்கள் உடல் பொருள் ஆவி இவைகளை தத்தம் செய்து உன்னை விருத்திசெய்து பெருமைகளை நிலைநாட்ட அல்லும் பகலும் அனவரதமும் ஓய்வின்றி, உறக்மின்றி, உழை உழை என்று அரும் பாடுபட்டு வருகின்றனர்.

விஞ்ஞானமே நீயார்?

இப்பிரபஞ்சத்தின் பால் ஏற்பட்ட சகல உண்மைக்கருத்துக்களை ஒருங்கே சேகரித்து சந்தேகமற்று ஒழுங்கான விதத்தில் வியாக்கியானம் செய்து எவரும், எந்த சமயத்திலும் பரிட்சார்த்தமான சோதனைக்குட்பட்ட திட்டவட்டமான உயர்ந்த தத்துவமே நீ. உன் கருத்துக்கள்யாவும் அனேக சட்டதிட்டங்கள், கோட்பாடுகளால் சேர்த்து உருவாக்கப்பட்டிருக்கின்றன.

மனிதன் உயிரைக் காப்பாற்றிக்கொள்ளும் பொருட்டு அக்காலத்தில் இயற்கையைச்சிறிது சிறிதாக உபயோகிக்க முற்பட்டான். கல்லோடு கல்லை உரசி நெருப்பையும், கல், இரும்பு இவைகளால் பலவித ஆயுதங்களையும், செய்து உணவையும், உடையையும் தேடிய கற்காலத்திலேயே நீ உருவு கொண்டுவிட்டாய். மனிதன் விஞ்ஞான அறிவை அவசியத்தின் பொருட்டு தன்னைச்சுற்றி, பல திறப்பட்ட வழிகளில் தேடமுயன்று, ஒவ்வொருவர் கூறியவற்றைச் சோதனை செய்து பாராமல் அப்படியே நம்பி வந்த காலத்தில் உன்னை அறியும் அறிவு முன்னேற்றமடையவில்லை. மனிதன் தான் உணர்ந்த கருத்துகளைப் பரிட்சார்த்தமாக ஆராய்ந்து உண்மையெனக்கண்டகாலந்தொட்டுத்தான் உன் பெருமையும் முன்னேற்றமும் உயரத்தொடங்கிற்று.

விஞ்ஞானமே நீ எங்கெங்கு உதயமானுய்?

நாகரிகம் ஏற்பட்ட காலத்திற்கு முற்பட்ட சுமார் 6000 ஆண்டுகட்கு முற்பட்ட மனிதவர்க்கத்தின் அறிவு முன்னேற்றம் அதிகம் தெரியாமலிருந்தது, அவர்கள் பாடம் செய்து வைத்த கல்லறைகள், கல்வெட்டுக்கள் தோண்டி எடுக்கப்பட்டு சோதனை செய்த வகைகளில் அக்கால சமுதாயம் சாதாரண சமயபாடுடன் வாழ்ந்ததாக அறியப்பட்டது. அவர்கள் விண்மீன், பூமி,

ஆகாயம், சமுத்திரம் இவைகளுக்கு உயிர்த்தன்மை சில கடவுள்களால் அல்லது தேவதைகளால் கொடுக்கப்பட்டது என்று நம்பினர். இயற்கையின் விசித்திர வேலைப்பாடுகள் சிற்சில கடவுள்களின் கண் கட்டுவித்தை என்று கருதினர் விண்மீன்களும், கிரகங்களும் மனிதனின் விதிகளைக்கட்டுப்படுத்துகிறதென்று வானசாஸ்திரத்தில் கவனம் செய்ய ஆரம்பித்தான். இதனுல் கணித சாத்திரம், பௌதிகம் முதலிய விஞ்ஞானப்பகுதிகள் ஆங்காங்கு ஆரம்பித்தன. ஈயம் முதலிய சாதாரண உலோகங்களைத் தங்க மாக்கிவிடவேண்டும் என்ற பேராசைகொண்டு இரசாயன முறைகளும் தொடங்கின. எகிப்தியரின் நாகரிகம் சுமார் கி. மு. 4000 வருடங்களுக்கு முன் தொடங்கிற்று. கி. பி. 300–1100 வருடங்கள் வரை ஐரோப்பிய தேசம் அஞ்ஞானத்தில் ஆழ்ந்திருந்தது. கி. பி. 700 ஆண்டுகளில் அரேபியர், கிரேக்கர், இந்திய நாடுகள் பௌதிகம், கணிதம், வானசாத்திரங்களில் உதயம் பெற்றன. 17-ம் நூற்றுண்டில் சாத்திர அளவுகளை, சோதனைக்கூடங்களில் சரிபார்க்கும் வகையில் கலிலியோ முன்னேற்றமடைந்தார். 1660-ல் உலகஞ்சுற்றி புதிய நாடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. இதிலிருந்து விஞ்ஞானமே நீ புத்துயிர்பெற்று நாளொருமேனியும், பொழுதொரு வண்ணமுமாய் வளர ஆரம்பித்தாய்!

உலக சரித்திரத்தில் ஏ விஞ்ஞானமே நீ ஆரம்பமான முக்கிய இடங்கள் தெரியுமா?

சீன கி. மு. 3000, எகிப்து கி. மு. 3000–300, கிரீஸ் கி. மு 600–கி. பி. 300, ரோமாபுரி கி. மு. 200–கி. பி. 400, இந்தியா கி. மு. 1000–கி. பி. 500, சிரியா கி. பி. 650–1300; ஸ்பெயின் (அரேபியர் ஆக்ரமித்த) கி. பி. 700–1300, பிரான்ஸ், ஜெர்மனி, கி. பி. 1200.

விஞ்ஞானமே! உன் ஆக்கவேலைகளின் அற்புதந்தான் என்ன?

விஞ்ஞானத்தின் பெருமைகளையும், அவசியத்தையும் தெரிந்துகொள்ள மனிதன் தன்னைச் சுற்றிக் காணும் ஒவ்வொரு பொருளிலும், நிகழ்ச்சியிலும் காணமுடியும். உடுக்க உடையின்றி, இருக்க வீடின்றி, உண்ண நல்ல உணவின்றி இலைகளையும், தழைகளையும் அணிந்து பனியாலும், வெயிலாலும் வெம்பி, கண்டவற்றை யெல்லாம் உண்டு காட்டுமிராண்டிகளாய்த் திரிந்து, நோயினுல் திடீர்த் திடீரென்று மாண்டுபோய்க்கொண்டிருந்த மனித வர்க்கத்தைத் தற்சமயம், பட்டுப்பீதாம்பர ஆடைகளுடன் கூடகோபுர வானளாவும் அரண்மனைகளில் வாழ்ந்து, நாவுக்குச் சுவையான பட்சணங்களை பக்குவமாய் உண்டு, வாயு வேகம், மனோவேகத்துடன் நினைத்த இடங்களுக்கெல்லாம் செல்லும் நாகரீக உச்சத்தில் உயர்த்திய பெருமை, விஞ்ஞானமே உன்னையல்லவா சாரும்.

பாலைவனங்களையும், காடுகளையும் நாடுகளாக்கி மாந்தர் உல்லாசமாய் வாழும் சோலைகளாகவும், தானியங்கள் விளையும் பொன்னிலங்களாகவும் மாற்றினுய்! பிறந்த போதே இறக்கும் நிலையை மாற்றி, நோயினுல் அப்போதைக்கப்போது மாண்டகாலத்தை மாற்றி, நோய்கள் வராமலும், வந்தாலும் உடனுக்குடன் தடுக்கவும் மக்கள் திடகாத்திரமாய் வெகுநாள் நீண்ட ஆயுளுடன் வாழ வைத்தது யார்? மக்களின் தொகை கோடிக்கணக்காய் நோயின்றி சாவின்றி விரிந்துண்டாகச் செய்தது யார்? 1750ல் பூலோகத்தில் ஒரு பக்கத்திலிருந்து மறு பக்கம் போக ஆறு மாதங்கள் சென்றதை ஆறு வாரங்களாக்கினுய்! 1900—1949ல் ஆறு வாரங்களாக இருந்ததை இரண்டு நாட்களாகவும் செய்துவிட்டாய்!

வாயு மண்டலத்தை ஆகாய விமானம், புகைக்கூண்டுகள் மூலமாக மனிதன் உயரச் சென்று அதன் நிலைமைகளை ஆராய்ந்து வரச் செய்தாய்! உயரச் செல்லுவதால் உண்டாகும் தாங்கமுடியாத குளிர்ச்சி, வாயு அமுக்கக் குறைவால் எழும் இரத்த வெடிப்பு, பிராண வாயுவின் குறைவு இவைகளை எல்லாம் வென்று பூமியின் முடியாகிய எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி நின்று வரவும், புகைக் கூண்டுகளில் ஏறி சுமார் 12 மைல் உயரமும், மனிதனில்லாப் புகைக்கூண்டுகள் சுமார் 25 மைல் உயரமும் ரேடியோ நீண்ட மின் அலைகள் சுமார் 50 மைல் பிரதிபிம்பிக்கவும் குறுகிய மின் அலைகள் சுமார் 150 மைல் பிரதிபிம்பிக்கவும் செய்து

(தொடர்ச்சி 59ம் பக்கம் பார்க்க)

தமிழக "வங்க"ப் புரட்சி!

பன்மொழிப் புலவர்

திரு. கா. அப்பாத்துரை, எம். ஏ. (லிட்); எம். ஏ. (தமிழ்) எல். டி.

வங்கம், மாநிலப் பேரியக்கத்துக்குத் தந்த தூண்டுதல் மிகப் பெரிது. ஆனால், இயக்கம் மாநில எல்லைக்குச் சென்ற பின், வங்கம் தற்காலிகமாக அதன் தலைமை நிலையிலிருந்து நழுவிற்று. 1905-ம் ஆண்டுப் பேரவையில் வங்கப் பிரிவினைக்கு எதிர்த் தாக்குதலாக இளவரசர் வருகையை ஏற்க மறுக்கவேண்டுமென்ற தீர்மானம் கொண்டுவரப்பட்டபோது, வங்கப் புரட்சித் தலைவர் சுரேந்திர நாதரே அதை எதிர்த்து நிறைவேறவொட்டாமற் செய்தார். வங்கப் புரட்சிக்கிடையே அவர் படிப்படியாக மிதவாதிகளின் பக்கமாகச் சாய்ந்தார். வங்கம் தற்காலிகமாக மிதவாதிகளின் கோட்டையாகி வந்தது. ஆனால் இதற்குள் தீவிர இயக்கத் தலைமையைத் தமிழகமும், மராட்டியமும், பாஞ்சாலமும் ஏற்றன. வங்கத்துக்கு அடுத்தபடியாகத் தமிழகம் நின்று வீறுடன் வழி காட்டிற்று. தமிழகத்தின் தனிப்பெருந் தலைவரான **கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரனார்** தலைமையில் அது **'வெள்ளையனே வெளியே போ!'** என்ற குரலை முதன் முதலாக எழுப்பிற்று. 1907-இல் வீரத் தமிழர் எழுப்பிய இந்தக் குரலே, 1942-ல் மீண்டும் பேரவைத் தலைவரால் உயிர்ப்பிக்கப்பட்டு, 1947-ல்வெள்ளையரை வெளியேற்றிற்று என்பதைக் காணலாம்.



'வெள்ளையனே, வெளியே போ!' என்ற வீரத் தமிழர் குரல், வீரமட்டும் உரியதன்று. அது தமிழ் மரபில் வழுவாமல் 'வெள்ளையனே **உன் கப்பல்களுடன் நீ** வெளியே போ! **யாமே எம் கடல் ஆண்டு வாழ்வோம்',** என்று கூறுவதாயுமமைந்தது. வாணிசப் பண்பிலும், தொழில் பண்பிலும் வளர்ந்த பண்டைத் தமிழக மரபு, தேசிய இயக்கத்தையும் வாணிகத் தொழில் மரபில் வளர்க்கத் தலைப்பட்டது. **சுதேசி கப்பற் கழகமும், சுதேசித் தரும சங்க நெசவு சாலையும், சுதேசிப் பண்டக சாலையும்** அமைத்துத் தூத்துக்குடியிலிருந்து வ. உ. சிதம்பரனார் போர் தொடங்கினார். போரின் இரு கூறாக இந்தியாவிலேயே முதன் முதல் அவர் தொழிலாளர் சங்கங்கள் பல அமைத்து தொழிலாளர் பெரும் போராட்டங்களும் நடத்தினார்.

வங்கத் தேசியமும் தமிழகத் தேசியமும்

வங்கத் தேசிய இயக்கத்தின் பல பண்புகளை நாம் தமிழகத்திலும் சிறப்பாகக் காண்கிறோம். வங்கத்தில் தேசிய இயக்கம் வருமுன்னரே, மொழி, கலை, சமய இயக்கம் சிறந்திருந்தது. தமிழகத்திலும் நாம் அதே நிலையைக் காண்கிறோம். அத்துடன் தமிழக மரபுகள் வங்க மரபு கடந்து பழங்கால வீர அரச மரபு, பத்தி இயக்கம், தாய்மொழி இயக்கம், ஆகியவற்றின் தொடர்ச்சியாய் இயங்குவதையும் நாம் கவனிக்

கலாம். பண்டைவீர வாழ்வின் புதுமலர்ச்சியை நாம் பாஞ்சாலங்குறிச்சியில் கண்டதுபோலவே. பண்டைய சமய, கலை, இலக்கிய வாழ்வை **மறைமலையடிகள்** யின் பல பண்புகள் காட்டுகின்றன.

கப்பலோட்டிய தமிழர் வ. உ. சி. பாஞ்சாலங்குறிச்சி மண்ணில் கட்டபொம்மன் திடலுக்கு அருகிலேயே பிறந்தவர். அவர் தூத்துக்குடிச் சைவசித்தாந்த சபை, பிரமஞான சங்கம் ஆகியவற்றிலும், மதுரை தமிழ்ச் சங்கம், வாலிபர் சங்கம் ஆகியவற்றிலும் தொடர்புடையவராய்ச் சமயப்பணி, தமிழ் மொழிப் பணி, அரசியற் பணி, தொழிலாளர் பணி ஆகிய யாவற்றிலும் முழுப்பங்கு கொண்டிருந்தார். தமிழில் திருக்குறள் உரைகளும், தொல்காப்பிய உரைகளும் பதிப்பித்தும், நூல்கள் எழுதியும், புலவர்களுக்கு அவர் வழிகாட்டியாய் இருந்தார்.

வ. உ. சிதம்பரனர் கப்பற் கழகத்தைப் பெருத்த எதிர்ப்புகளுக்கிடையிலும் இடர்களுக்கிடையிலும் அயராது நடத்தி, வெள்ளையர் தலைமையிலிருந்த பி. ஐ. எஸ். என். கழகத்தை (B. I. S. N. Co.,) எதிர்த்துப் போட்டியிட்டார். அத்துடன் வங்கத்தில் விபின சந்திரர் சிறைப்பட்ட நாளை ஒட்டிப் பேரவை இயக்க எதிர்ப்புகொண்டாட்டங்களையும் தமிழகமெங்கும் சிறப்பாக நடத்தினர். அவர் இச்சமயம் தலைமை மேற்கொண்டு இயக்கிய தொழிலாளர் வேலை நிறுத்தமும் வெற்றி கண்டது.

இச்சமயம் பழைய புரட்சி மரபில் வந்த ஒரு கொடுஞ்செயல் நிகழ்ந்தது. மாவட்டத் தலைவரான **ஆஷ்** என்ற வெள்ளையரை எவனோ ஆத்திரக்காரன் சுட்டு வீழ்த்திவிட்டான். அக் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட பல நண்பர்களுக்காக **வ. உ. சி.** போராடினர். ஆனல் அதனை அரசியற்கொலையாகக் கொண்டு அவரே அதற்கும், அது போன்ற அரசியலைக் கவிழ்க்கும் செயல்களுக்கும் மூலகாரணர் என்று குற்றஞ்சாட்டி, அரசியலார் அவரை மூன்று நாடு கடத்தல் தண்டனைகளுக்கு ஆளாக்கினர்.

1908 முதல் கப்பலோட்டிய வ. உ. சிதம்பரனர் கடுஞ்சிறையில் செக்கிழுத்தல் கசையடி முதலிய உயிர்வாதை முறைகளால் சொல்லொணாத் துயர்களுக்காளானர். சிறை விடுதலை பெற்று நெடுங்காலம் கழித்து வந்த பின்னும் அவர் அரசியலாராலும், அடிமைப் புத்திபுள்ள பிற்காலப் பேரவை மிதவாதியர் பலராலும் ஒதுக்கடிக்கப்பட்டு வறுமைக்கும் உட்பகைகளுக்கும் ஆளானர். ஆனல், அவர் இறுதிவரை நிமிர்ந்து நின்று இந்தியாவின் முழு நிறை விடுதலைக் கனவு கண்டு, அதற்கு அயராது உழைத்து வந்தார்.

கப்பலோட்டிய தமிழரான வ. உ. சிதம்பரனர் தமிழகத்தின் முடிசூடா மன்னராயும், தொழிலாளரியக்கத்தின் முதன் முதல் அனைத்திந்தியத் தலைவராயும் விளங்கினர். அத்துடன் இந்தியத் தலைவர்களிடையே காலங்கடந்த தொலை நோக்குடைய தலைவராயும் அவர் வீறுடன் நின்று நிலவுகிறர். அவருக்குப் பின் வந்த தீவிரவாதத் தலைவர்களுள் செயல் துறையில் அவருக்கு ஒப்பான செயற்கரிய பெருஞ் செயல்கள் செய்த பெரியாராகத் தலைவர் பெருந்தகை **போஸ்** நீங்கலாக எவரையும் கூறமுடியாது. இவ்விருவருக்குமிடையே காந்தியடிகள் தலைமை இவர்களைத் தாண்டி ஒளி வீசிற்றுயினும் அது நாடு கடந்த உலக எல்லையும், அரசியல் கலந்த ஆன்மிக எல்லையும் அளாவியதாதலால், இவர்களுடன் ஒப்பிடத்தக்க தலைமை என்று கூறமுடியாது. வ. உ. சி. கண்ட **கப்பற்கனவு** காந்தியடிகள் கண்ட கனவுகளையும், ஓரளவு தலைவர் பெருந்தகை கனவுகளையும் தாண்டித் தமிழரின் பண்டை வாணிக மரபைச் சுட்டிக் காட்டுவதாய் உள்ளது.

—வழிநூல்: இந்திய மக்கள் விடுதலை இயக்க வரலாறு.

★

சிங்கம் வீழ்ந்தது

திரு. வி. கலியாண சுந்தரனார்

பாரதமாதாவின் அடிமைத் தளையை உடைத்தெறியப் பிறந்தவருள் மௌலானா முகமத் அலியும் ஒருவர். முகமத் அலி உரிமை விதையில் தோன்றியவர்; உரிமைப் பாலை உண்டவர்; உரிமைக் காற்றில் வளர்ந்தவர். அவர் எண்ணியது உரிமை; அவர் பேசியது உரிமை; அவர் நிகழ்த்தியது உரிமைப்போர். அவரது வாழ்வே உரிமை வாழ்வாக விளங்கிற்று. அவர் இறுதிக் காலத்தில் கூறியதென்ன? 'உரிமை இந்தியாவிற்கே செல்வேன், இல்லையேல் இங்கிலாந்திலேயே உயிர் துறப்பேன்' என்றன்றோ கூறினார்? அவரது உரிமை வேட்கையை என்னென்றியம்புவது? அப்பெறற்கரிய உரிமைச் செல்வத்தை நாடு இழந்தது.

மௌலானாவின் வேட்கைக்கேற்ற நெஞ்சும், நெஞ்சுக்கேற்ற நோக்கும், நோக்குக்கேற்ற நடையும், நடைக்கேற்ற பேச்சும், பேச்சுக்கேற்ற செயலும் அவர்பால் அமைந்திருந்தன. அவரது உரிமை வேட்கையையும்-அஞ்சாநெஞ்சையும்-சிங்க நோக்கையும்-பீடு நடையையும்-மின்னொளியையும்-கோடை இடியையும்-பெரும் புயலையும் ஒருங்கேதிரட்டி எழுப்பவல்ல பேச்சையும், விடுதலைப் போரையும் நாடு இனி என்றே கேட்கும்? என்றே காணும்? என்றே பெறும்? மௌலானாவின் பிரிவால் நாட்டுக்குற்ற நட்டம் அளப்பரிது. அதற்கு ஈடு காண்டல் இன்றில்லை.

• மௌலானா முகமத் அலி

மௌலானா முகமத் அலி இளமையில் கற்பன கற்றுக் கேட்பன கேட்டவர்: அவர் இக்காலத்துக்கு இன்றியமையாத ஆங்கிலத்தில் புலமை பெற்றவர். பட்டதாரி; சமயக் கல்வியும் உடன் பெற்றவர். உரிமைப் போராட்டத்தில் அவரைத் தலைப்படுத்தியது அவரது சமயக் கல்வியாகும்.

உரிமை உணர்வுள்ள இடத்தில் தியாகமிருத்தல் உண்மை மௌலானாவின் உரிமை வேட்கை அவரைத் தியாகமூர்த்தியாக்கிற்று. மௌலானா 'காம்ரேட்', 'ஹம்தர்த்' என்னும் பத்திரிகைகள் நடாத்தி நாட்டைத் தட்டியெழுப்பியதும், அதன்பயனாகவும், வேறு சில காரணம் பற்றியும் அரசாங்கத்தார் அவர் தஞ்சொத்துக்களைப் பறிமுதல் செய்து அவரைக் காப்பில் வைத்ததும் நேயர்கட்குத் தெரியும். ஐரோப்பாப் போர்க்கால முழுவதும் நமது இந்திய சிங்கம் காப்பிலே வைக்கப்பட்டிருந்தது. தேசத்தின் பொருட்டும், மார்க்கத்தின் பொருட்டும் தமக்கிருந்த் பொருளெல்லாவற்றையும் இழந்த தியாகமூர்த்தி நம் மௌலானா முகமத் அலி.

பொருளிழப்பும், காப்பு வாழ்வும் மௌலானாவை அதிகாரவர்க்கத்துக்குப் பணியச் செய்யவில்லை. 1919-ம் ஆண்டில் அவரும் அவர் தமயனாரும் காப்பினின்றும் விடுதலையடைந்தனர். விடுதலையடைந்ததும் அலி சகோதரர்கள் யாண்டுச் சென்றார்கள்? அதுபோழ்து அமிர்தசரசில் கூடியிருந்த காங்கிரஸ் "வீட்டிற்கு" நேரே போந்தார்கள். அங்கே அப்பொழுது நமது மௌலானா முகமத் அலி நிகழ்த்திய சொற்பெருக்கில் மிடைந்தெழும்பிய வீரத்தை என்னென்று எழுதுவது? பாஞ்சாலப் படுகொலை கனன்றெரிந்த இடம்

அவ்விடம்; காலமும் அக்காலம். அவ்விடத்தில் அக்காலத்தில் மௌலானாவின் வீரப்பேச்சு நெய்யாகிக் கனன்றிருந்த நெருப்பை எழுநாவிட்டெரியச்செய்தது.

பின்னே எழுந்த ஒத்துழையா இயக்கத்தில் மகாத்மா காந்திக்கு வலதுபுறமாக நின்று மௌலானா முகம்மத் அலி தொண்டாற்றியது புத்தம் புதிதாக நேயர்கள் நெஞ்சில் நிலைபெற்றிருக்கும். இமயமுதல் கன்னிவரை, இரவு, பகல், இடையீடின்றி ஊண் உறக்கமுமின்றி காற்றெனத்திரிந்து, தமது கம்பீரத்தோற்றத்தாலும், நோக்கத்தாலும், பேச்சாலும் மக்களுக்குத் தேசபக்தியை ஊட்டியவர் நம் மௌலானா முகமத் அலி. அவர் தேசத்தின் விடுதலைக்கும், கிலாபத்தின் பெயரால் மார்க்கத்துக்கும் நிகழ்த்திய தொண்டு என்றும் மறக்கற்பாலதன்று.

மௌலானாவின் பிரிவால் இந்தியாவிற்கும் முஸ்லிம் உலகிற்கும் பெரு நட்டம் நேர்ந்தது. இந்தியாவின் விடுதலையிலே தணியாக்காதல் கொண்டிருந்த ஒரு புதல்வரை—சிறந்த தேசபக்தரை—இழந்தது, முஸ்லிம் உலகம் ஒரு சமய பக்தரை—வீரரை—இழந்தது.

மௌலானா முகமத் அலி நாட்டு விடுதலை வேட்கையை எழுப்பிச்சென்றார்; அதை ஒவ்வொருவர் உள்ளத்திலும் பதிவித்துச்சென்றார். அவ்வேட்கையை வளர்த்து, நாட்டுக்கு விடுதலை தேடி, அவர் இறுதிக்காலத்தில் மொழிந்த 'உரிமை இந்தியா'வில் வாழ முயல்வது அவர் தொண்டுக்குத் தேசத்தார் கைம்மாறு காட்டும் நினைவுக்குறியாகும்.

கல்லெல்லாம் மாணிக்கக் கல்லல்ல. மனிதரெல்லாம் மனிதரல்லர். மௌலானா முகமத் அலி மனிதப் பிறவிக்குரிய வினைகளை நிகழ்த்தினார். முகமத் அலி செல்வம் சிறந்த குடும்பத்தில் பிறந்தார். தேசத்தின் பொருட்டு அச்செல்வத்தை இழந்தார்; இழந்துஞ் சலிப்புறாது தேசசேவை செய்தார். இத் தியாகமூர்த்தியை அகாலத்தில் இழக்க நேர்ந்தமை குறித்து எவரே வருந்தார்? மௌலானா முகமத் அலியின் பிரிவு குறித்துப் பாரத நாடே வருந்துகிறது; முஸ்லிம் உலகம் வருந்துகிறது; அவர் தம் நண்பர் உற்றார் உறவினர் வருந்துகிறார்; எல்லாரும் வருந்துகிறார்; எல்லாம் வருந்துகின்றன.

மௌலானா முகமத் அலியின் இன்னுயிர் ஆண்டவன் ஒளியில் அமைதி பெறுவதாக.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(நவசக்தி 7-1-1931)

சிங்கத்தை எழுதிய சிங்கமும் வீழ்ந்தது!

வீரத் தமிழ் விளையாடும் திரு. வி. க. வின் கட்டுரையில் பாரத மணித் திருநாட்டில் மாணப் பெரும் தியாகத் தழும் புகளேற்று, மாநிலத் தாயின் அடிமை நிலை அறுக்க அயராது போரிட்ட ஆண்மைச் சிகரங்கள்! ஆம்; சிங்கங்கள் இருவரின் பெயரைக் கேட்டவுடன் நாம் உண்மையிலேயே பெருமிதமடைகிறோம்! ஏன்? வீரச்சாவை அணைத்து மகிழ்ந்த வெற்றி வீரர்களின் திருவுருவங்கள் நம் மனத்திரையில் காட்சி தருகின்றன! அவர்களுக்காக நாம் ஒன்றுஞ் செய்ய இயலாத நிலையில் இருந்தபோதிலும், இச்சுதந்திர மலரின்மூலம் கண்ணீரை உகுத்தாவது 'கைம்மாறு' என்ற முறையில் காணிக்கை செலுத்துவோமாக!

தமிழ்த் தென்றல்—முது பெரும் புலவர்—தமிழ் மாமுனிவர் மணவழகரை-திரு. வி. க. வை-தமிழ் மக்கட்கு அறிமுகப்படுத்துவதானது, பூக்கடைக்கு விளம்பரப் பலகை' வைத்து அழகு பார்ப்பதுபோலாம்! எனவே அவர் தம் பெருமையை—வாழ்வாங்கு வாழ்ந்த வாழ்க்கை வனப்பை-வளர்த்த தீந்தமிழைப் பற்றிய விளக்கத்தைக் கூறும் 'கட்டுரைக் கரும்பு' ஒன்றை தக்கதொரு தருணத்தில் வெளியிடுகிறோம்!

நம்போன்று பலர் எழுத்தாளராக விளங்கு

வதற்கும், எமது 'ஆசான்' என்று பெருமையுறும் நிலைக்கு தியாகமே உருவான சான்றோர் திரு. வி. க. அவர்களின் தொடர்பும், 'நவ சக்தி'யும் அளித்த நல் ஆதரவுமே என்று கூறலாம். முன்பின் சந்திப்பு ஏற்படாத அக்காலத்தில் "பர்மா நாடு" வளர்ச்சியில் ஆக்கமும், ஊக்கமும் ஈந்து, வாழ்த்துக்கூறி "என் கடன் பணிசெய்து கிடப்பதே" என்ற மூதுரையைப் பொழிந்தவர் பெரியார் திரு. வி. க.!

'நவசக்தி'யின் வாயிலாக நடமாடிய தமிழில் 'நவரசம்' ததும்பி வழியக் காணலாம். அதன் ஒவ்வொரு ஏடும் ஒவ்வொரு உண்மையைப் பகன்றுநிற்கும்! அனைத்தும் அறிவுக் கருவூலங்கள், எவர்க்கும் எளிதில் கிட்டாத இலக்கியக் கலைக்களஞ்சியமாகும். அரசியல் வாழ்வில், துடிக்கும் இளமையுடன் குழம்பைக் கக்கிக் குமுறும் எரிமலையாய்-கொந்தளிக்கும் கடலாய்த் திகழ்ந்து, அன்றையச் சூழ்நிலையை அனல் பறக்கும் சொற்களால் கண்டித்திருப்பதை "கொள்ளை எரி அரசியல்" என்ற தலைப்பில் தீட்டிய கட்டுரையே போதுமான எடுத்துக்காட்டாகும், அவரின் புரட்சி வன்மையை அறிய!

எண்ணரிய நூல்கள் யாத்த எழுத்துலகச் சிற்பி-அளப்பரிய அன்புக்கும், விண்ணளாவும், பெரும் புகழுக்கும் உரிய உத்தமர்-கெழுதகை அறிஞர் மரணத்தின் உடும்புப் பிடியிலே சிக்கி, மறைந்தார்! ஆம்; மகர யாழ் மண்ணில் மறைந்தது! 'பேசும் யாழ்' பூமிக்குள் புதையுண்டது! குயில் இனிக் கூவாது! பூதவுடல் மறைந்ததெனினும் அவரின் புகழுடல் மறையவில்லை; இனியும் மறையாது! 'அறிவுலகம்' தமிழகத்தில் இருக்கும்வரை அவரின் பெயர் மங்காது; மாறாக மின்னிக்கொண்டேயிருக்கும்!

சொல்லின் அரில் அகற்றும் கேள்வியாளரும், தன்குணம் குன்றாத் தகைமையாளரும், தொல்குடியின் மாண்டார் தொடர்புடையவரும்-பழுத்த தமிழ்ப் பெரியாருமான திரு. வி. க. வின் மறைவின் இறுதியிலே-அவரது பூதவுடலுக்கு-ஒரு சில அறிஞர்களைத் தவிர, தமிழகத்தின் அரசியல்துறைத் தலைவர்கள் ஏற்றமுறையில் வணக்கம் செலுத்தத் தவறிவிட்டனர்.

தமிழ்த் தென்றல் !

திரு. வி. க.

நன்றி மறந்த இச்செயலை பலர் இன்னும் நினைத்து நினைத்துப் பொருமி அழுகின்றனர். பத்திரிகைகளும் இதைப் பலமாகக் கண்டித்து எழுதின. பர்மாத் தமிழர்களோவெனில் உள்ளமும் உயிரும் துடியாய்த் துடித்துப் புலம்பினர், வெம்பினர், இறுதியிலேனும் திரு. வி. க. என்ற மாமணியைக் காணமுடியாமல்போய்விட்டதை எண்ணி வருந்தினர்!

தெற்கில் இத்தவமுனிவர் திரு. வி. க. வைப் போன்றே வடக்கில் பாரதத்தின் தனிச்சுடராய் கதிர் பரப்பும் கதிரவனாய்-பட்டை தீட்டிய வைரமாய் நம் மௌலானா முகமது அலி விளங்கினார்!

'கிலாபத்' பிரச்னையில் அலி சகோதரர்கள் மகாத்மா காந்தியுடன் தீவிரமாக நடாத்திய போராட்டம் உலகப் புகழ் பெற்றதாகும்! மௌலானா அவர்களின் வீரமுழக்கத்தைக்கேட்டு இடியோசை கேட்ட நாகம்போல், பரங்கிய ஏகாதிபத்தியமே அரண்டது என்றே கூற வேண்டும். மௌலானா அவர்கள் பர்மாவுக்கு வருகை தந்திருந்த காலத்தில் காலஞ்சென்ற ஆலி ஜனாப் விஜயன் அப்துல் ரஹிமான் அம்பலம் என்ற நம் மதிப்புக்குரிய தமிழ் முஸ்லிம் பெரியார் அவர்களின் விருந்தினராக இருந்தார். அதுசமயம் அறிஞர் கரீம்

கனி அவர்களுடன் நாமும் சதா நெருங்கிப் பழகும் வாய்ப்பும் கிடைத்தது. மௌலானு அவர்களின் 'திருநிறை' மொழியால் 'பர்மா நாடு' பத்திரிகையின் புகழ் அக்காலத்தில் நாடெங்கும் ஓங்கி வளர்ந்திருந்தது. அந்த நாட்களை நாம் நினைக்குந்தோறும் இன்றும் இன்ப அலைகள் பொங்கி எழுகின்றன; மகிழ்ச்சிக்குறிகள் மலர்ந்து மணக்கின்றன; எழுச்சிமின்னல்கள் எழிலைப் பாய்ச்சுகின்றன.

மௌலானு அவர்கள் ஆங்கிலத்தில் 'காம்ரேட்' என்ற பத்திரிகையும், உருது மொழியில் 'ஹம்தர்த்' என்ற பத்திரிகையும் நடத்தி வந்தார். இதனுல் அடைந்த இன்னல்கள் அநேகம் என்ருலும், முஸ்லிம் உலகையே காந்திய வழியில் திருப்பிக்கொண்டுவந்தது மிகப்பெரிய சாதனையாகும்! இதுபோன்றே நாமும் பெருமைபூண வழிகாட்டிய மௌலானு அவர்களின் வீரமரணம், நமக்கெல்லாம் எளிதில் கிட்டாத பாக்கியம். மௌலானு-மாந்தருள் மாணிக்கமன்ருே!

'கற்ருரைக் கற்ருரே காமுறுவர்' என்பது போல ஒரு தலைவரைப்பற்றி ஒரு தலைவர் எழுதியிருக்கிருர். இருவரும் இன்று இல்லை! சுவை சொட்டும் செந்தமிழில் உயிரோட்டத்துடன் சுதந்திரக்கனல்வீசும் புரட்சிநடையில் திரு வி.க. அவர்களே எழுத முடியும் என்பதற்கு இக்கட்டுரை ஒன்றே எடுத்துக்காட்டாகும்.

மௌலானு இறந்ததும் திரு. வி. க. 'சிங்கம் வீழ்ந்தது' என்று எழுதினுர்; ஆனுல் சிங்கத்தை எழுதிய சிங்கம் மறைந்தவுடன் அவரைப்பற்றி எழுத யார் இருக்கிருர்கள்? தமிழகம் சிந்திக்கட்டும்! வாழ்க தலைவர்கள்!! வளர்க அவர்கள் புகழ்!!!

உலகம் சுற்றும் தமிழன் வாழ்த்து!

"பர்மா நாடு" புத்துயிர்பெற்று, பர்மாவாழ் தமிழருக்குத் தொண்டு புரிய வேண்டுமென்பதே எனது பிரார்த்தனை. 'பர்மா நாடு' மறுமலர்ச்சி மக்கள் அனைவருக்கும் மகிழ்ச்சி தருவதொன்ருகும். 'பர்மா நாடு' மீண்டும் முன்போன்று புகழுடன் நீடு சிறந்து விளங்குக என்று மனதார வாழ்த்துகிறேன்.

—எ. கே. செட்டியார்.

தமிழ்ப்பெரியார் நெல்லையப்பர்!

சுதந்திர முரசு !

வீர பாரதியார்

"விந்தை மனிதர்" நெல்லையப்பரை உங்களுக்குத் தெரிந்திருக்கவேண்டும்! ஏனெனில் தமிழர்க்கும் தமிழ் நாட்டுக்கும் அத்தகைய தொடர்புகொண்டு பணியாற்றியிருக்கிறார். இவர், தற்போது சென்னை நகரில் சைதாப்பேட்டையில் வசித்து வருகிறார். இவர் ஒரு இயற்கைக் கவிஞர். சிறந்த அரசியல்வாதி, சீர்பெற்ற பேரறிஞர்.

தாய் நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் குதித்த தமிழகத் தலைவர்களில் ஒருவர். சுதந்திர எழுச்சி முரசாக "லோகோபகாரி" பத்திரிகையைப் பல்லாண்டுகளாக நடத்தியவர். கவியரசர் பாரதியாரின் உடன் பிறவாத உண்மைத் தம்பி. இந்த நெல்லையப்பர் அன்று பாரதியைக் காப்பாற்றாமல் மட்டும் இருந்திருந்தால் அவர் அன்றே வறுமையிலும் அடக்குமுறையிலும் சிக்கி மறைந்துபோயிருப்பார். இதன் சான்றாக நெல்லையப்பருக்கு நம் பாரதியார் எழுதிய கடிதத்தில்:

தம்பி !

எங்கேனும் எப்படியேனும் பணம் கண்டுபிடித்து ஒரு நண்பன் பெயரால் நமக்கனுப்புக. தம்பி—உனக்கேனடா இது கடமையென்று தோன்றவில்லை. நீ வாழ்க !

உனதன்புள்ள,

பாரதி.

என்று எவ்வளவு உரிமையுடன் நெல்லையப்பரைக் கேட்டிருக்கின்றார். **பாரதியின்** வலது கரமாகத் திகழ்ந்தார்: மற்றொரு நிகழ்ச்சிக் காண்க!

•

"கப்பலோட்டிய தமிழன் வெஞ்சிறையில் வாடிக்கொண்டிருந்த காலம். இடம்: கோயமுத்தூர் சிறை. சிறைக்கு வெளியே சிதம்பரனார்க்கு உற்றதுணைவர் திரு. நெல்லையப்பர் தான்! ஆனால் அவருக்குத் தலைமறைவு வாசம். என்ன வேடம் பூணுவாரோ, எப்படிச்சிறைச் சாலைச் சுவர்களைக் கடந்து உள்ளேபோய், வெளியே வருவாரோ? சிதம்பரனாரைப் பேட்டி காண்பார். சிறு சிறு காகிதத் துண்டுகளில் அவர் குறித்துக்கொடுக்கும் செய்திகளைப் பெற்றுக்கொள்வார். அவற்றின் படியேவெளியே வந்து செயலாற்றி வ. உ. சி. யின் திட்டங்களை நிறைவேற்றுவார். இப்படி ஒரு வருட காலம் நடந்தது!

திரு. நெல்லையப்பரைப்பற்றி மேலும் அடுத்துவரும் இதழ்களில் அறிஞர் வெ. சாமிநாத சர்மா அவர்களும் அத்துடன் 'குமுதம்' ஆசிரியர் எஸ். எ. பி. அண்ணாமலை அவர்களின் சிறப்புக் கட்டுரைகளும் வெளிவரும். (ப—ர்)

❋

தமிழகத்தின் பழைமையும் தமிழ் மக்களின் புதுவாழ்வும்.

✻ பரலி சு. நெல்லையப்பர் ✻

தமிழ்நாடு

பூலோகத்தில் உள்ள நாடுகளில் மிகமிகப் பழைமையான நாடு தமிழ் நாடு. ஆதியில் நீர்ப் பரப்பாயிருந்த இடத்தில் முதல் முதல் பூமி தோன்றியது தமிழ்நாடு இப்பொழுது நிலவுகிற இடத்தை உள்ளிட்ட குமரிக் கண்டத்திலே தான். இது தமிழ் மக்களாகிய நாம் தற்பெருமையாகக் கூறிக் கொள்வதல்ல. ஐரோப்பிய நாட்டு அறிஞர்கள் நடுநிலையாக ஆராய்ச்சி செய்து கண்ட அரிய உண்மையாகும்.

தமிழன்

முதல் முதல் தோன்றிய நாடான தமிழ் நாட்டிலேதான் முதல் முதல் மனிதன் தோன்றினன். தமிழன்தான் பூமிதேவியின் தலைப்பிள்ளை.

தமிழ் மொழி முதல் மொழி

முதல் முதல் தோன்றிய நாட்டிலேதான் முதல் முதல் மொழியும் தோன்றியிருக்கவேண்டும். எனவே, தமிழ்மொழிதான் பூலோகத்தில் முதல் முதல் தோன்றிய மொழியாகும். தமிழ் மொழி இயற்கை மொழி. பறவைகள், விலங்குகளின் ஒலியை ஆதாரமாகக் கொண்டு, தோன்றி வளர்ந்த இயற்கை மொழி தமிழ் மொழி. தமிழ் மொழியிலிருந்துதான் தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளுவம் ஆகிய நான்கு மொழிகளும் தோன்றின என்பதை இன்று அறிஞர்கள் ஒத்துக்கொள்கின்றனர்.

கன்னடமும் களி தெலுங்கும் கவின்
மலையாளமும் துளுவும்
உன் உதரத் துதித் தெழுந்தே
ஒன்று பல ஆயிடினும்

என்று அறிஞர் சுந்தரம்பிள்ளை பாடியிருப்பது உண்மையே. ஆனல் தேவபாஷை யென்று கூறப்படும் வடமொழியும் தமிழ் மொழியிலிருந்து தோன்றியதே யாகும் என்பர் ஒரு சாரர். வடமொழி அகரம் உட்பட நெடுங்கணக்கு அத்தனையும் தமிழ் நெடுங்கணக்கை ஆதாரமாகக் கொண்டே தோன்றியவை. தமிழ் மொழி, வடமொழி இருமொழிகளின் எழுத்துக்களின் உருவங்களை ஆராய்ச்சி செய்வார்க்கு இந்த உண்மை விளங்கும். ஸம்ஸ்கிருதம் என்ற அதன் பேரே, பிற்காலத்தில் திருத்தமாகச் செய்யப்பட்ட மொழி அது என்பதை விளக்குகிறது. இது ஆராய்ச்சியாளர் கருத்து.

மலைகளும் நதிகளும்

உலகத்தில் உயர்ந்த மலை, பரந்த மலை, சிறந்த மலை யென்று போற்றப்படும் இமய மலையைவிடத் தமிழ் நாட்டிலுள்ள பொதிய மலையும், திருக்காளத்தி மலையும், திருப்பதி மலையும், பழைமையானவை. உருவத்தில் சிறிய தமிழ் நாட்டு மலைகளின் பழைமையை நோக்கும் பொழுது உலகத்தில் பெரிய இமயமலை நேற்றுப் பிறந்த பச்சிளங் குழவியாகும் என்பது ஐரோப்பிய ஆராய்ச்சியாளர் கருத்து. எனவே, இமயத்திலிருந்து தோன்றும் கங்கை நதியையும் சிந்து நதியையும் விடக் குடகு மலையிலிருந்து தோன்றும் காவேரி நதி பழைமையானது.

தெய்வம்

தெய்வம் என்பதோர் சித்தம் உண்டானது தமிழ்நாட்டிலேதான். மரத்தடியில் முதலில் கடவுளைத் தொழுது பின்னர் வானுற வளர்ந்த கோபுரங்களுடன் முதல் முதல் கோயில்களைக் கட்டியவன் தமிழனே யாவான். ஒரே தெய்வம் என்ற உண்மையைக் கண்டவன் தமிழன். ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு என்பது தமிழன் வாக்கு. மக்களின் சாதாரண அறி

வைக் கடந்தது என்று பொருள்படும். கடவுள் என்று தெய்வத்திற்கும் பேரிட்டவன் தமிழன். கடவுள் உண்மையையும், கடவுள் மகிமையையும், முதலில் அறிந்து உலகத்திற்கு விளக்கியவன் தமிழன்.

தமிழறம்

அன்பே சிவம், அறிவே சிவம் என்பது தமிழ் மறை. அன்பையும் அறத்தையும் தமிழ் நூல்கள் விளக்குவது போல, வேறு எம்மொழி நூலும் விளக்கவில்லை. எம்மொழியிலும்விடத் தமிழ் மொழியில் அற நூல்கள் பல. நாலடியாரையும் திருக்குறளையும்விட மேலான அறநூல் உலகத்தில் இல்லை. நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி யென்பது மேலோர் வாக்கு. கம்பராமாயணத்தையும் சிலப்பதிகாரத்தையும் விடச் சிறந்த கவி உலகத்தில் இல்லை.

வையகமெல்லாம் தமிழகம்
மக்கள் எல்லோரும் தமிழர்கள்

தற்கால இலங்கையைத் தன்னுள் அடக்கியிருந்ததும், கிழக்கே ஆயிரம் மைலுக்கு அப்பால் ஜாவா, சுமத்ராத் தீவுகள் வரையும், மேற்கு ஆபிரிக்காவை ஒட்டியுள்ள மடகாஸ்கார்த் தீவு வரையும் நீண்டு பரந்திருந்ததும், குமரிக்கண்டம் (லெமூரியா) என்று பேர்கொண்டிருந்ததுமான பழைய பெருந் தமிழகத்தில் வாழ்ந்திருந்த பழந் தமிழ் மக்களே சென்ற பல்லாயிரம் ஆண்டுகளுக்கிடையில் நேர்ந்த பல கடற்கோள்களினால் நிலப்பகுதிகள் நீரான காரணத்தால், வாழ்ந்திருக்க இடமின்றி, பூமண்டலத்தின் பல திசைக்கும் சென்று குடியேறிப் பல நாடுகளில், பல இனத்தினராக, பல வகுப்பினராக, பல நிறத்தினராக வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். பழந் தமிழர்கள் பேசிய பழைய தமிழே இன்று பல மொழிகளாக பல பேர்களுடன் பல முறைகளில் நிலவுகிறது. இன்று பூலோகத்தில் வாழும் பல வகை மக்களுக்கும் நமது முன்னோர்களான பழந்தமிழர்களே மூதாதையர்கள். தமிழ் நாகரீகமே எல்லா நாகரிகங்களுக்கும் மூலம் என்ற உண்மையைச் சிந்திக்கும் பொழுது தற்காலத் தமிழர்களான நமது உள்ளத்தில் எவ்வளவு பெரு மகிழ்ச்சியும் பெருமித உணர்ச்சியும் தோன்றுகின்றன !

பொதிகையிலிருந்து இமயம் வரை தமிழ்

ஒரு காலத்தில் பொதிகையிலிருந்து இமயம் வரை தமிழ் மொழி நிலவியிருந்தது. தமிழ்த் தாயின் அன்புக்கொடி தமிழ் மன்னரின் அறக்கொடி இமயத்தில் மட்டுமன்றி, எண்டிசையிலும் பறந்து கொண்டிருந்தது. தமிழர் நாகரீகம், மலேயா, ஜாவா, சுமத்ராத் தீவுகள் வரை பரவியிருந்தது. தமிழரின் நாவாய்கள் எழு கடல்களிலும் ஓடிக்கொண்டிருந்தன.

தமிழ் மக்கள் விழிப்பு

பூமிதேவியின் தலைப்பிள்ளையான தமிழ்ப் பிள்ளை, இவ்வளவு உச்ச நிலையிலிருந்து கால வேற்றுமையால் சென்ற ஆயிரம் ஆண்டுகளாக கீழே விழுந்து உறங்கிக்கிடந்தான். இன்று பொழுது புலர்ந்தது. தமிழன் விழித்துவிட்டான். அவன் உறக்கம் நீங்கி, ஊக்கம் கொண்டு நிற்கின்றான். தமிழன் இனித் தனது பழைமையை நினைந்து, தற்கால நிலையை உணர்ந்து, இனி வரும் காலத்தில் அடையவேண்டிய உச்ச நிலையை நோக்கிச் செல்வான். யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற உண்மையை மறந்து பகைமையில் வளர்ந்து, போராடி மடிந்து கொண்டிருக்கும் உலக மக்களுக்கு உண்மை நெறிகாட்டி, அவர்களை உய்யவைக்கும் சக்தி தமிழனிடம் அமைந்திருக்கிறது. "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்று அவன் முழங்குகின்றான்.

"ஒன்றென்று கொட்டு முரசே—அன்பில்
ஓங்கென்று கொட்டு முரசே
நன்றென்று கொட்டு முரசே—இந்த
நாநில மாந்தருக் கெல்லாம்"

என்று அன்பு முரசு கொட்டுகின்றான்.

தமிழர் கடமை

தமிழகம் மட்டுமின்றி, இந்த வையகம் முழுமையுமே தனது தாய்நாடு என்பதை அவன் உணர்ந்து, அதன் முழு நலனுக்காக, அதன் புது வாழ்வுக்காக அவன் உழைக்கவேண்டும். தமிழகத்தில் மட்டுமின்றி, வையகம் எங்குமே வறுமையும் சிறுமையும் ஒழிந்து, அன்பும் அறனும் பெருகி, இன்ப வாழ்வு சிறந்தோங்குமாறு தமிழன் உழைக்கவேண்டும். இல்லையென்ற கொடுமை உலகத்தில் இல்லையாகச்செய்து, நல்வாழ்வும் பெருவாழ்வும் பெருகுமாறு செய்வது தமிழர் கடமை. அதற்குரிய பெருந்தமிழர்கள் தோன்றிக்கொண்டிருக்கிறார்கள். இனி, வையத் தலைமைவகிக்கப் போகிறவன் தமிழன். அவன் வாழ்க! தமிழ் வாழ்க! தமிழ்நாடு உயர்க! தமிழ்க் கொடி ஓங்குக !

தமிழராக வாழ்க!

அரசியல்—இலக்கிய ஆசிரியர்
வெ. சாமிநாத சர்மா

பர்மாவாழ் தமிழன்பர்களே! இக்கட்டுரையின் மூலம் உங்களோடு பேச விழைகின்றேன். உங்கள் மத்தியில் உங்களில் ஒருவனாக நான் பத்து ஆண்டுகளுக்கு அதிகமாக வாழ்ந்தவன். என்னை உங்களில் பலர் அறியாதிருக்கலாம். அப்படியே உங்களில் பலரை நான் தெரிந்துகொள்ளாதிருக்கலாம். ஆனால் உங்களுடைய நாட்டுப் பற்றையும் மொழிப் பற்றையும் நான் நன்கு அறிவேன். அவற்றிற்கு வணக்கஞ் செலுத்துகிறேன்.

அரசியல் ரீதியில் இந்தியாவும் பர்மாவும் இப்பொழுது வேறு வேறு நாடாகப் பிரிந்திருக்கின்றன. இப்பொழுதென்ன, 1937-ம் ஆண்டிலேயே பிரிந்து விட்டன. ஆனால் இப்பொழுது சம அந்தஸ்தும், சம உரிமையும் பெற்றுள்ள இரண்டு தனி நாடுகளாகத் திகழ்கின்றன.

இப்படிப் பிரிந்திருந்தாலும் இரண்டு நாடுகளும் அநேக அம்சங்களில் ஒற்றுமைப்பட்டனவாகவே இருக்கின்றன, ஒற்றுமையுடனேயே வாழவேண்டியிருக்கின்றன. மதம், பாஷை, கலாசாரம் இப்படிப் பல துறைகளில் பர்மாவின் தாயகமாக இந்தியா விளங்குகிறது. தாயை விட்டுச் சேயைப் பிரிக்க முடியுமோ? சிறப்பாக, பர்மாவுக்கும் தமிழகத்திற்கும் நீண்ட காலமாக நெருங்கிய தொடர்பு இருந்து வந்திருக்கிறதென்பது உங்களுக்குத் தெரியும். பர்மியர்களும் தமிழர்களும் வெகு காலமாகச் சகோதரர்கள்போல் வாழ்ந்து வந்திருக்கிறார்கள். அரசியல் பிரிவினை காரணமாக, இந்தச் சகோதர ஒற்றுமை எந்தக் காரணத்தை முன்னிட்டும் எந்தக் காலத்திலும் குலையக்கூடாதென்பதை நீங்கள் மனத்தில் கொள்ள வேண்டுமென்பதற்காகவே, இந்த வேண்டுகோளை உங்களுக்கு விடுக்கத் துணிந்தேன்.

கிறிஸ்து சகத்திற்கு வெகு காலம் முந்தியிருந்தே, தமிழன், உலகத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று வந்திருக்கிறான். எப்படி? வெற்றிக்கொடி பிடித்துக்கொண்டல்ல, அன்புக்கொடி பிடித்துக்கொண்டு! இதனால்தான் அவன், சென்றவிடமெல்லாம் சிறப்புப் பெற்றான். ஆக்கிரமிப்பு எண்ணத்தோடு சென்ற எந்த இனத்தினரை வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளுங்கள், டச்சுக்காரர் என்ன, போர்த்துக்கீசியர் என்ன, ஆங்கிலேயர் என்ன, இவர்களெல்லோரும் எந்த நாட்டிலும் முதலில் அன்போடு வரவேற்கப்படவில்லை; எதிர்க்கவேபட்டார்கள்; உயிர்ச்சேதத்துடன்தான் உள் நுழைந்



வாழ்த்துச் செய்தி

"தமிழர்கள், எந்த நாட்டுக்குச்சென்ற போதிலும் அந்த நாட்டு மக்களோடு இணைந்து வாழும் பண்பாடு நிரம்பியவர்கள்; அன்புவழியில் கலை, மொழி முதலியவைகளைக் கொடுத்து வாங்கும் ஆற்றல் வாய்ந்தவர்கள்; இந்தப் பண்பாட்டுக்கும், ஆற்றலுக்கும் மென்மேலும் ஊக்கந் தருமுறையில் "பர்மா நாடு" பணியாற்றி சுதந்திர இந்தியாவின் நற்புகழை வளர்த்துக்கொடுக்குமென்று நம்புகின்றேன்.

அன்புள்ள,
வெ. சாமிநாதன்.

தார்கள்; மித்திரபேதத்தின்மூலமாகவே அதிகாரத்தைக் கைப்பற்றிக்கொண்டார்கள்; தங்கள் நாகரீகத்தைப் பலவந்தமாகத் திணித்தார்கள். உலக சரித்திரம் கூறும் கதை இது.

ஆனல் தமிழனே "யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்பதை வாழ்க்கையின் நியதியாகக் கடைப்பிடித்த தமிழனே, கத்தியோ கேடயமோ பிடித்துச் செல்லவில்லை; ஒரு கையிலே அறிவு என்னும் விளக்கு; மற்றொரு கையிலே நாகரீகம் என்னும் கொடி; முகத்திலே புன்சிரிப்பு; அகத்திலே அருள்; இந்தக் கோலத்துடனேயே சென்றான்; சென்றவிடங்களில் வணங்கிய தலையும் கூப்பிய கையுமாய் நின்றான். இவன் முகம் பார்த்திராத மக்கள், இவன் அகம் அறிந்து இவனை நல்வரவேற்றார்கள்; இவனுடைய அறிவுக்கும் அன்புக்கும் ஆட்பட்டார்கள்; இவனுடைய நாகரீகத்திற்குத் தலைவணங்கினார்கள்.

இங்ஙனம் இவன்-தமிழன்-வணங்கிய தலையும் கூப்பிய கையுமாய் நின்றது, இவனது பலவீனங் காரணமாகவன்று. இதை நாம் நன்றாக ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். உடல் வன்மையிலோ, உளத்திண்மையிலோ, யாருக்கும் சளைத்தவனல்லன் தமிழன் "விழுப்புண் படாத நாளெல்லாம் வழுக்கினுள் வைக்கும் நன்னாளை யெடுத்து" என்று, தனது வீரத்தை வெளிப்படுத்தச் சந்தாப்பம்பெறாத நாட்களெல்லாம் வீணாகக் கழிந்துவிட்டனவேயென்று இரங்கியவனல்லவா இவன்? வானம் துளங்கினும், மண் கம்பமாகினும் சிந்தையழியாத்தன்மையனல்லவா இவன்? தன்னுடைய வலிமையில் நம்பிக்கை மிகுந்திருந்ததனால்தான், இவன் எங்கும் சென்றான்; யாரிடமும் சென்றான்; அஞ்சவுமில்லை; அச்சுறுத்தவுமில்லை; தன்னலத்தைப் பேணாது பரநலத்தில் நாட்டங்கொண்டான், சிறுமையான எண்ணங்களை இவன் எண்ணியது கிடையாது; சிறுமையான செயல்களில் ஈடுபட்டதும் கிடையாது. எப்பொழுதும் பெருநோக்குடனேயே வாழ்ந்தான். இதனால்தான், பிறருடைய நல்லெண்ணத்தில் சுலபமாக நம்பிக்கைகொண்டான். அவர்களிடம் பணிந்துநின்றான். இவனுடைய பணிவிலே இவனுடைய பெருமை திகழ்ந்தது. "பணியுமாம் என்றும் பெருமை சிறுமை அணியுமாம் தன்னை வியந்து" என்று வள்ளுவனார் இவனுக்கு விதி செய்துவிட்டுப் போயிருக்கிறாரல்லவா? நிற்க.

உலகத்தின் பலபாகங்களுக்கும் தமிழகத்துக்கும் நீண்டகாலமாக நெருங்கிய தொடர்பு இருந்து வந்திருக்கிறது. கிறிஸ்து சகத்திற்குப் பல ஆண்டுகளுக்கு முந்தியிருந்தே தொண்டை நன்னாட்டிலுள்ள காஞ்சிபுரத்திலிருந்து சிலர் சீனாவுக்குச்சென்று குடியேறியிருக்கிறார்கள். இங்ஙனமே, கிரீஸ் என்ன, ரோம் என்ன, இப்படித் தொலைதூரங்களுக்கும் சென்றிருக்கிறார்கள். பிற நாடுகளிலிருந்தும் அநேகர் தமிழகத்திற்கு வந்திருக்கிறார்கள்; வந்தவர்களில் சிலர், வந்த காரியத்தை முடித்துக் கொண்டு திரும்பிவிட்டார்கள்; சிலர் இங்கேயே நிலைத்துவிட்டார்கள். வெளிநாட்டார் பலர் வாணிபஞ் செய்யத் தமிழகத்திற்கு வந்த வரலாற்றை பட்டினப்பாலை என்னும் நூலில் பரக்கக்காண்கிறோம். இன்றும் பலர், தமிழ் மன்னர்களுக்கு மெய்க்காவலராகவும், வேறு பல அலுவல்கள் புரிகின்றவர்களாகவும் இருந்து வந்திருக்கிறார்கள்.

தமிழகம் போந்த அந்நியர்யாவரும், அந்நியர்களாக நடத்தப்படாமல், சகோதரர்கள் போலவே நடத்தப்பட்டார்கள். தமிழகத்தின் தனிப்பண்பு இது. அவர்களுக்கு எல்லாவித சலுகைகளும் காட்டப்பட்டன. உணவு, உடை, இருப்பிடம் முதலிய சாதாரண விஷயங்களில் கூட அவர்களுடைய உணர்ச்சிக்கும் உரிமைக்கும் பங்கம் நேரிடாவண்ணம் ஏற்பாடுகள் செய்யப்பட்டதோடு, அவர்களுடைய கலாசாரத்தையும், சமய நம்பிக்கைகளையும் அவர்களுக்குகந்த முறையில் பின்பற்றுவதற்கான சௌகரியங்களும் செய்து கொடுக்கப்பட்டன. இதனால்தான் வெளிநாடுகளுக்குச் சென்ற தமிழர்கள் கண்ணியமாக நடத்தப்பட்டார்கள். பரஸ்பர அன்பிலும் உதவியிலுந்தான் உலகம் வாழ்கிறது; அப்படித்தான் தமிழகம் வாழ்ந்தது.

வெளி நாடுகளுக்குச்சென்றவர்களிருக்கட்டும், இந்தியாவுக்குள்ளேயே பல பகுதிகளுக்கும் சென்று நிலைபெற்றிருக்கிறார்கள் தமிழர்கள். சென்ற விடங்களில், அந்தந்தப்பிரதேசமொழி

களை நன்கு கற்று புலமையெய்தி அந்த மொழியினருடைய நன்மதிப்பைப் பெற்றார்கள். அவர்களும் இவர்களை தங்களிலே ஒருவராகக் கருதி கௌரவமாக நடத்தினர்கள். அந்தப் பிரதேசங்களில், பொறுப்புள்ள பதவிகள் இவர்களை நாடிவந்திருக்கின்றன. இவர்களும் அவைகளை நன்றாக நிருவகித்து தமிழகத்திற்குப் பெருமை தேடித்தந்தார்கள். அதிகாரபதவிகள் மட்டுமல்ல, ஆசிரியபதவிகளையும் தமிழகத்திலிருந்து சென்றவர்கள் திறம்பட வகித்து வந்திருக்கிறார்கள். ஒரு சிறிய உதாரணம்: கிறிஸ்து சகத்தின் ஆரம்ப காலத்தில், இப்பொழுதைய பீகார் மாகாணத்தைச் சேர்ந்த நாளந்தை என்ற இடத்தில் ஒரு சர்வகலாசாலை பிரசித்தியுடையதாயிருந்தது. இதில் எண்ணாயிரத்தைந்நூறு மாணாக்கர்கள் படித்துக்கொண்டிருந்தார்கள். ஆசிரியர்களோ ஆயிரத்து ஐந்நூற்றுபத்துபேர். உயர்தரப்படிப்புக்கெல்லாம் வைப்பிடமாயிருந்தது இந்தச்சர்வகலாசாலையென்று சுருக்கமாகச் சொல்லலாம், இந்தச் சர்வகலாசாலைக்கு ஒரு சமயம் தலைவனாயிருந்து, இதனை ஒழுங்கான நடைமுறைக்குக் கொண்டுவந்தவன் யார் தெரியுமா? காஞ்சிபுரத்திலிருந்து சென்ற தர்மபாலன் என்பவன். இவனைப் பின்பற்றி இப்பொழுதும் வட இந்தியாவில் அநேக தமிழர்கள் ஆசிரியர்களாயிருந்து வருகிறார்களல்லவா?

இன்னும், தமிழகத்திலிருந்து சென்ற அறிஞர் பலர், பிறநாட்டுப் புலவர்களைத்தர்க்க வாதத்தில் வென்றிருக்கிறார்கள். தேவன் என்ற ஒருவன், பாடலிபுரம் (தற்போதைய பாட்னா) சென்று, அங்குக் கூடியிருந்த அறிஞர் சபையில் பன்னிரண்டு நாட்கள் வாதப்போர் நடத்தி வெற்றிகண்டான். இவனைப்போலவே, திண்ணகன் என்ற காஞ்சிபுரவாசி, நாளந்தை சர்வகலாசாலைக்குச்சென்று, அறிஞர்களுடன் வாதஞ் செய்து பெயரும் புகழும் பெற்றான். இப்படி புத்தமதக் கிரந்தங்கள் அநேக உதாரணங்களைக் கொடுக்கின்றன. இவையெல்லாம் இன்றைக்கு ஆயிரத்தைந்நூறு ஆண்டுகளுக்குமுன் நிகழ்ந்தவை.

எதற்காக இவ்வளவுதூரம் எடுத்துச்சொல்கிறேனென்றால், தமிழன் எங்குச்சென்றபோதிலும், தன்னுடைய அறிவினாலும் அன்பினாலும் அனைவரையும் அணைத்துக்கொண்டான் என்பதை வலியுறுத்துவதற்காகவே. இந்தப்பண்பாட்டை, சகோதரர்களே! நீங்கள் மறந்துவிடக்கூடாது; உங்களுடைய அன்றாட வாழ்க்கையிலே இதைக்கடைப்பிடிக்கவேண்டும்.

தாய் நாட்டைவிட்டு நீங்கள் வெகுதூரம் சென்றிருப்பினும், உங்கள் பரம்பரை தருமங்களையும், குல ஆசாரங்களையும் உறுதியாகப் பின்பற்றவேண்டும். 'நாம்தான் வெகுதொலைவுக்கு வந்துவிட்டோமே, எப்படி யிருந்தாலென்ன, யாரிடம் எப்படி நடந்துகொண்டாலென்ன' என்று கருதவேண்டாம். தொலைதூரத்திலிருப்பதனால் உங்களுடைய பொறுப்பு அதிகமாகிறது. ஏனென்றால், உங்கள் தாய்நாட்டின் பெருமையை, நாகரீகத்தை, கலையை, மொழியை இப்படிப் பலவற்றையும் உங்களுடைய அன்றாட வாழ்க்கையில் பிரதிபலித்துக் காட்டவேண்டியவர்களல்லவா நீங்கள்? உங்கள் நடக்கையைக் கொண்டுதான், நீங்கள் எந்த நாட்டில் வசிக்கிறீர்களோ அந்த நாட்டு மக்கள், உங்கள் தாய் நாட்டைப்பற்றி மதிப்பிடுவார்கள். உங்களுடைய ஒருசிறு நடத்தையும் உங்களுடைய தாய் நாட்டுக்குச் சிறுமையுண்டாக்கிவிடும். அது மட்டுமல்ல; உங்கள் தாய்நாட்டில் வசிக்கும் பெரும்பாலோருடைய கண்ணியம், கௌரவம் எல்லாமும் பாதிக்கப்படும். எனவே நீங்கள் சர்வஜாக்கிரதையுடன் நடந்துகொள்ளவேண்டும்.

தங்களுடைய சுய தருமங்களையும் கலாசாரங்களையும் உறுதியாகக் கடைப்பிடித்துவருகிறவர்களுக்குத்தான் பிற நாட்டாரிடையே மதிப்புக் கிடைக்கும். உங்களுடைய சுய மரியாதையை நீங்கள் காப்பாற்றிக் கொள்வீர்களானால்தான் பிறர் உங்களுக்கு மரியாதை செய்வர் எந்த நாட்டினருக்கும் பொருந்துகின்ற பொதுவான உண்மை இது; எந்த நாட்டினரும் ஆதிகாலத்திலிருந்து கையாண்டுவந்த நியதி இது. கி. மு. எட்டாவது, ஏழாவது நூற்றாண்டுகளில், கிரீஸ் தேசத்திலிருந்து பலர், மத்திய தரைக் கடலிலுள்ள அநேக பிரதேசங்களில் சென்று குடியேறினர். தாய்நாட்டிலிருந்து

புறப்பட்டபோது, கொஞ்சம் மண்ணையும் நெருப்பையும் எடுத்துச் சென்றனர். தாய்நாட்டிலிருந்து விலகிச் சென்றாலும் தாய்நாட்டின் தொடர்பிலிருந்து தாங்கள் விலகிக்கொள்ளவில்லையென்பதற்கறிகுறியாக மண்ணையும், தங்கள் மூதாதையர்கள் அனுசரித்துவந்த பழக்க வழக்கங்களைத் தாங்கள் கைவிடப்போவதில்லையென்பதைக் காட்டுவதற்காக, பரம்பரையாகப் போற்றிக் காப்பாற்றிவந்த நெருப்பில் சிறிதையும் எடுத்துச் சென்றனர். எங்குச் சென்றபோதிலும், எல்லாக் காலங்களிலும், நடை, உடை, பாவனை எல்லாவற்றிலும் கிரேக்கர்களாகவே வாழ்ந்தனர். இது காரணமாகவே அனைவருடைய மரியாதையையும் பெற்றனர். அவர்களைப் போலவே, சகோதரர்களே! நடந்துகொள்ளுங்கள். தமிழைப் பேசுங்கள்; தமிழனாக வாழுங்கள் உங்களுடைய பார்வை, பேச்சு, உடை. உணவு, விவகாரங்கள், இப்படி எல்லாவற்றிலும் தமிழ்ப்பண்பு கலந்து மணம் வீசச் செய்யுங்கள்.

கி. பி. பத்தொன்பதாவது நூற்றாண்டின் இடைக்காலத்தில் இத்தாலியின் சுதந்திரத்திற்காகப் போராடிய பேரறிஞன் மாஜினி, தன் நாட்டு மக்களைப் பார்த்து என்ன கூறினனென்பதை நீங்கள் கவனித்துக் கேளுங்கள்:

"நீங்கள் எண்ணுகிற ஒவ்வோர் எண்ணமும் உங்கள் தாய்நாட்டிற்காக இருக்கட்டும். நீங்கள் செய்கிற ஒவ்வொரு காரியமும் அதன் கௌரவத்திற்குப் பொருந்தியதாயிருக்கட்டும். மானிட சமுதாயத்தின் நலனுக்காக நீங்கள் எந்தக் கொடியின்கீழ் நின்று உழைக்கிறீர்களோ அது உங்கள் தாய்நாட்டின் கொடியாயிருக்கட்டும். நீங்கள் பேசுகிறபோது "நான்" என்று சொல்லாதீர்கள்; "இத்தாலியர்களாகிய நாங்கள்" என்று சொல்லுங்கள். நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் தேசத்தின் அவதாரமாயிருங்கள். "நமது நாட்டாருக்கு நாம்தான் பொறுப்பாளி" என்று உணருங்கள்; அப்படியே நடந்துகாட்டுங்கள். நீங்கள் நடந்துகொள்கிற மாதிரியைப் பார்த்து மற்றவர்கள் உங்கள் நாட்டை நேசிக்கவேண்டும்; கௌரவப்படுத்த வேண்டும். அம்மாதிரி நடந்துகொள்ள ஒவ்வொருவரும் கற்றுக்கொள்ளுங்கள்."

இந்த மேற்கோளில் வரும் இத்தாலியர்கள் என்ற சொல்லுக்குப் பதில் **தமிழர்கள்** என்று மாற்றியமைத்துக் கொள்ளுங்கள். யாவும் உங்களைப் பார்த்துச்சொன்னது போலில்லையா?

இப்படி நீங்கள் சொந்த நாட்டு மக்களாக, தமிழர்களாக வாழ்வதோடு, பர்மிய மக்களோடு சகோதர உறவுகொள்ள வேண்டும். அவர்களுடைய விருந்தாளிகளாகத்தான் நீங்கள் அங்கு வசிக்கிறீர்களென்பது உங்கள் நினைவில் எப்பொழுதும் இருந்துகொண்டிருக்கட்டும். விருந்தாளிகளுக்கு உரிமைகளைக் காட்டிலும் கடமைகள் தான் அதிகம்.

முதலில் பர்மிய மொழியைக் கற்றுக்கொள்ளுங்கள். தாய்மொழிப் பற்றுனது, பிறமொழித் துவேஷமாகாது. தமிழன், பரம்பரையாகவே எந்த மொழிமீதும் வெறுப்புக் காட்டியவனல்லன்; பிறமொழிகளை விரும்பிக் கற்றவன்; புலமையும் பெற்றவன். எனவே, நீங்கள், பர்மிய மொழியை விரும்பிக்கற்று அதில் நல்ல தேர்ச்சி பெற வேண்டும். அப்பொழுதுதான் அந்த மொழி பேசும் மக்களோடு சரளமாகப் பழக முடியும்; அவர்களுடைய அன்பைப்பெற முடியும். எந்த நாட்டில் நாம் வசிக்கிறோமோ அந்த நாட்டு மக்களின் நல்லெண்ணமின்றி அமைதியான வாழ்க்கையை நடத்த முடியாது. இதற்குச் சாதனமாயிருப்பது, அந்த நாட்டு மக்கள் பேசும் மொழியிலே பேசி அவர்களுடன் பழகுவதுதான்.

அடுத்தபடி, பர்மாவின் முன்னேற்ற விஷயத்தில் பர்மிய மக்களுடன் நீங்கள் சேர்ந்து ஒத்துழைக்கவேண்டும். அரசியல் துறையிலாகட்டும், பொருளாதாரத் துறையிலாகட்டும், பிற துறைகளிலாகட்டும், உங்களுடைய அறிவு, அனுபவம் யாவற்றையும் பர்மியர்களுக்குக் கொடுத்து உதவுங்கள். ஏற்கனவே, நீங்கள் பர்மாவின் செழுமைக்குப் பெரிதும் உதவியிருக்கிறீர்கள். இதை அந்த நாட்டு மக்கள் நன்கு உணர்வார்கள். இனி, அந்த நாடு தனியாகப் பிரிக்கப்பட்டுவிட்டது என்ற ஒரு காரணத்திற்

காக, உதவியளித்தது போதும் என்ற மனப்பான்மை கொண்டுவிடக் கூடாது. எதுவரையில் நீங்கள் அங்கு வாழ்ந்துகொண்டிருக்கிறீர்களோ அதுவரையில் உங்களுடைய மனப்பூர்வமான ஒத்துழைப்பை அளித்துத்தாஞக வேண்டும்.

மற்றும், பர்மியர்கள் சுதந்திர உணர்ச்சி மிகவுடையவர்கள். இந்த உணர்ச்சிக்கு மதிப்புக் கொடுக்கின்ற முறையில் நீங்கள் அவர்களுடன் பழகவேண்டும். சுதந்திர மனப்பான்மை கொண்டவர்களிடம் அவர்கள் பழகிய விதத்தை நீங்கள் நன்ருகக் கண்டிருக்கிறீர்கள். ஆகவே, உங்கள் நன்மதிப்பு உணர்ச்சிக்குப் பழுதுண்டாகாமல், அவர்களுடைய நன்மதிப்பு உணர்ச்சியைக் கௌரவியுங்கள்.

அரசியல் உலகத்தில், 1947-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் பதினைந்தாந்தேதிக்குமுன் உங்களுக்கிருந்த அந்தஸ்து வேறே; இப்பொழுதுள்ள அந்தஸ்து வேறே. இப்பொழுது நீங்கள் சுதந்திர நாட்டுப் பிரஜைகள். உங்களில் சிலர், பர்மியப் பிரஜா பாத்தியதையை ஏற்றுக்கொண்டிருக்கலாம். அவர்களைப்பற்றி இங்கு அதிகம் பேச்சில்லை. அவர்கள், பர்மிய மக்களுக்குள்ள உரிமைகளனைத்தையும் அடைந்து அனுபவிக்கட்டும் அவர்கள் நன்கு வாழவேண்டுமென்று நாம் வாழ்த்துவோமாக! இந்தியப் பிரஜைகளாயிருந்து வாழ்வதிலே பெருமைகொள்ளும் தமிழ்ச் சகோதரர்களைக் குறித்துத்தான் இங்குப் பேசப்படுகிறது. சுதந்திர நாட்டுப் பிரஜைகளாகிய உங்களுக்குப் பொறுப்புகள் அதிகம்; உரிமைகளைக் காட்டிலும் கடமைகள்தான் அதிகம். உங்களுடைய கடமைகளை ஒழுங்காகச் செய்துகொண்டு போவதில்தான் உங்களுடைய பெருமை, உங்கள் நாட்டின் பெருமை யாவும் இருக்கின்றன. நாட்டின் பெருமை குன்ருதவண்ணம் நடந்துகொள்ளுங்கள். அதுதான் எனது வேண்டுகோள்.

குறிப்பு:

இக்கட்டுரையாளர் திரு. சாமிநாத சர்மா அவர்கள் இரங்கூனில் வெளிவந்த **'ஜோதி'** என்ற இலக்கிய மாதப்பத்திரிகையின் ஆசிரியர். அக்காலத்தில் நம்முடன்குழந்தை உள்ளத்துடன் இனிதுவாழ்ந்த காலத்தை நாம்என்னுளும்மறக்க முடியாது! ஏறக்குறைய பதினைந்து ஆண்டுகள் ஓடி மறைந்து போனுலும் பர்மாவாழ் தமிழர்கள் என்றும் மறக்க வியலாதவாறு புதுமை மெருகுடன் எழுதி, எழுதி அச்சிட்டுச்சென்ற அரசியல் நூல்கள் இற்றைக்கும் பொக்கிஷமாக மக்களால் பாதுகாக்கப்படுவதை நண்பர் ஆசிரியர் அறிவாரோ, என்னவோ? இப்புத்தகங்கள் இளம் எழுத்தாளர்கள் எல்லோருக்கும் கலைக்களஞ்சியங்கள். நம் ஆசிரியர் வெளியிட்ட மனிதன் கடமை, மாஜினி, முசோலினி, ஹிட்லர், சமுதாய ஒப்பந்தம், மானிட ஜாதியின் வரலாறு, மகாத்துமா, ஆகியவை முதன்மையானவைகளாகும். மற்றும் சிறுசிறு புத்தகங்கள் "மின்னுெளிப் பிரசுரம்" வாயிலாக வெளியிட்டுள்ளார்.

திரு. சர்மா அவர்களின் வாழ்க்கை சரித்திரம் விரைவினில் "பர்மா நாடு"வில் வெளிவரும்.

(ப—ர்)

வாழிய பர்மா நாடு!

[தியாகன்]

சத்திய மாண்போ டன்பும்
செம்மையோ டறமும் பண்பும்
இத்தரை மீதில் தழைத்து
இயங்கிட செய்த செம்மல்
உத்தம நெறியோ னென்று
உயர்வொடு உலகம் போற்றும்
புத்தனின் நெறியைப் பேணி
"பர்மா நாடு" வாழி!

தெள்ளிய தமிழின் மாண்பை
தெளிவுடன் புலமை கொண்டு
நல்லியல் வாழ்வுக் கேற்ற
நயமிகு கருத்தை தொகுத்து
தொல்லுல கத்தோர் போற்ற
தூய்மைக் குறளை யாத்த
வள்ளுவன் வாய்மை நாடி
வாழிய "பர்மா நாடு!"

சாந்தமும் பரிவும் பொறுமை
சால்புற ஒருங்கே அமைந்து
பாந்தமாய் அடிமை இருளை
போக்கியே அன்பின் ஒளியாய்
மாந்தருள் தெய்வ மென்று
மானிலம் போற்ற வாழ்ந்த
காந்தியின் பண்பில் திளைத்து
வாழிய "பர்மா நாடு!"

மருள் மாலை

"பர்மா நாடு" மீண்டும் வெளிவந்து நல்ல தொண்டு செய்ய முனைவதை அறிந்து மிக மகிழ்கிறேன். "பர்மா நாடு" நாளொரு மேனியாக வளர்ந்து, நாட்டுப்பணி செய்வதாக என வாழ்த்துகிறேன்.

மு. வரதராசன்.

டாக்டர் மு. வரதராசனார், எம். ஏ., எம். ஓ. எல், பி. எச். டி.,

மாலைக் காலத்தைப் புலவர் பலர் பாடியுள்ளனர். பெரும்பாலோர் மாலைக்காலத்தை வருணிக்கும்போது, காதலர்களின் உள்ளத்தில் துயரை வெளிப்படுத்தும்பொழுதாக அதைப் பாடியுள்ளனர். காலையில் அரும்பாகத்தோன்றும் காதல்நோய் பகலெல்லாம் பேரரும்பாக (போதாக) இருந்து, மாலையில் மலர்ந்து விடுகிறது என்பது திருவள்ளுவர் கருத்து; திருவள்ளுவர் கற்பனையில் படைத்த காதலியின் கருத்து. காதலன் வெளிநாட்டுக்குப் பிரிந்து சென்றிருக்கும்போது, அவனைப் பிரிந்து வருந்தும் காதலி, மாலைக் காலத்தில் துயராற்றாமல் மிக வருந்துவதாகப்பாடுவது இலக்கிய மரபு.

வெளிநாட்டுக்குச்சென்ற காதலன் திரும்பி வரும் நேரம் மாலைக்காலம். ஆகலின் அவன் வருகையை எதிர்பார்த்து, எதிர்பார்த்து வாராதது கண்டு ஏமாந்த காதலியின் உள்ளத்தை மாலை மிக வருத்தித் துயரில் ஆழ்த்துவது இயற்கை தவிர, மனநிலை உடல் நிலை ஒட்டியது ஆகையால், பகற்பொழுது மறைந்து வரவர உடல் மிகச்சோர்ந்து தளர்வதற்கு ஏற்ப, மனமும் சோர்ந்து துயரத்திற்கு இரையாகும். அதனால் பிரிந்த காதலியின் உள்ளம் எண்ணாதன எல்லாம் எண்ணி உருகும்; இயற்கையில் நிகழும் பற்பல மாறுதல்களைக் கண்டு துன்புறும்.

கதிரவன் மறைந்துவிட்டான்; அதனால் கருநிற இருள் எங்கும் பரந்துவிட்டது. அவளுடைய மலர் போன்ற அழகிய கண்கள் துயரக் கண்ணீர் சொரிந்தன. தன் நெஞ்சு பொறுக்கமுடியாத துயரத்தால் இவ்வாறு வருந்திய அவள் பக்கத்தே திரும்பித் தோழியின் முகத்தைப் பார்த்தாள். "தோழி! வெளிநாட்டுக்குச் சென்றாரோ காதலர், அந்த நாட்டிலும் இப்படிப்பட்ட மாலைக்காலம் உள்ளதோ?" என்று கேட்டாள்.

"கதிரவன் மறைந்தனனே காரிருள் பரந்ததுவே
எதிர்மலர் புரைஉண்கண் எவ்வநீர் உகுத்தனவே
புதுமதி புரைமுகத்தாய் போனார்நாட்டு உளதாங்
கொல்
......................வந்த இம்மருள்மாலை."

மாலைப் பொழுது வந்ததையும் தன்னைத் துன்புறுத்துவதையும் கூறிய காதலி, அதை மருள் உடையபொழுது என்கிறாள்; உள்ளத்தைத் துயரத்தால் மயங்கச் செய்யும் மாலை என்கிறாள். காதலர் சென்ற நாட்டிலும் இந்த மாலைக்காலம் இருந்தால், அவரும் தன்னைப்போல் மயங்கித் துயருறுதல் கூடும் என்கிறாள். அவ்வாறு அவர் துயரத்தால், வருந்தினாள் அதனாலாவது அவர் தன்னை நினைந்து திரும்பக் கூடுமே என்று ஏங்குகிறாள்.

இவ்வளவு நொந்து உருகும் காதலியின் கண்களுக்கு மாலைக்காலத்தின் இருள் எங்கும் பரந்திருப்பது தோன்றுகிறது. தன்னைத் துன்புறுத்தும் இருள் தன்னைச் சுற்றிலும் மட்டும் இல்லை; தன் வீட்டை சுற்றிலும் மட்டும் இல்லை; உலகமெங்கும் கருநிறமாய்ப் பரந்து மூடிக்கிடக்கிறது. வானத்தைப் பார்க்கிறாள்; வானெல்லாம் இருள் போர்த்துக்கிடக்கிறது. கிழக்குக் கோடியில்மட்டும் ஒளி தோன்றுகிறது. அந்த ஒளியும் மங்களாகச் சிறிதாய்த் தோன்றுகிறது. அதுதான் மாலையில் கிழக்கே தோன்றும் நிலா; இந்த நிலவையாவது இருள் முழுதும் மூடி மறைக்காமல் விட்டுவைத்ததே என்று எண்ணுகிறாள். உடனே அவளுடைய உள்ளத்தில் மாலை இருளின் கொடுமை புலப்படுகிறது. அந்த நிலவையும் அது கருணையால் விட்டுவைக்கவில்லை

மறைத்து மூட முடியாமல் விட்டுவைக்கவில்லை. பேரொளி வீசும் சூரியனையே விழுங்கிவிட்டு மாலையிருளுக்கு இந்த நிலவு எம்மாத்திரம்? அந்தக் கதிரவனை அப்படியே விழுங்கவேண்டும் என்ற பேராசையால்தான், தன் வாய்க்குள் கிடந்த நிலவை வெளியே உமிழ்ந்திருக்கிறது. கதிரவனை விழுங்கியதுபோலவே, அடுத்தாற்போல் இந்த நிலவையும் விழுங்கிவிடும் என்று எண்ணுகிறாள்.

இந்தக் காதலியின் கற்பனையில் தான்மட்டும் துன்புறுவதாக இல்லை. தன்னைப்போல் இந்த உலகம் முழுதும் துன்புறுவதாகக் காண்கிறாள். இந்தக் கற்பனையில் உயிருள்ளவை இல்லாதவை என்ற வேறுபாடும் இல்லை. தன் வாழ்வை விழுங்கிவரும் இந்த மாலைக்காலம், வானில் பேரொளி வீசிச் செங்கோல் நடாத்திய கதிரவனையும் விழுங்கிவிட்டதாக உணர்கிறாள். காதலன் திரும்பி வருவான் என்ற நம்பிக்கை தன் உள்ளத்தே சிறிதளவு தோன்றுவதல்போல், வானத்தில் சிறிது ஒளிவீசித் தோன்றும் திங்களின் வாழ்வையும் எண்ணுகிறாள். இருளினுள் கிடந்தே தோன்றும் அந்தத்திங்களின் தோற்றம், இருளின் வாயிலிருந்து வெளிவரும் பொருள் போல்—இருள் உமிழ்ந்த பொருள்போல்—காணப்படுகிறது. மீண்டும் அந்தத் திங்கள் அந்தப் பெருவாயினுள் புகுமே என்ற ஏக்கமும் அவள் நெஞ்சில் எழுகிறது.

மதி உமிழ்ந்து கதிர்விழுங்கிவந்த இம்மருள் **மாலை** என்கிறாள். தன் சிறு நம்பிக்கையையும் இவ்வாறு அழித்துவிடுமோ என்ற கலக்கம் இதில் புலனாகின்றது. அது ஒரு பேய்போல்—தீராப் பசியும் அங்காந்த வாயும் உடைய பொல்லாத பேய்போல் மாலைக்காலம் அவளுக்குத் தோன்றுகிறது. தன் வாழ்க்கையை விழுங்கும் அது, உலகத்திற்கு, ஒளியாயுள்ளவற்றை எல்லாம் விழுங்கவல்லதாகத் தோன்றுகிறது.

"கதிரவன் மறைந்தனனே; காரிருள் பரந்ததுவே;
எதிர்மலர் புரைஉண்கண் எவ்வநீர் உகுத்தனவே;
புதுமதி புரைமுகத்தாய்! போனார்நாட்டு உளதாங்கொல்
மதிஉமிழ்ந்து கதிர்விழுங்கி வந்த இம்மருள்மாலை"

(சிலப்பதிகாரம், கானல் வரி, 41.)

உமிழ்ந்து, விழுங்கி என்னும் சொற்கள் உருவகத்திறன் அமைந்தவை; நம் அகக்கண்ணில் வானத்தின் பரப்பையும் இருளின் செறிவையும் மறைந்த கதிரவனையும் எழுந்த திங்களையும் படமாகத் தீட்டிக் காட்டும் ஆற்றல் இந்த இரு சொற்களுக்கு அமைந்துள்ளன. காதலியின் உள்ளத்தின் வேதனையும் தடுமாற்றமும் இவற்றால் புலனாகின்றன.

புறத்தே காணும் காட்சியையும் அகத்தே உணரும் உணர்வையும் இவ்வாறு சில சொற்களில் விளக்கிக் காட்டும் வெற்றி உயர்ந்த பாட்டுக்கே உரியதாகும்.

தட்டோன் காங்கிரசுத் தலைவரின்
வாழ்த்து.

'பர்மா நாடு' பத்திரிகையின் மறுமலர்ச்சி செய்தி கேட்டு மட்டில்லா மகிழ்வு கொண்டேன். இன அடிப்படையிலும், மொழி அடிப்படையிலும் வேற்றுமை விளைவிக்கும் பூசல்களற்று 'யாதும் ஊரே; யாவரும் கேளிர்' என்ற பரந்த தமிழ் மனப்பான்மையில் முகிழ்த்துச் சீர்பெற்ற திருவாளர் டேவிட் அவர்களை ஆசிரியராகக் கொண்டு 'பர்மா நாடு' மீண்டும் பணியாற்றத் துவங்குவது கண்டு மிக்க பூரிப்பு !

இந்த நாட்டின் நலன் கருதி, நம் மக்கள் விழிப்புக்கு ஒரு தூண்டுகோலாக விளங்கி, முற்போக்கு ஆக்க வேலைகளை நினைவூட்டி, எல்லோரும் இன்புற்றுச் சிறந்து வாழ வழிகாட்டும் ஒளிச்சுடராக 'பர்மா நாடு' பரிதிபோல் பல்லாண்டு தழைத்து வாழ முழுநிறை மனதோடு வாழ்த்துகிறேன்.

சித. நாரா. நாராயணன்,
தலைவர்
அகில பர்மா இந்தியன் காங்கிரஸ்,
தட்டோன் (கிளை)

வணக்கத்திற்குரிய வீரர் போஜோ அவுங்ஸான்

* அரு. காந்தி அண்ணாமலை *

பர்மிய நாடு என்பது ஒன்று என்பதை அதற்கு முன் பூகோளப் படத்தில்தான் பார்க்க முடியும். பர்மிய நாட்டின் செய்திகள், அதன் மக்கள் சுதந்திரத்திற்கு எவ்விதம் துடியாய்த் துடித்தனர் என்ற விபரமெல்லாம் போஜோ அவுங்ஸான் தலைவராக வந்த பின்னரே உலகறிய முடிந்தது. போஜோ அவுங்ஸான் சட்டப் படிப்பை விடாது தொடர்ந்து படித்த பின்னர் ஒரு உயர்தர நீதிபதியாக விளங்கியிருக்கலாம். ஆனால் அவர் தேசத்தின்மீது கொண்ட பெரும் பற்றுதலால் அதை விடுத்து தியாகியாகமாறினார். தங்கத்தை ஸ்புடப்போட்டுப் பார்ப்பதுபோல் பர்மாவில் உண்மைத் தலைவர் யார் என்பதில் போஜோ அவுங்ஸானை மக்கள் பெற்றனர். இளமையிலேயே பெரும்புகழ் பெற்றார். பிரிட்டிஷார் மற்ற நாடுகளில் செய்துவரும் பிரித்தாளும் சூழ்ச்சியை இங்கும் கச்சின், ஷான், கரீன் போன்றவர்களைக் கிளப்பி அரசியலில் சந்தடி ஏற்பட முனைந்தார்கள். அவைகள் எல்லாம் மணற்காட்டிலே பெய்த மழையாகிவிட்டது. அவர்களின் விஷங்கலந்த பிரச்சாரம் போஜோ அவுங்ஸானைத் தலைவராகக்கொண்ட மக்களிடத்தில் ஏறவில்லை.

பிரிட்டிஷ் ஆட்சியில் யுத்தத்திற்கு முன் ஆயுதம் தாங்க உரிமையின்றி இருந்த பர்மியருக்கு, ஜப்பானியர் காலத்தில் ஆயுதத்தைத் தாங்கி அதன் பின்னர் அவர்களையே பர்மாவிலிருந்து வெளியேற்றி. பிற்பாடு பிரிட்டனும் சுதந்திரம்பற்றி வழிக்கு வராவிடில் அதையே உபயோகிப்போமென்பதாகக் கர்ஜித்தவர் போஜோ அவுங்ஸான். ப-ஸ-ப-லா வின் கொடியின் கீழ் பர்மிய மக்களை ஒன்று சேர்ப்பதில் வெற்றி பெற்றார். பிரிட்டிஷாரை படிப்படியாக பணியவைத்தார். கடைசியாக ஒரு வருட காலத்தில் சுதந்திரத்தை அளிக்கிறேன் என பர்மியருக்கு உறுதியும் கூறினார். இன்றேல் அதற்குள்ளாகவே பர்மிய நாடு சுதந்திரத்தை 1948 ஜனவரி 4-ந்தேதி அடைந்துவிட்டது.

உலக மக்கள் கேட்டிராத படுகொலைப் படலத்தை புத்தபகவானைப் பின்பற்றும் மக்களோடு பிறந்த ஊஸோவும் அவரது கையாட்களும் மக்கள் அதிர்ச்சிபெறும் வகையில் மந்திரிமார்களைக் கொன்றார்கள். அரசியல் காரணத்திற்காக மற்ற நாடுகளில் கொலைகள் ஏற்பட்டுள்ளன. சினிமாக் கொட்டகையில் அமெரிக்கத் தலைவர் அப்பிரகாம் லிங்கன் தாக்கப்பட்டார். எழு வருஷங்களுக்கு முன்பு சோவியத் ரஷ்யாவை நிர்மாணிப்பதற்குக் காரணஸ்தர்களில் ஒருவராயிருந்தவரும், உலக அறிஞர்களில் ஒருவரும், சிறந்த எழுத்தாளருமான திரு. டிராட்ஸ்கி மெக்ஸிகோ நகரில் தாக்கப்பட்டு இறந்தார். இந்தியாவிலும் பல முறை தலைவர்களைக் கொல்ல முயற்சிகள் நடந்திருக்கின்றன. சிந்துவில் அல்லாபக்ஸ் மாண்டார். மகாத்மா காந்திஜி மீது குண்டு வீசப்பட்டது. இடைக்கால சர்க்கார் மந்திரி அகமத்கான் குத்தப்பட்டார். பண்டித நேருஜி எல்லைப்புற மாகாணம் சென்

றிருந்தபோது சுடப்பட்டதில் உயிர் தப்பினார். அயர்லாந்துதேச பக்தர் மைக்கேல்காலின்ஸ் தாக்கப்பட்டார். ஆனால் பர்மாவில் நடந்தது போன்று எந்த நாட்டிலும் ஏககாலத்தில் மந்திரி சபையையே தொலைக்க முற்படவில்லை.

பர்மிய மக்கள் ஒவ்வொருவரும் போஜோ அவுங்ஸான் என்ற பெயரை மிக்க மரியாதையுடனும் மதிப்புடனும் உச்சரிக்கின்றனர். நகரங்களிலும். கிராமங்களிலும் அவரது படங்களைக்காணலாம். எண்ணிறந்த சிரங்கள் அவரை வணங்குகின்றன. எண்ணிறந்த வாய்கள் அவரது புகழைப் பாடுகின்றன.

அவரது புனிதமான பெயரானது பர்மிய நாட்டிற்கே ஒரு ஜோதியைக் கொடுத்திருக்கிறது. தேசத்திற்காக அவர் புரிந்த அற்புத தியாகங்கள் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப் படவேண்டியவை.

சுதந்திரம் பெற்றுள்ள பர்மிய நாட்டில் போஜோ அவுங்ஸானின் நோக்கத்தையும்,கருத்துகளையும் சொத்தாகப் பெற்றுள்ள சந்ததியார் வாழ்கின்றார்கள். போஜோ அவுங்ஸானின் வாழ்க்கையைப் பின்பற்றி அனைவரும் நடந்து வந்தால் பர்மிய நாட்டிற்கும், அதன் மக்களுக்கும் பேரின் பமும், பேரும், புகழும் உண்டாகும். அதுதான் நாட்டு மக்களின் கடமையாகும்.

★

ஜூப்பிட்டர் : : : : : :
: : : ஜெனரல் இன்ஷியூரன்ஸ் கம்பெனியில்
: : : : : இன்ஷியூர் செய்து கொள்ளுங்கள்.

உங்கள் ஆயுள், நெருப்பு, கப்பல், மோட்டார், திருட்டு, தொழில் செய்பவர் நஷ்ட ஈடு, முதலிய இன்ஷியூரன்ஸ்கள் செய்துகொடுக்கப்படும்.

இரங்கோன் பிரான்சு:

JUPITER GENERAL INSURANCE Co., Ltd.
644, மெர்ச்சண்ட் வீதி, இரங்கோன்.

உதவி மானேஜர்:
Mg Tun Aung.

பிரான்சு மானேஜர்:
C. S. ராமன்.

"தென்னாட்டின் போஸ்"

பசும்பொன் உ. முத்துராமலிங்கத்தேவர்

"முத்துராமலிங்கத்தேவர் இன்று வருகிறார். நீ வருகிறாயா?" என்றான் என் நண்பன்.

"யாரப்பா, அவர்?" என்றேன் நான்.

"தமிழில் சிறந்த பேச்சாளர்; காங்கிரஸ்காரர். சுபாஷின் முன்னேற்றக் கட்சியைச் சேர்ந்தவர்" என்று அவன் பதில் கொடுத்தான்.

X X X X X

கோகலே மண்டபத்தில் சொல்ல முடியாத கூட்டம். நானும் என் நண்பனும் கூட்டத்தின் இடியைச் சமாளித்துக்கொண்டு தகுந்த இடத்தில் அமர்ந்தோம்.

எனக்குப் புதியவரின் பேச்சைக் கேட்க வேண்டுமென்ற ஆவல் வினாடிக்கு வினாடி நீடித்துக்கொண்டே இருந்தது. கூர்ந்து பார்க்கும் கண்கள்; துடி துடிக்கும் மீசை; உறுதியான உடல்கட்டு; நல்ல உயரமுள்ள அவர், 'இற்றை இளைஞர்களே' என்று தமது பேச்சை தொடங்கினார். 'புலவர் போன்று பேசுவாரோ புரியாதோ!' என்று நான் தொடக்கத்தைக் கேட்டபோது நினைத்தேன்.

என் பயம், கிளைகள் வெட்டிவிட்ட மரத்தைப் பேய் என்று கூவி, பின் தன் பகுத்தறிவாலும் நிதானத்தாலும் மரம் என்று கண்டு தெளிவோனைப்போல் மறைந்து போயிற்று! அவர், தமது இனிய செவ்விய பேச்சு நடையில், ஊசி விழுந்தால் ஒலி கேட்கும் அமைதி நிலையில் கூட்டத்தை நிலைக்கச் செய்து, அழகிய அடுக்குத் தொடர்கள் மூலமாகத் தமது கருத்தைத் தெரிவித்தார்.

அன்று அவர் வீரராயினர் நாட்டு மக்கள் செய்த அருஞ்செயலைச் சொல்லும்போது; கொதித்தெழச் செய்தார், அரசாட்சியினரின் அட்டூழியங்களை எடுத்துரைத்து; ஆழ்ந்த தமது அறிவைப் புலப்படுத்தினார் உலகின் நிலையை

['தொடர்பன்' தீட்டியது]

இயம்பி; வருங்காலத்தை அறியும் அறிஞரானார் எதிர்காலத்தைச் சுட்டிக் காட்டி. ஆம்! அவரது பேச்சு அத்தகையதாக அமைந்து இருந்தது. அன்று அப்பேச்சைக் கேட்காத அன்பர்கள் அவரது பேச்சையே கேட்டுத் தெளியட்டும்:

"முன்பு இந்தியாவில் நிராயுதபாணிகளாக இருந்தவர்கள் மீது கடுமையாகவும், மிருகத்தனமாகவும், ஆகாய விமான மூலமாகவும் ஆயுதங்களைக் கொண்டு தாக்கியவர் ஜெர்மனியரோ, ஜப்பானியரோ, இத்தாலியரோ, மற்ற வேறெந்த நாட்டினரோ அன்று. இப்படிச் செய்தவன் வெள்ளையனே.

நிராயுதபாணிகள் மீது விமானமூலம் குண்டு வீசலாமா என்று சர்வதேச சங்கம் கேட்டபோது, அம்மாதிரி செய்திரா விட்டால் நீதியை நிலைநாட்டி இருக்கமுடியாதென்று சொன்னார்கள். செய்ததை அனுபவித்துத்தான் ஆக வேண்டுமென்று ஆஸ்திகர்கள் கூறுகிறார்கள்! நடக்க வேண்டியதற்கான நியதி ஒன்றிருக்கிறது. இதே வெள்ளையர்கள் மீது ஹிட்லர் குண்டு மழை பெய்து மாடமாளிகைகள், கூட கோபுரங்கள் முதலியனவற்றை இடித்துத் தூள் தூளாக்கினான். ஆகஸ்டு சுதந்திர போராட்டக் காலத்தில் நம் கிராமங்கள் பல குடிசைகள் இழந்து வெட்ட வெளியாகி குட்டிச்சுவராயின.

இங்கிலாந்தின் இப்போதைய நிலைமை என்ன? அங்கு குடியிருக்கவும் வீடின்றி மக்கள் தவிக்கின்றனர். தேவைக்கான வீடுகள் கட்டவும் போதிய சாமான்கள் அங்கு இல்லை. ஐரோப்பாவிலிருந்து இறக்குமதி செய்யலாமோ வென்றால் அங்கும் அவை கிடைப்பதில்லை. இருந்தாலும் கொடுக்க பிரிட்டன் மீது யாருக்

தேவர் வாழ்த்து !

"பர்மா நாடு" பத்திரிகை நீண்ட காலமாக நல்ல சேவை புரிந்துவருகிறது. இன்னும் நல்ல சேவை செய்து பத்திரிகை உலகிற்கே ஒரு முன்மாதிரியாக இயங்க ஆண்டவன் அருள் புரியட்டும்.

தமிழ் மக்கள் நிறைந்த ஜனத் தொகையினராக இருந்தும், தமிழர் வாழ்வு உயர ஒற்றுமையும், உற்சாகமும் இன்னும் வரவில்லை. இது வருங் காலம் சமீபிக்கிறது. பர்மாவை உள்ளிட்ட கிழக்காசியாவும், ஆசியாவும் உன்னத நிலையை அடையும்பொழுது தான் தமிழ் மக்கள் நிலையும் உயரும். இன்றைய சூழ்நிலையில் அமைந்துள்ள அரசியல் நல்ல அமைப்பான பாதையை அடைவதற்கு தமிழர்கள் முன்வரவேண்டிய உயரிய பண்பை ஆண்டவன் அருளவேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

தங்களுடைய அன்பிற்கும், பர்மாவாழ் தமிழ் மக்கள் அனைவருக்கும் என் இதயங் கனிந்த வணக்கம். "பர்மா நாடு" வாழ்க ! தமிழர்கள் வாழ்வு உயருக!! பர்மா நாடும், பர்மிய மக்களும் இன்புறுக !!!

தங்கள் ஊழியன்,

உ. முத்துராமலிங்கத்தேவர்.

கும் நம்பிக்கையில்லை! நாணயச் செலாவணியில் நம்பிக்கை குறைவும் சிக்கலும் ஏற்பட்டிருக்கின்றன. அமெரிக்காவிலிருந்து கட்டிய வீடுகளை இறக்குமதி செய்து அவைகளைப் பிரிட்டனில் வைத்து வாழும் நிலைமையில் பிரிட்டிஷார் இன்று இருக்கின்றனர். நம் நாட்டு நரிக்குறவர்கள் வாழ்க்கை நிலைமைதான் இது. வெற்றியால் கண்ட பயன் இது தான்!!"

'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்' என்ற நியதியின்படி, வெள்ளையர்கள் முன்னாளில் தாம் செய்த கொடுஞ் செயல்களுக்கு ஏற்ற பலனைப் பின்னாளில் பெற்றதையும், இருந்து வாழ வீடின்றித் திண்டாடித் தவித்ததையும் தேவர் மேலே குறிப்பிட்டுள்ளதைக் கண்டோம். எள்ளமும் ஆத்திரமும் உடன் கலந்து சொற்களாக வெளிவந்திருப்பதையும் அறிந்தோம். இனி நாணயச் செலாவணியைப் பற்றியும், அணுகுண்டைப் பற்றியும் அவரது

கருத்தை அறியலாம்.

"நாணயச் செலாவணி விஷயத்தில் பெரிய சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. 1930-ல் பொருளாதார மந்தம் ஏற்பட்டபோது காந்தி—இர்வின் ஒப்பந்தம் ஏற்பட்டது. நிலைமையைச் சமாளிக்க பிரிட்டிஷார் செய்து கொண்ட தந்திரமே இது....

"அணுகுண்டினால் இன்று ஏதோ யுத்தம் முடிந்துவிட்டது. இது வெற்றியா? நிரந்தர வெற்றியா? நிரந்தர சரணாகதியா? அணுகுண்டு கண்டு பிடித்தது அமெரிக்காதானா என்ற சந்தேகம் உண்டாகியிருக்கின்றது. இந்த கடுமையான ஆயுதத்தை வெள்ளையர் அல்லாதவர் மீது அமெரிக்கா வினாக உபயோகித்திருக்கிறது.

'இந்தக் குரங்கு' சேஷ்டை நீண்டநாள் உங்கள் கையில் இருக்குமா என்ற சூசகமான கேள்வி ஒன்றை அறிஞர் பெர்னார்ட்ஷா கேட்டிருக்கிறார். 'நாம் வசிக்கத் தகுந்த இடம் பாதாள அறைகளே' என அமெரிக்கத் தலைவர் ட்ரூமன் கூறியிருப்பது கவனிக்கத் தக்கது. என் அப்படி கூறினார்? தான் செய்த தீங்கு தனக்கே வருமென் எச்சரித்திருக்கிறார். உயிருக்குத் துணிந்து நிற்பவர்களுக்கு இவ்வித பயமுறுத்தலால் என்ன பீதி ஏற்படப் போகிறது?

"மரணம் ஒரு சிறிய மாயை. தென்னை மரத்திலிருந்து விழுந்து பிழைத்தோருமுண்டு! புல்தடுக்கி விழுந்து இறந்தோருமுண்டு! கசையடிக்குப் பயந்துகொண்டிருந்த நாம் 1942-ல் சாதித்தவைகளைப் பார்த்தால் கோழைகளல்ல என்பது தெரியும்....முரட்டுத்தனம் வீரமாகாது; படித்ததெல்லாம் அறிவாகாது; வாழ்க்கையெல்லாம் இன்பமாகாது.

"அரசியல் பெரியோர்கள் அறிவாளிகள் என்று கூறப்படுகின்றவர்கள் பிற்போக்கிலிருக்கிறார்கள் மோட்டாருக்குப் பின் 'கீர்' போடுகிறார்கள். பெரிய தலைவர்கள் இந்த விபரீதப் போக்கை நிறுத்திக் கொள்ள வேண்டும். இல்லையேல் நிறுத்தும்படி இளைஞர்களும் தொண்டர்களும் சொல்ல உரிமை உண்டு; சொல்லத் தான் வேண்டும்....

ஆசிய மக்கள் சுதந்திர தாகம் கொண்டுள்ள நிலையில், இந்தியா வழிகாட்டுமென்று ஏற்பட்டுள்ள எழுச்சியில் வேகமான திரட்சியில், எதிர்நோக்கி வரும் புரட்சியில் சேருங்கள். சேராவிட்டாலும் புரட்சி வேகத்தில் நசுங்கிப் போய்விடாமல் உஷாராக இருங்கள்"

காந்தி இர்வின் ஒப்பந்தத்தின் உள்ளார்ந்த சூழ்ச்சியும் ஆசிய மக்களின் வீரச் செயல்களும், அணுகுண்டினால் ஏற்பட்டுள்ள மாறுதல்களும், தலைவர்களின் பிற்போக்கும், தேவரின் தன்னம்பிக்கையும் அஞ்சாமையும் இணைந்து வந்த ஆழ்ந்த கருத்துக்களும் விரிவான அந்நாள் பேச்சில் காணக்கிடக்கின்றன. சுபாஷின் ஆங்கிலப்பேச்சைக் கேட்டவர்கள், தமிழில் அவரேபோன்று பேசுகிறார் இவர் என்று சொல்லாமல் இரார்.

இன்று திராவிடர் கட்சிக்கு அண்ணாதுரை பெருந்தூணாக விளங்குவதுபோல், தேசீய முற்போக்கு கட்சிக்கு முத்துராமலிங்க தேவர் தமிழ் நாட்டில் ஒரு பேராணாக இருக்கிறார். அண்ணாவும் தேவரும் தமிழ் நாட்டின் பேச்சாளர்களில் இரு கண்மணிகள் போன்றவர்கள்.

இன்று கட்சி அளவில் அவர்கள் இருவரும் வடமுனை தென்முனை போன்று இருக்கிறார்கள். முற்போக்கு கருத்தில் அவர்களிருவரும் ஒரேநோக்கம் உடையவர்களாகக் காணப்படுகிறார்கள். ஒருவர் அரசியல் புரட்சியை முன்பு காணவேண்டுமென்கிறார். மற்றவர் சமுதாயப் புரட்சியைக்காண முனைந்து வேலை செய்கின்றார். பொதுவாக ஆக்க வேலைக்காக இருவரும் அறியாமையைக் கல்வி எடுக்க முன் வந்து இருக்கிறார்கள்.

இருவருக்கும் ஒரே மாதிரியான நிலம் இருக்கிறது. ஆனால், உழுது பயிரிடும் முறையில் தான் வேற்றுமை எழுந்திருக்கிறது. திரு. வி. க. சொல்வதுபோல் இவ்விருவரும் "பன்மையில் ஒருமையைக் காண்பாரே" யாகில் தமிழ் நாட்டிற்கு நல்ல பலன் உண்டாகும் என்பது உறுதி.

தமிழ் நாட்டின் விளைச்சலை அள்ளப்போகும் நாம்தான்—இளைஞர்கள் தான்—நமக்கு வேண்டிய விளைபொருள்களை அவர்கள் உழுது பயிரிடும்படி சொல்ல வேண்டும்; செய்யவேண்டும். இம் முயற்சிக்கு சமர்த்தர்கள்தானா, இற்றைய இளைஞர்கள்? X X X X

சொந்த வாழ்வு

"வேத்தரசன்"

சுதந்திரமாக இருப்பது என்றால் என்ன ?

இதற்கு எடுத்துக்காட்டாக வானத்திலே பறக்கும் பச்சைக்கிளியைக் காட்டுவார்கள். பச்சைக்கிளி நினைத்த இடத்திலே பழத்தையும் பருப்பையும் கொத்தித் தின்று விட்டு எத்தனை மகிழ்ச்சியோடு பறந்து விளையாடுகிறது. அதை பார்ப்பவர்களுக்கே மகிழ்ச்சி வெள்ளம் பெருக்கெடுத்தோடுமென்றால் அதனுடைய மகிழ்ச்சியின் எல்லையை அளவிட முடியுமா?

பச்சைக்கிளியை வைத்து கவியரசர் பாரதிதாசன் ஓர் அழகான கவிதை எழுதியிருக்கிறார்.

ஒரு கூட்டிலே பச்சைக் கிளி ஒன்று வாழ்கிறது, வாழ்கிறது என்று சொல்வது தவறு. அதுவும் ஒரு வாழ்வா? அடிமையாக வளர்கிறது. அந்த வளர்ப்புக் கிளிக்கு இனிக்கும் பழங்களும் சுவைமிக்க பருப்பு வகைகளும் தேவைக்கதிகமாகவே கொடுக்கப்படுகின்றன. தினந்தோறும் அழகிய பெண்ணொருத்தி வந்து அதைப் பார்த்துக் கண்ணே, மணியே, பொன்னே, பூவே என்றெல்லாம் வாயினிக்கப் பேசிப் பேசி அதையும் பேசப் பழக்குகிறாள். கூட்டுக் கிளிக்கு வானத்திலே பறக்கும் கிளியைக் காட்டிலும் வசதி உழைக்காமலே கிடைக்கிறது. ஆனால் அதற்கு நெஞ்சிலே மகிழ்ச்சி ஒன்று தான் இல்லை. அது தேவைக் கதிகமாக உண்ண முடியும். ஆனால் நினைத்தபோது கூட்டைவிட்டு வெளிவர முடியாது. நினைத்த இடத்திற்குப் பறக்க முடியாது. நினைத்ததைச் செய்ய முடியாத நெஞ்சிலே மகிழ்ச்சி நிலைப்பதில்லை. இது தான் சுதந்திர வாழ்விற்கும் அடிமை வாழ்விற்கும் உள்ள வேற்றுமை.

கிளியுடன் பிறந்த சின்ன அக்காக் கிளியொன்று சுதந்திர வாழ்வு வாழ்வதையும் கவியரசர் பாரதிதாசன் வர்ணிக்கிறார். அந்தச் சுதந்திரக் கிளி தென்னங்கீற்றிலே உட்கார்ந்து கொண்டு பொன்னூசல் ஆடுகிறது. சோலை மரங்களினூடேயும் சாலைவழிகளிலும் பாய்ந்து பறந்து, வானத்திலும் பூமியிலும் தன்னிச்சைப் படி திரிந்து, அவற்றைக் கட்டியாளும் அரசன் போல் விளங்குகிறது. தச்சன் செய்த கூட்டிலே இருக்கின்ற கிளியோ அக்காளின் வாழ்வைக் கண்டு ஏங்குகிறது. தன்னை விடுவிக்கும் படி அக்கா அக்கா என்று அவளைக் கூவியழைக்கிறது. இது சுதந்திரக் கனவு.

ஆனால் இக்கனவு நனவாகுமா? அதற்கு அக்கா வந்து சுதந்திரம் கொடுக்க முடியுமா? ஒரே வரியிலே கவியரசர் பதில் சொல்லிவிடுகிறார். உன் சுதந்தரத்தை உன் உழைப்பால் பெற முடியாவிட்டால், உன் சுதந்தரத்தைப்பெற உன் திறமை பயன்பட முடியாவிட்டால், உன் சுதந்தரத்தைப் பெற உன் அறிவு வழிகாண முடியாவிட்டால் உனக்குப் பிறர் வந்து சுதந்தரம் கொடுக்க முடியாது!

"அக்கா அக்கா என்று நீ யழைத்தாய்
அக்கா வந்து கொடுக்கச்
சுக்கா மிளகா சுதந்தரம் கிளியே"

என்று அழகாகக் கேட்கிறார் கவியரசர். கவிதை இதோ:

"தித்திக்கும் பழம் தின்னக் கொடுப்பார்
மதுரப் பருப்பு வழங்குவார்; உனக்குப்
பொன்னே, மணியே, என்றுனைப்புகழ்வார்;
ஆயினும் பச்சைக் கிளியே அதோ பார் !
"உன்னுடன் பிறந்த சின்ன அக்கா
வான வீதியில் வந்து திரிந்து
தென்னங்கீற்றுப் பொன்னூசல் ஆடிச்
சோலை பயின்று சாலையில் மேய்ந்து
வானும் மண்ணுமதன் வசத்தில் கொண்டாள்!
தச்சன் கூடுதான் உனக்குச் சதமோ? அக்கா
அக்கா என்று நீ அழைத்தாய் சுக்கா மிளகா
சுதந்தரம் கிளியே"

வெள்ளைக்காரன் ஆண்ட காலத்திலே இப்பொழுது இருப்பதைக் காட்டிலும் வசதி அதிகமாகவே இருந்தது. சுதந்திரத்திற்குப் பிறகு மக்கள் அடைந்த துன்பம் அளவிட முடியாது.

புதுமை வாழ்க!

[எஸ். டி. சுந்தரம்.]

ஆழ்ந்த கடல் வெளியெல்லாம் வெள்ளியாக்கும்
ஆதவனின் கதிர் போல அமைதியோடு
கீழ்த்திசையில் தமிழ்ப் பெருமை வாழ வாழும்
கீர்த்திமிகும் தமிழ்ப் பெரியீர்! வாழ்க மாந்தர்
சாந்தி எனும் செல்வத்தால் சேர்ந்துவாழ்க!
சமரஸ நல் உறவினிலே இன்பம் வாழ்க!
உலகில் உள்ள பலகலையும் பலமொழியும் தொழிலும் வாழ்வும்
ஒற்றுமையாய் ஓரிடத்தில் ஒருங்கே சேர்ந்து
உறவுடனே வாழ்ந்திடுதல் இயலுமென்று
உங்கள் பெருந் திறத்தாலே வாழ்ந்து காட்டி
உயர்வுமிகும் இப்பணியைச் செயலிற் சொல்லும்
உண்மை மிகு தமிழன்பீர்! உள்ளம் வாழ்க!
உங்கள் பெரும் உள்ளத்தில் பொங்கும் அன்புச்
செந்தமிழின் சுவைபோல பொங்கல் வாழ்க!
தமிழன்பின் பண்பாட்டின் திருநாளின்று
தமிழ்க் கலையின் மாட்சிசொலு பெருநாளின்றும்
திருவோங்கும் முயற்சிகளின் தலைநாளின்று
தவவானத் தனிச்சுடராம் சூர்ய ஜோதி
புதுவேகத் திருப்பத்தின் காந்தி போன்று
பேரின்ப மழை சூழும் புனித நாட்டில்
புவியின்பம் பொங்கிடுக! புதுமை வாழ்க.

வாழி நலம் சூழ.

குறிப்பு:—

கவியின் கனவு, மனிதனும் மிருகமும் முதலிய நாடகங்களை எழுதியுள்ள பிரபல ஆசிரியர் திரு. எஸ். டி. சுந்தரம். சினிமாத் துறையிலும் கீர்த்திபெற்றவர். இதுவரை 10 படங்களுக்குமேல் கதை வசனம் எழுதியுள்ளார். இக்கவிதை "பர்மா நாடு" பொங்கல் மலருக்கென அனுப்பிவைக்கப்பட்டதாகும்.

பஞ்சம் தலைவிரித்தாடியது. பட்டினி அக்கரித்தது. இதுபோன்ற பல இன்னல்கள் பெருகின. ஆனாலும் மக்களாட்சி நடக்கிறது என்ற எண்ணம் நெஞ்சிலே உண்டாகுமானால், மக்கள் நினைத்ததை நடத்தி முடிக்க முடியும் என்ற நிலை ஏற்படுமானால், வசதிமிகுந்த வெள்ளைக்காரன் ஆட்சியைக் காட்டிலும் வறுமை மிகுந்த சுதந்தர ஆட்சியே உயர்ந்ததாகும்.

இன்பந்தரக்கூடிய எண்ணங்களும், எண்ணத்தை நிறைவேற்றி வைக்கக்கூடிய ஆற்றலும், நினைத்தது நடக்கிறது என்ற மகிழ்ச்சியும் உள்ள மக்கள்தான் சுதந்தர வாழ்வு வாழ்கிறார்கள் என்று கூற முடியும்.

சுதந்தரம் என்பது வடமொழிச் சொல். சொந்தம் என்ற தமிழ்ச் சொல்லிலிருந்து பிறந்தது அது. வாழ்வு தனக்குச் சொந்தமானதாக இருக்கவேண்டும். இன்னொருவர் கூறுகிறபடி அமைந்த வாழ்வு சுதந்தர வாழ்வு ஆகாது.

சுதந்தர வாழ்வுக்கு அடிப்படை தாய் மொழி!

தாய் மொழிக்கு உரிமையில்லாத நாட்டிலே பேசப்படுகின்ற சுதந்தரம் திரையிலே காட்டப்படுகின்ற நிழல் படம் ஆகுமே தவிர உண்மைச் சுதந்திரம் ஆகாது. தமிழ்நாட்டைப் பொறுத்த வரையிலே நம் சுதந்தர வாழ்வு எப்படி யிருக்கவேண்டுமென்று பார்ப்போம்.

தமிழர்கள் தம் நாட்டு அரசியலிலே தமிழ் மொழியிலேயே எல்லாவித நடவடிக்கைகளையும் நடத்துவதாக இருக்கவேண்டும். தமிழர்களை ஆளும் பொறுப்புடைய பதவிகளிலே இருப்பவர்கள் தமிழரின் நெஞ்சத்திலே ஓடும் நினைப்பை அறிந்து செயல் நடத்தும் தமிழராயிருக்கவேண்டும்.

கல்வி கற்பதற்கு ஆங்கிலமும், அரசியலிலே பங்கு கொள்ள இந்தியும், கோயிலிலே வேத மோத வடமொழியும் என்ற நிலை நீடிக்குமானால் தமிழன் தமிழனாகப் பிறவாமலிருப்பதே தகும் என்ற மான உணர்ச்சிதான் உண்டாகும். தமிழனாகப் பிறந்த ஒருவன் தன் வாழ்வுக்குச் சிறப்பளிக்கும் கல்வி, அரசியல், மதம் என்ற மூன்று துறைகளிலும் தமிழால் ஒன்றும் செய்ய முடியாது என்ற நிலை ஏற்படுமானால் அவன் தமிழனாக எப்படி வாழ முடியும்? தமிழ்தான் எப்படி வளம் பெற்று ஓங்க முடியும்? தன்னைப் பெற்ற தாயின் அமுத மொழி ஒன்றுக்கும் உதவாத மொழியாக ஆக்கப்படுவதை மானமுள்ள எந்த மனிதனும் பொறுக்க முடியாது.

கீச்சுக் கீச்சென்று இயற்கை மொழி பேசிய கிளி கூட்டுக்கு வந்ததும் அக்கா அக்கா வென்று சொல்லி பல பேச்சுப் படித்தாலும் அதன் சுதந்தர வாழ்வு மறைந்தது போலவே, இயற்கையான தாய்மொழியிலே ஒன்றும் செய்ய முடியாத தமிழன் நிலை வெட்கப்படத் தக்கதாகத்தான் உள்ளது. தான் கல்வியிலே சிறக்கவும், பதவி பெறவும், ஆண்டவனை வணங்கவும்; பல்வேறு பேச்சுக்களைப் படிக்கத்தான் வேண்டுமென்றால் அது தமிழ் நாட்டிலே பிறந்த தமிழனுக்குச் சுதந்தர வாழ்வு ஆகாது.

தமிழன் தமிழிலே படிக்கவேண்டும், தமிழிலே ஆண்டவனைப் போற்றித்திரு அகவல் பாடவேண்டும். தமிழன் தமிழ் ஒன்றினாலேயே எல்லாவற்றையும் நடத்திச் செல்லும் நிலை பெற வேண்டும்.

அந்த நிலை, நெஞ்சில் நினைத்த அறச் செயல்களை நிறைவேற்றி மகிழ்ச்சி பெறும் சுதந்தர நிலையாகும், தமிழன் சொந்த வாழ்வு வாழவேண்டுமானால் தமிழ் நாட்டிலே எந்தத் துறையிலும் தமிழ் மொழி தலைநிமிர்ந்து நிற்கவேண்டும்.

காதல் கவர்ச்சி

[நாரா. நாச்சியப்பன்]

தோழனே அவள் யாரடா?—பசுந்
தோகை மயிலோ பாரடா!

கானில் வளர்ந்த மடப் பிணையோ—பூங்
காவில் பிறந்த மலர்க் கொடியோ
தேனில் கிடந்த கனியமுதோ—கலைத்
தேரில் உலவுந் திருவடிவோ?

காணக் காணவே கவர்ச்சியடா—அவள்
கண்களில் என்ன மலர்ச்சியடா.
பூணத் தகுந்த மாலையடா அவள்
புன்னகை கண்டுயிர் போகுதடா.

வேலினைப் போலிரு விழிகளுமே—மிகு
வேதனை சேர்க்குதென் நெஞ்சினிலே
பாலினை நிகர்த்த மொழிபேசி—இன்பம்
பாய்ச்சுவளோ துயர் நீக்குவளோ!

வெண்ணிலவொத்த முகத்தினிலே—முல்லை
விரிந்ததுபோல் நகை கூட்டினளே
பண்ணிகர் மொழியில் பேசுவளோ?—கண்
பார்வையிலே பதில் கூறுவளோ?

நெஞ்சினில் ஆசை ஊறுதே—என்
நினைப்பும் அளவினை மீறுதே
வஞ்சி என்நிலை அறிவாளோ—இன்ப
வாழ்வு தரவே வருவாளோ?

மகரயாழ்

இந்த 'மகரயாழ்' ஓவியத்தைத் தீட்டியவர் பிரபல நாடகப் பேராசிரியர் திரு. டி. எஸ். முனுசாமி, பி. ஏ. பி. டி. அவர்கள். சென்னையைச்சேர்ந்த மைலாப்பூரில் வசித்து வருகிறார். இவரின் நாடகங்கள் பல மக்களால் பாராட்டப்பட்டிருக்கின்றன. 'பர்மா நாடு' பத்திரிகையில் நம் அன்பரின் எழுத்தோவியங்கள் தொடர்ந்து இடம்பெறும்.

(மேகலை)

ஊரின் எல்லையோரத்தில் இருந்தது அந்த மண்டபம். வருவோர் போவோர் தங்குவதற்கு அவ்வூர் மிராசுதார் கட்டிவைத்ததுதான் அந்த மண்டபம். வழிப்போக்கர்கள் நிறைந்து, பழங்கள் நிரம்பிய ஆலமரத்தில் பறவைக் கூட்டம் போல மண்டபம் காட்சியளித்தது. பிச்சைக்கு செல்லவேண்டிய அலங்காரங்களை அவரவர்கள் வழக்கப்படி செய்துகொண்டிருந்தனர். பூச்சுகள் பூசுவோரும், திருமண் இடுவோரும், மும்முரமாக காரியங்கள் செய்வதைப்பார்த்தால் காலையில் குளித்து முழுகித் தூய்மையானவர்கள் கூடத் தோற்றுப்போவார்கள், அப்படிப் பட்டினத்து மனிதரின் போலியையும் தோற்கடித்துவிடும்.

அந்தம்மாவுக்கு ஐம்பது வயதிருக்கும். களை பொருந்தியமுகம். முகத்தில் அறிவும், கலை ஒளியும் அள்ளி வீசியிருந்தது. அந்தவழியில் சென்றவர்கள் ஏறிட்டுப்பாராமல் சென்றதில்லை. அலங்கார வனிதையைப் படித்தவனும் பணக்காரனும் பார்த்து முறைக்கும் பார்வையல்ல அந்தப்பார்வை. பின்னே!? அறிவுத்தெளிவும் அன்புள்ளமும் யாரைத்தான் ஆகர்ஷிக்காது? அதுவும் சூதுவாதற்ற நாட்டுப்புற மக்கள் அந்தம்மையையும் அவர்களின் மகனையும் சூழ்ந்ததில் வியப்பென்ன! அந்தம்மாள் தன் பக்கத்தில் நின்ற பதினைந்து பதினாறுவயது நிரம்பாத தன் மகனிடத்தில் பேச ஆரம்பித்தாள்.

'என்னடா கண்ணு! நேரமாகவில்லை? தம்புராவுக்கு இன்னுமா சுருதி கூட்டிக் கொண்டிருக்கிறாய்?

'ஆயிற்று அம்மா' இந்த ஊரைச் சுற்றித் திருமபும்புறமெல்லாம் பச்சைப்பசேலென்று என்ன அழகாயிருக்கிறது. சென்னை நகரத்துக்கும் இந்த அமைதியான கிராமத்துக்கும் எத்தனைவேறுபாடு!? உதட்டுச்சாயத்திலிருந்து உள்ளம் வரை எல்லாம் பகட்டு அங்கே........ இங்கே...பளிங்குபோன்ற பாவமற்ற உள்ளங்கள்...சரி, சரி! புறப்படுவோமா அம்மா....?'

தாயும் மகனும் புறப்பட்டார்கள்....தாயை உறித்தெடுத்தார்போல் மகன் இருந்தான். ஆனால் இளமையும் வனப்பும் வாரி இறைத்திருந்தது வாலிபன்பேரில். சுருண்டு தொங்கிய முன் மயிரை அடிக்கடி ஒதுக்கிவிட்டுப்பேசினான். தாயாருடன் பின்புறம் கழுத்துவரையில் கத்தரித்துவிடப்பட்ட மயிரைக் காணும்போது இவன் சினிமாவில் நடிக்கும் பையன் என்றனர் சிலர், பையன் அம்மாவின் காதருகில் கேட்டான். 'என்'மா! எத்தனை நாளைக்கு இந்த ஆண் வேஷம்? வாழ்நாள் பூராவுமேவா இப்படிநான் கழிக்கவேண்டும்?'

'ஆம்! மனமோகன்! வாழ்நாள் பூராவும் நீ பெண் என்பதைக் காட்டிக்கொள்ளக்கூடாது!' சொல்லும்போது ஆண் சமுதாயத்தின் பேரிலேயே ஒரு அலாதி வெறுப்பு தொனித்தது.

'என்'மா?'

'நீயாவது அமைதியாக வாழவேண்டுமென்பதுதான் என்விருப்பம்! அலைந்த உள்ளத்தோடு கூடிய ஆண்களை நம்பவே கூடாது! அதனால்....' கூட்டம் இன்னும் அதிகமாக நெருங்கிவிட்டது. பேச்சுத் தடைப்பட்டது....ஆனால் எண்ணம் தடைப்படுமா அவளுக்கு? என்னென்னமோ எண்ணங்கள். படக்காட்சியில் "சொல்லிக் காட்டும் காட்சி"போல் அந்தம்மையாரின் மனக்கண்ணில் திரையிட்டு ஓடிமறைந்தன, அந்த பாழாய்ப்போன பழைய சம்பவங்கள். என்னத்திற்காக பழசை எண்ணினேம் என்று நினைத்த மாத்திரத்தில் தலை கிறுகிறுத்தது! அப்படியே உட்கார்ந்துவிட்டாள் கானரஞ்சனி. இதுதான் அந்தம்மையின் பெயர்.... காரண இடுகுறிப் பெயராக அவளின் கணவர்

அன்பாக அழைத்த செல்லப்பெயர். அவர் அந்த நாடகக்காரியோடு ஓடிவிடுமுன் தம் மனைவியோடு வாழ்ந்த அந்த சொர்க்க வாழ்வு....இசையிலும் கற்பனையிலுமே மூழ்கிக் கிடந்தனர் அந்தத் தலைவனும் தலைவியும்! எல்லாவற்றையும் விட கானரஞ்சனியின் மகரயாழை அந்த விலைமகளுக்குப் பரிசாக அளிக்க எடுத்துச் செல்லலாமா இந்த மனிதர்! கலைஞன் மென்மையான உணர்ச்சிக்கு வயப்பட்டு அழிந்துபோனது இவர் ஒருத்தர்தானா....எத்தனையோ பார்த்தாயிற்று இந்த வயதிலேயே. அதன்பின் அம்மையார் தன் ஒன்றரை வயதுக்குழந்தையானபெண் குழந்தைக்குத் தானே கல்வியும் சொல்லிக்கொடுத்து இசைப் பயிற்சியும் செய்வித்து, ஆண் வேஷத்திலேயே வளர்த்துவந்தார். மனமோகனா என்ற கணவன் வைத்த பெயரை மனமோகன் என்று மாற்றுவதிலே அதிகசிரமம் இல்லை. இந்தப் பதினைந்து பதினாறு ஆண்டுகளாக ஓரூர் எனத் தங்காமல் தினம் ஓரூராக தமிழ்நாடு பூராவும் சுற்றித்தான் இந்த ஜலஜீவியான வெள்ளங்குழி கிராமத்துக்கு வந்தனர். பசித்தவன் பழங்கணக்குப் பார்ப்பதுபோல் கானரஞ்சனி உட்கார்ந்து கொண்டாள் எழுந்தவள் மண்டபத்தில் தம் பூராவை எடுத்துக்கொண்டு புறப்பட்டாள். "மனமோகனா! நீ மட்டும் போய் வாப்பா...நான் சொன்னதில் விழிப்பாயிரு" என்று எச்சரித்து அனுப்பினாள்.

பாட்டா அது! கான மழை! இசைக்கு இசையார் இருப்பரோ இவ்வுலகில்! முதலில் எடுத்த எடுப்பிலேயே சண்முகப்பிரியா ராகத்தில் முருகனையும், அவன் இளமை அழகையும் வர்ணித்தபோது மந்திரத்தால் கட்டுண்டாற்போல் கேட்டோர் அசைவற்று அப்படி அப்படியே நின்றுவிட்டனர். நாதப்பிரம்மம் அவரவர் செவிவழி சென்று உள்ளத்தைத் தட்டியெழுப்பி எல்லோரையும் ஒரு உலுக்கு உலுக்கி விட்டது. எந்தக் கலையும் பரிபூர்ண நிலையடையும் போது பாமரரும் கண்டுகளிக்க முடியுமல்லவா? அதுதான் சங்கீத இலக்கணமே அறியாத அத்தனை மக்களும் கூடிவிட்டனர். சர்க்கரை இனிக்கிறது என்று சொல்ல சர்க்கரையிலுள்ள இரசாயனச் சேர்க்கை என்னவென்று தெரிந்தால்தான் சொல்ல முடியுமா? அப்படித்தான், 'ஆஹா! என்ன அழகாகப் பாடுகிறான்' என்று ஏகோபித்த அபிப்பிராயம் வெளியிடப்பட்டது! ஏகோபித்த அபிப்பிராயம் கலையுலகில் தவிர வேறு துறையில் ஏது?

நடுவீதியில் சென்றான் பையன். அவரவர்கள் மனம் களிக்கூத்தாட—என்னென்னமோ, அவன் தோளில் தொங்கிய பையில் பரிசில்களை நிரப்பினர். பை வழிந்து நிரம்பியது அரிசியாகவும் காசாகவும். தெருவின் நடுவரிசையில் கீழ்ப்புறம் பெரிய மெத்தை வீடு. அந்த கிராமத்துக்கு அதுதான் கலங்கரை விளக்கம். ஊரோரத்தில் வழிப்போக்கர் தங்குவதற்கு மண்டபம் கட்டிய மிராசுதாரின் வீடு. அவருடைய மகன் கட்டிளம் காளை, பெயர் கானப்பிரியன் என்று அவனுக்கு இசை சொல்லிவைத்த ஆசிரியர் அன்போடு அளித்த பட்டப்பெயர்....! அந்த சங்கீத ஆசிரியர் அவன் இல்லத்திலேயே ஆறேழு ஆண்டுகள் தங்கியிருந்து அவனுக்கு இசைப் பயிற்சி தந்தார். தெருவில் கேட்ட தேவகானம் போன்ற மனமோகனின் இசையமுது அவனை மாடியிலிருந்து நாலே நாலு எட்டில் கீழே கொண்டுவந்துவிட்டது. "இவன் என்ன தேவலோக மனிதனா....இப்படியும் மனிதரில் பாடுவாருண்டா....இந்தக் காலத்தில் தேவலோகமாவது....கீழே தேவன் வருவதாவது....? அதெல்லாம் கற்பனை! அத்தகைய கற்பனையே உருவம் பெற்று வந்தால்........யாருக்குத்தான் மனம் துள்ளிக்குதிக்காது? அதுவும கலையுள்ளம் பெற்ற கானப்பிரியனுக்கு சொல்லவாவேண்டும்? நடுத்தெருவுக்கு ஓடி வந்தான். தெருப் பாடகனிடம்....! வந்ததும் வராததுமாக மனமோகனின் கையைப்பிடித்தான். அத்தகைய மென்மையான கையை உணர்ந்தவனல்ல. அவளும் இத்தகைய பிடியை அறிந்தவளல்லவே!

'அப்பா! நீ என்ன தேவகுமாரனா? கொஞ்சம் என் இல்லத்துக்கு வந்து பாடு! என்ன அபூர்வமான கலைப் பொக்கிஷமப்பா நீ! ஏன் என் கையை இப்படி உதறித்தள்ளுகிறாய்... கையை பிடிக்கவேண்டாமென்றால் விட்டுவிடுகிறேன்...என்ன இவ்வளவு மாறுதல் உன் முக பாவத்தில்...வா....வா...வாப்பா!" மனமோகன் பின்னாலே சென்றான்....! பொங்கற் புதுநாளும்

அதுவுமாக புது சந்திப்பு....நான் கொடுத்து வைத்தவன்'

ஊரே கூடிவிட்டது அதற்குள். அதற்குள் வேலையாட்கள் திண்ணைகளில் கம்பளிகளைப் பரப்பினர்கள் குறிப்பறிந்து. பெரிய வித்வத் சபையே கூடிற்று என்று சொல்லலாம்....! அங்கு ஒரு சிலர் வந்து உட்கார்ந்தவர் சும்மா உட்காரக்கூடாதா?....அவர்களால் சும்மா உட்காரமுடியாதே!

'அப்பா! பண்ணை மீட்டுத்சம்பி! மோகனத்தில் நீ முருகனைப்பற்றிப்பாடுவாயே அந்தப் பாட்டு இந்தப்பையனுக்கும் தெரிந்தால் இரண்டு பேரும் சேர்ந்து பாடுங்களேன்' என்றுர்.

கானப்பிரியன் அந்த தெருப்பாடகனை இளைஞனை உற்றுப்பார்த்தான், "அப்பா உன் கண்களில் உள்ள அழகை நான் எந்த ஆண்மகனிடமும் கண்டதில்லை... ஆண் பரிசுத்தம் அடைய அடைய ஒருவகைத் தெய்விகப்பெண்மையை அடைகிறுன் என்பார் எம் தமிழ்ப்பெரியார் திரு. வி. க. அத்தகைய தெய்விகப்பெண்மையை உன்னிடம் காண்கிறேன்".

பேச்சை மாற்றித்தானே ஆகவேண்டிய கட்டம்ஏற்பட்டதும,மனமோகனின் மனம்அடித்துக்கொண்டது.... தன்னைத்தெரிந்துக்கொள்ளாதிருக்கவேண்டுமேயென எண்ணி ஏங்கினுள் பாவம்! தன் வேஷம் வெளியானல் அம்மாவை சாந்தப்படுத்த யாரால்முடியும்? பேச்சைத் திருப்ப திரும்பவும் கிழவர் கைகொடுத்தது நல்லதாய்ப்போயிற்று. 'பாடுங்கள்.....எல்லோரும் ஆவலாய்க்கூடி காத்திருக்கிறோம்' என்றுர்.

மனமோகன் கேட்டான்....கேட்டான் என்றுதானே சொல்லவேண்டும் வேஷம் வெளியாகும் வரை 'நீங்கள் இசையில் வல்லவரென்று தெரிகிறது.... எந்தப்பாட்டு.... தேசிகவினயகம் பிள்ளையவர்கள் முருகனைப்பற்றிப்பாடிய மோகனராகப்பாட்டா...? எனக்கும்தெரியும் பாடுங்கள் அய்யா....'

'மோகனம் மட்டும் பாடக்கூடாது நான்'

'அதுதானே நன்றுய் பாடுவாய்'....இது கிழவர் விவரம் சொன்னது" அது என்னவோ உண்மைதான். 'ஏன் அப்படி' என்றுன் தெருப்பாடகன். 'வேறுபாடுங்களேன்' என்றுன் தொடர்ந்து, 'மிராசுதார் வீட்டுத்தம்பி மோகனம் பாடவேண்டும்....கேட்கவேண்டும்! வேறு எத்தனையோ வித்துவான்கள் மோகனம் பாடிக் கேட்டாயிற்று....உன் பாட்டுக்கு உறைபோடக் காணுது....பண்ணையார் மகனும் பண் அறிந்தவனும் பண்பாடுடையவனும் ஆன கானப்பிரியன் சொன்னுன் 'உண்மைதான்...நான் மோகனம் பாடக்கூடாதென்று என் ஆசிரியர் கட்டளை அதை நான் மீறமாட்டேன்...ஆனல் ஒரு நிபந்தனை விதித்திருக்கிறுர். அதை நான் நிறைவேற்றினல்தான் மோகனம் பாடலாம்.... அதுவரை... மன்னிக்கணும் தாத்தா...வேறு ஏதேனும் பாடுகிறேன்."

கிழவர் எழுந்தார்... அந்த நல்ல ரசிகரை இழக்க கலைஞன் விரும்புவானு?

'யார் உங்கள் ஆசிரியர்....? என்ன நிபந்தனை....? சொல்ல முடிந்தால் சொல்லுங்கள்...!' என்றுன் தெருப்பாடகன்.

அந்த நல்ல மாணவன் தன் ஆசிரியரைப் பற்றி சொல்ல ஆரம்பித்தான்...'என் ஆசிரியரின் மனைவியாரைத்தேடி.....அவரிடத்திலே ஆசிரியர் தன்தவறுக்காக வருந்திய வருத்தத்தையெல்லாம் தெரிவித்து....அவரிடத்திலே அவருடைய **மகரயாழை** ஒப்பித்தாலல்லாமல் நான் 'மோகனம்' பாடக்கூடாது. நானும்தான் எங்கெங்கோ தேடிப்பார்க்கிறேன்....கிடைக்கவில்லை அவ்வம்மையாரும் அவர்மகளும்.

மனமோகனவின் உடல் ஒரு உலுக்கு உலுக்கியது....மகரயாழ் என்ற சொல்லை தன் தாயார் எத்தனையோ தடவை சொல்லிச்சொல்லி அங்கலாய்ப்பதுண்டு! 'மகரயாழை அந்த விலைமகளுக்குப் பரிசிலாகக்கொடுக்க எடுத்துச் சென்றுவிட்டாரே' என்று தாய்புலம்பியதை ஒரு தடவை இருதடவையா கேட்டிருக்கிறுள்! பரப்பரப்போடு எழுந்த தெருப்பாடகனை கையைப்பிடித்தான். அவள் உடம்பில் மீண்டும் மின்சாரம் பாய்ந்து....பரவசப்படுத்திற்று. மெள்ளவிலக்கினுள் கையை இப்போது....'உட்காருப்பா.... ஏன் கலவரம் அடைகிறுய்? உட்கார் அந்த மகரயாழைக் கொண்டுவருகிறேன்...." என்றுன்.

தமிழ் சமுதாயத்துக்கே தனிப்பெரும் சொத்தான மகரயாழ் இப்போது இருக்குமிடமே தெரியவில்லையே! எல்லோரும் ஆவலுடன் எதிர்பார்த்தனர்! உள்ளே சென்றவன் விநாடியில் யாழும் கையுமாக ஓடிவந்தான். வெண்பட்டுறையோடு யாழ்வந்தது....கையில் வாங்கி அவசர அவசரமாக உறையை நீக்கி பொன் எழுத்துக்களால் **கானரஞ்சனி** என்ற சொல்லைப் பார்த்தாளோ இல்லையோ பரவசப் பட்டுப்போனாள்.

"மேலும் சொல்லுங்கள்", என்று துடியாய்த்துடித்தாள்.........

பண்ணையார் பிள்ளை, "என் ஆசிரியரின் மனைவியார் திருமதி கானரஞ்சனி அவர்களின் பொன்னடிகளில் இதை வைத்து....என் ஆசிரியரின் மன்னிப்பையும்வருத்தத்தையும்தெரிவித்தால் தான்....' அவன் வாக்கியத்தை முடிக்கட்டும் என்றபொறுமையாவதுவேண்டாமோ...தெருப் பாடகன், "அய்யா....எனக்குத் தெரியும் அவர்களை...என் தாயார்தான்....கொடுங்கள் இதை...நான்....நான்....அவர்களின்...." முடிக்க முடியவில்லை....அவளால்!....புரிந்துகொண்டான் புத்திமானான வாலிபன்....'நீதான் என் ஆசிரியன் திருமகளா!? ....நீ கலைமகளும்கூட........'

மகரயாழைத் தூக்கிக் கொண்டோடினாள் மண்டபத்துக்கு தாயிடம் !'என்னம்மா! ஆண்கள் என்றாலே அப்படி வெறுத்தாயே!....பார்த்தாயா ....அப்பா எவ்வளவுவருந்தி இருக்கிறார் உனக்குச் செய்த துரோகத்துக்காக, இதோ உன் யாழ் .. எல்லாம் இவர் சொல்லுவார்...நம் அப்பாவிடம் படித்தவர்' என்று முடித்தாள் மனமோகனா.

அவன் சொன்னான்....எல்லோரும் கேட்டனர்....அப்புறம் என்ன கதை!

கானப்பிரியனும் மனமோகனாவும் சேர்ந்து இசை வெள்ளத்தைப் பரப்பினர் அந்தப் புது நாள் பொங்கலன்று. கடல்கடந்து உங்கள் நாட்டுக்கும் வந்தால் கானாமிர்தமாகக் கேட்டுப் பாருங்களேன்!....மோகன ராகத்தில் முருகன்.... அழகு........பாட்டைக் கேட்டுப் பாருங்கள். குறிஞ்சிநிலக் கடவுளாயிற்றே முருகன்....கேட்டுப் பாருங்கள்....கானரஞ்சனியை அபூர்வமான மகரயாழையும் உடன் வாசிக்கச் சொல்லுங்கள்.

நல்லோர் உறவு!

[யோகி சுத்தானந்த பாரதியார்]

கற்றறிந்ததை அமைதியாகச் சிந்தித்துத் தெளிந்து நில்; நல்லறிஞர் உறவு நல்லறிவைத் தூண்டும்; கனியோடு சேர்ந்த காயும் பழுக்கும்; அறிஞரை வணங்கு; அவர்களிடம் அளவளாவு; அவருரை கேட்டு உன் அறிவைப் பெருக்கு; எவரிடம் பழகினாலும் நல்லதைப் பேணிப் பொல்லாததை விலக்கு; ஒவ்வொருநாளும் உனது குறைகளை ஆராய்ந்து விலக்கி நிறைபெறமுயல்; பெரியோர் உதாரணங்களையும், திருமொழிகளையும் நினை; சிற்றினஞ் சேரேல்; **சேர்கை போல வாழ்க்கை;** மாசற்ற பூரணனை நம்பு; அவனடி பணி; அவனை குருவாகக்கொள்; அவன் மொழிகளை உள்ளே ஆராய்; பெரியோர் வழிகாட்டுவர்; நீ வழி நடந்து இன்பத்துறை சேரவேண்டும். குருட்டு நம்பிக்கையும், காலத்தால் உளுத்துதிர்ந்த பழக்கவழக்கங்களும், மூடப்பிடிவாதங்களும் பற்றி உன் வாழ்வைப் பாசிபிடிக்கச் செய்யாதே; வாழ்வாறு புதப்புது ஊற்றுநீர் பெருகி சுயேச்சையாக ஓடச்செய்; எவ்வொன்றையும் நன்றாக அறிவால் ஆராய்ந்து, பெரியோரைக் கேட்டறிந்து, சோதித்து, நல்லதாயின் உனதாக்கிக்கொள்; எப்போதும் மனம் விழித்திரு; கவனமாயிரு; எந்த நலனையும் நிறைபெறச் செய்; எத்தீமையும் அறவே யொழி; உன் மனச்சாட்சியைத் தொட்டுப்பார்; அது எப்போதும் உண்மையே பேசும்; வாய் பொய் பேசினாலும், மனச்சாட்சி, "அட பயலே! என் பொய் பேசுகிறாய்?" என்று சவுக்கடி கொடுக்கும்.

★

நவரத்ன களஞ்சியம்

160-162, மொகல் வீதி, இரங்கூன்.

தந்தி: "ரத்னம்" தபால் பெட்டி. எண். 387.

இரங்கூன் வைரங்கள்

தற்கால நூதன
ஆபரணங்களுக்கு
மிகவும் பொருத்தமானவை

"மங்கை நல்லாள் மனைக்கு அழகு"

மங்கையர்க்கு அழகு மணியிழை ஆபரணங்கள்!

* நங்கையர் மனதை நளினப் படுத்தும் நவநாகரீகமான நகைகள்.
* மெருகுடன் மிளிரும் புதுமையான தோற்றம்.
* வனப்பின் ரகசியத்தை வெளிப்படுத்தும் வன்மை வாய்ந்தவை!

எல்லா வகையிலும் மேன்மையானதும், கவர்ச்சிகரமானதுமான கமலங்கள் எம்மிடம் கிடைக்கும்.

Prop: A. K. PERUMAL,

NAVARATHNA KALANGIUM,

JEWELLER & DIMOND MERCHANT

160–162, MOGUL ST, RANGOON.

என் தாய்நாடு

குமாரி வி. லட்சுமி, பி,ஏ.

'நாமிருக்கும் நாடு நமதென்ப தறியோம்'

என்றே சிலகாலம் மக்கள் வாழ்ந்தனர்! இந்த உணர்ச்சியற்ற மக்கள் வாழ்வை மென்மேலும் சிதைத்து, தாய்நாடே இல்லாமல் ஒழித்துக்கட்ட சதிகள் பல தோன்றின. எத்தனை — எத்தனை அசுரர்கள் நம் தாய்நாடு மீது படையெடுப்பது? கட்டியாள நினைப்பது? எத்தனை சாம்ராஜ்யங்கள் தலைகீழாக உருண்டோடி மறைந்தன?

சொந்த நாட்டில் பிறர்க் கடிமை செய்து துஞ்சிடோம்; இனியஞ்சிடோம் என்றெல்லாம் மார்தட்டிய மக்களை வெட்டி வீழ்த்திய—சுட்டுப் பொசுக்கிய—ஊரையே கொளுத்திச் சாம்பலாக்கிய கொடூரமான கோரச் சம்பவங்கள் எத்தனையோ விடுதலை இயக்க வரலாற்றில் இடம் பெற்றவை! இதந்தரு மனையினீங்கி இடர் மிகு சிறைப்பட்டனர். வீர சுதந்திரம் வேண்டி நின்ற மக்கள் வேறொன்றும் வேண்டார் அன்றோ! இதன் எதிரொலியாய் நாடெங்கும் மக்கள் மூச்சிலுங்கூட, எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு; நாம் எல்லோரும் சமம் என்ப துறுதியாச்சு என்றெல்லாம் முரசு முழக்கினர். ஆர்ப்பாட்டம் அதிகரித்தது! வறுமையால் வீழ்ச்சியுற்று ஒரு பிடி உணவுக்கு வழியற்று பட்டினியால் வாடிக்கிடந்த மக்களும், சுதந்திர உணர்ச்சி வேகத்தால் உயிர்பெற்று நடமாடக் கிளம்பிவிட்டனர். தனி மனிதன் ஒருவனுக்கு உணவில்லையென்றால் சகத்தினை அழித்திடுவோம்--இனி ஏழை என்றும், அடிமை என்றும் எவனுமில்லை சாதியில்! இழிவு கொண்ட மனிதரென்பது இனி இந்தியாவில் இல்லையே என்றெல்லாம் ஆரவாரம் செய்தனர்.

"ஆடுவோம் — பள்ளுப் பாடுவோம்— ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம் என்று ஆடுவோம்" என்றெல்லாம் கற்பனை செய்து கொண்டு, மக்கள் குருதியில் வீரத்தைச் செலுத்திய வீர பாரதிக்கு வணக்கம்.

"நாமார்க்கும் குடியல்லோம், நமனை அஞ்சோம்" என்ற தமிழரின் மூச்சு விண்ணைத் தகர்த்தது. சுடர் கொளுத்தும் பாரதியின் புரட்சியைக் கண்ட வெள்ளை அரசாங்கம் எள்ளி நகையாடியது. கையாலாகாத கபோதிகள் கூத்தாடுகின்றனர் என்று கேலி மொழி பேசினர். "இந்தியாவை ஆளப்பிறந்தவர்கள் நாம்" என்ற இறுமாப்பால் கோட்டான்களைப் போல் கொக்கரித்தனர்.

சுதந்திர தாகம் கொண்ட மக்களின் உரிமைக்குரல் நாலு திசைகளிலும் எதிரொலித்ததும், நூற்றைம்பது வருடங்களாக ஏகபோகமாக சின்னஞ்சிறு எதிர்ப்புக்களை அவ்வப்போது சமாளித்துக்கொண்ட வெள்ளையர் அஞ்சிவிடமுடியுமா? என அகம்பாவத்தால் 'சூரிய அஸ்தமனமேயற்றிருந்த" பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இறுமாப்புடனிருந்த சமயத்தில் வாழ்விக்க வந்த காந்தி மகான் தென்னாப்பிரிக்காவிலிருந்து 1919-ல் பாரத நாடு திரும்பினார். மக்கள் நிலை கண்டார்; சுதந்திரப்போரின் பல திட்டங்களால் மக்களுக்கு ஏற்பட்ட கொடுமைகளைக் கேள்வியுற்றார், வீரப்புதல்வர்களை பலாத்காரத்தை உபயோகித்து பழி வாங்கப்பட்ட படலங்களை கவலையோடு கவனித்துக் கேட்டார். கருணைமிக்க காந்தி அண்ணல், அன்றே! அறப்போரின் சக்தியால்தான் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை சரணாகதியாக்க முடியுமென்ற உறுதியில் ஆன்மீக பலத்தை ஆயுதமாக ஏற்றார். நீதி தவறாத நெறியில்—எதிர்ப்பவனுக்குத் தீங்கிழைக்காத துறையில் சத்தியாக்ரக முறைகளைக் கையாளத் தூண்டினார். பலாத்காரத்தில் நம்பிக்கைக் கொண்டிருந்த தேசத் தலைவர்கள் பலர் இதற்கு இலகுவில் இணங்கவில்லை.

ஆத்மபலத்தை அடிப்படையாகக்கொண்டு சுதந்திரப்போரை நடத்தி வெற்றி காணமுடியுமா என்ற சந்தேகத்தைச் சிலர் கிளப்பினர்.

காங்கிரசுக்குள் கட்சி பேதம் தலைகாட்டியது. பயங்கரப் போர்க்கருவிகளையுடைய வெள்ளையரை, ஏககாலத்தில் எதிர்த்து நின்று மக்களை மென்மேலும் பலி கொடுக்க விரும்பாத காந்தியடிகள், தன் இலட்சியத்தை நாடெங்கும் பரப்பினர். தேசத் தந்தை காட்டிய வழியை மக்கள் உவப்புடன் ஏற்றனர்.

அண்ணல் நடத்திய பல போராட்டங்களில் வெற்றி-தோல்வி கைமாறிக்கொண்டேயிருந்தாலும், நாளடைவில் **"காந்தீயம்"** வேரூன்றிவிட்டது! மக்களின் சுதந்திர உணர்ச்சியைக் காத்து நிற்க காந்தியடிகளே முன்னணியில் நின்றார். வேடிக்கையாக நடத்திய உப்பு சத்தியாக்ரகம், நாடெங்கும் ஒரு பெரும் பூகம்ப எழுச்சியை தோற்றுவித்தது. உப்புப்போரில் புதைந்துகிடந்த "அரசியல் புரட்சி"யை பிரிட்டிஷ் அறிவாளிகள் உணர்ந்தனர். அன்று முதலே கர்மயோகி காந்தி தலைமையேற்ற இந்தியாவை, இனியும் நாம் அதர்மமாக ஆளமுடியாது என்ற முடிவுக்கு வந்தனர்.

இந்த நிலையில் ஐரோப்பாவில் இரண்டாவது உலக யுத்தம் மூண்டது அபாயகரமான இந்தச் சூழ்நிலையில் நம் தலைவர் நேத்தாஜியை மறந்துவிட முடியாது. பாரதத்தின் இரண்டாவது "எரிமலை" என்று கருதப்பட்ட நேத்தாஜி, 1941-ல் தனது சொந்த வீட்டிலேயே சிறை வைக்கப்பட்டார். வீட்டைச்சுற்றி முன்னும் பின்னும் ஆயுதம் தரித்த போலீசாரின் காவல் இருந்துவந்தது. திடீரென ஒருநாள் நேத்தாஜி முஸ்லிம் போன்று மாறுவேடத்தில் வீட்டை விட்டு வெளியேறிவிட்டார், ஜியாவுதீன் என்ற பெயரால்! ஆப்கன் தலைநகரான காபூல் சென்று அங்கிருந்து இத்தாலி வழியாக ஜெர்மனி சென்று ஹிட்லருடன் ஒரு ஒப்பந்தம் பேசினர். ஒரு நீர்மூழ்கியின் உதவியால் • ஜெர்மானியை விட்டு ஜப்பான் வந்து மீண்டும் 1942-ல் சிங்கப்பூர் வந்துசேர்ந்து, இந்தியச் சுதந்திரப் படையை நிறுவி செங்கோட்டைமீது படையெடுக்க முயன்ற வரலாறு பர்மா—மலேயா மக்களுக்குப் புதிய சரித்திரமாகாது!

யுத்த காலத்தில் தாயகத்தில் நடந்த போராட்டத்தில் காந்திஜி உள்பட பல தலைவர்கள் சிறை புகுந்த வரலாறு எல்லாம் மக்கள் மனக்கண்முன் நிற்கின்றன.

வைசிராய் வேவல் சமரசப் பேச்சும், கிரிப்ஸ் தூதுகோஷ்டியின் வருகையும் முறிந்ததும், இராஜப் பிரதிநிதியாக லார்ட் மௌண்ட் பேட்டன் இந்தியாவுக்கு வந்தார். அரசாங்கத்தில் சமரசம் ஏற்பட்டதும், இந்தியரின் கோரிக்கையைச் செவிமடுத்து 1947 ஆகஸ்ட் 15-ல் சுதந்திரப் பிரகடனம் வெளியாயிற்று. பின்னர் மௌண்ட்பேட்டனும் வெளியேறினர்.

ராஜாஜி இறுதியாக பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் பிரதிநிதியாக கவர்னர் ஜெனரல் பதவி ஏற்றார்.

ஆகஸ்டு 15-ல் "ஜெயபேரிகை கொட்டடா!" என்ற வீர பாரதியின் இடிமுழக்கம் டெல்லி செங்கோட்டையில் எதிரொலித்தது. ஆகஸ்டு 15-ல் பொழுது புலர்ந்தது! நாம் செய்த தவத்தால் புன்னமை இருட்டுலகம் புத்தொளி பெற்றது; புள்ளினம் ஆர்த்தது; ஆர்த்தன முரசம்; முழங்கியதெங்கும் சுதந்திர நாதம்!

"தாயின் மணிக்கொடி பறக்குது பாரீர்!" என்ற முழக்கத்தோடு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் கொடி இறங்க, தாய்நாட்டின் உரிமைக் கொடி கம்பத்தில் ஏறியது! ஆம்; விடுதலைக் கனவு நனவாகியது!

இந்திய சுதந்திரத்திற்காக தியாகம்செய்து உயிர்நீற்ற தலைவர்களுக்கு "நினைவு" கூறுவதுடன், பர்மாவின் விடுதலைக்காகப் போரிட்ட வீரர்களையும் அஞ்சலி செய்யக் கடமைப்பட்டுள்ளோம். அண்ணல் அடைந்த பரிசைப்போலவே விரோதி ஒருவனின் "துப்பாக்கிக்குண்டுக்கு"த் தன்னையும், தன் தோழர்களையும் பலிகொடுத்து வீர மரணம் எய்திய போஜோ அவுங்சான் அவர்களையும் மற்றவர்களையும் வணங்கக் கடமைப்பட்டுள்ளோம்!

தமிழகத்தைத் தட்டியெழுப்பிய புரட்சிக் கவி பாரதிக்கும், அறப்போரின் தன்மையை வலியுறுத்தி, அகிலமே வியக்கும்வண்ணம் விடுதலைப் போர் நடத்தி வெற்றி கண்ட அண்ணல் காந்திக்கும், நெருப்புப் பொறி பறக்க சுதந்திர

இந்தியா ஒரே இனமாக...

✽ வழிகாட்டும் காந்தியடிகள் ✽

தென்னுப்பிரிக்காப் போரில் தமிழ் மக்கள் புரிந்த துணைபோல் வேறு எந்த இந்தியரும் புரியவில்லை. அவர்களுக்கு நன்றியறிதல் காட்ட அவர்கள் நூல்களைப் பயிலவேண்டுமென்று நினைத்தேன். ஆயினும், தமிழ் மொழியில் புலமை பெறுவதற்குரிய ஓய்வு எனக்கு ஆண்டவன் அருளினுரில்லை. அது குறித்து எனக்குள்ள வருத்தம் அளவற்றது.

நான் தமிழ் பயிலத் தொடங்கியதற்குக் காரணம் **திருக்குறள்** மூலத்தையே நேராகப் படித்தல்வேண்டுமென்று என் உள்ளத்தில் எழுந்த அவாவேயாகும்.

தமிழ் மொழி பயிலப் பயில, அதன் அழகை உணரலானேன். அஃதொரு மனங் கவரும் இனிய மொழி. தமிழ் மக்களுள் பண்டைநாளிலிருந்து இந்நாளிலுங்கூட பல அறிஞர்கள் இருந்தார்கள்; இருக்கிருர்கள் என்பது அம்மொழியின் அமைப்பாலும், அதைப் பயில்வதாலும் அறியக்கிடக்கிறது.

இந்தியாவில் ஒரே இனம் ஏற்படவேண்டுமானுல், சென்னை மாகாணத்துக்கு வடக்கேயுள்ளவர்களும் தமிழைக் கற்கவேண்டும்.

முழக்கம் செய்த நேத்தாஜிக்கும், பர்மாவின் விடுதலைக்கும் முன்னேற்றத்திற்கும் போராடிய போஜோ அவுங்சானுக்கும் சுதந்திரத் தியாகிகள் அனைவருக்கும் எனது இதய வணக்கம் உரித்தாகுக!

நான் பிறந்த என் தாய்நாடும், இன்று வளர்ந்து வாழும் என் சுவீகார நாடாகிய பர்மாவும், அறியாமையை விரட்டி அறிவுகொளுத்தும் தனிச் சுடராம் "பர்மா நாடு" பத்திரிகையும் வாழ்க! **வாழ்க பல்லாண்டு!**

ஏன்?

(நெற்குப்பை ராமசுப்ரமணியன்)

மலர் இருக்கும் இடத்திலே
வண்டுவந்து மொய்ப்பதேன்?
—தேனைக்குடிக்க!

பழம் இருக்கும் இடத்திலே
பட்சிவந்து சேர்வதேன்?
—கொத்தித்தின்ன!

இனிப்பிருக்கும் இடத்திலே
எறும்புவந்து மொய்ப்பதேன்?
—சுவைத்துத்தின்ன!

பொந்திருக்கும் இடத்திலே
பூனைவந்து சேர்வதேன்?
—எலிபிடிக்க!

பணம் படைத்த மனிதரைப்
பலரும் சுற்றித் திரிவதேன்?
—அண்டிப் பிழைக்க!

இராமனதபுரம் ஜில்லா

பிரிமியர் லாட்ஜ்

87, தம்புச்செட்டி தெரு, சென்னை-1

சிங்கப்பூர், பினுங்கு, பர்மா, அந்தமான்

முதலிய இடங்களுக்குச் செல்லும் பிரயாணிகள் தங்குவதற்கு நல்ல காற்றோட்டமுள்ள இடவசதிகளுடன் அறைகள் அமைத்துள்ளேன்.

பாஸ்போர்ட், டிக்கெட் ரிஷர்வேஷன் போன்றவைகள், **கப்பல், விமானப், பிரதேச ரயில்வே** மார்க்கங்களில் உண்மையான கட்டணத்திற்கு ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படும்.

உரிமையாளர்,

சி. ராமக் கோனர்.

ஆர். எடில்மாரல்,
தலைவர், தமிழர் ஐக்கிய சங்கம், மினிகோன்.

பர்மாவில் குறிப்பாக இரங்கூனிலிருந்து அப்போதைக்கப்போது தோன்றி மறைந்த தமிழ்ப் பத்திரிகைகள் பல. அவைகளுக்கிடையில் யுத்தகாலத்திற்குமுன் சீர், நெறி, முறை பிறழாது பணியாற்றிய "பர்மா நாடு" உயர்ந்த அமைப்பையும் பழுதற்ற பண்பையும்கொண்டு பல்லாண்டுகளாய் நற்பணி புரிந்து பர்மாவாழ் இந்திய சமுதாயத்துக்கே பெரும் தொண்டாற்றிய தமிழ்ப் பத்திரிகை ஆகும்.

மன்மத ஆண்டு ஆடித் திங்கள் 30ம் நாள் (15-8-55) பாரத நாட்டின் சுதந்திர தின விழாவன்று மலராகத் தோன்றி மீண்டும் வார இதழாகவும், தினத்தாளாகவும் "பர்மா நாடு" வெளிவருவதாக அறிந்து மகிழ்ச்சியுறும் மக்கள் மன்றத்தில் நானும் ஒருவன்.

வாழ்க 'பர்மா நாடு!'

"பர்மா நாடு" தமிழ் நாட்டு மக்களுக்கும், இந்நாட்டுக்கும் தக்க ஆக்கப் பணி புரிந்து தமிழ் மக்களின் அறிவு விளக்கத்துக்கும், அவர்கள் தம் நல்வாழ்வுக்கும், தூய்மையான ஒழுக்கத்திற்கும் விழிப்புறவும் உயர்ந்த, தமிழ் நூல்களை ஆராய்ந்து ஆராய்ந்து பயிலவும், குலமும் குடியும் வழிபடுந் தெய்வமும் ஒன்றே என்ற தெளிவைப் பெறவும் பரிசுத்தப் பணி செய்ய எமது வாழ்த்துரை ஓர் காணிக்கையாக "பர்மா நாடு"க்கு உதவுமாக!

நமது நாட்டுக்கும் தமிழர் சமுதாயத்துக்கும் நலந் தேடுவதாக வெளிவரும் பத்திரிகைகள், தமிழர் தம்மை யறிவதற்கும் தமிழரை மதியாதுள்ள ஏனைய நாட்டு மக்கள் தமிழரின் பண்டை நாட்டுப் பெருமையை அறிந்துகொள்வதற்கும், தமிழரின் ஒற்றுமைக்கும் முன்னேற்றத்துக்கும் பெருத்த முட்டுக்கட்டையாய் மலைப் போலிருந்துவருகிற சாதியும், சிறு தெய்வ வழிபாடும் சரிந்து விழவும், தமிழர் மீண்டும், இழந்த தம் பெருமையை பெறச் செய்வதே உண்மை நலந் தேடுவதாகும்.

துளிர் விடும் பயிருக்கு வேலியிடுவதைப் போல-வளரும் தமிழருக்கு பழுது வாராமல் காத்திடவும், மொழிப்பற்று, நாட்டுப்பற்று, இனப்பற்று, தன்னுணர்வு ஆராய்ச்சி நுண்ணறிவு இவைகளை பெருந்தனமாய் வாய்க்கப் பெற்ற உயர்திரு வி. எச். டேவிட் அவர்களை ஆசிரியராகவும் பெற்ற "பர்மா நாடு" பாரெல்லாம் புகழ் மணக்க வாழ்க பல்லாண்டு, பல்லாயிரத்தாண்டுயென வாழ்த்துக் கூறுகின்றேன்,

வாழ்க, பர்மா நாடு, வாழ்க!

வாங்கிப் படியுங்கள்!

'தென்னாட்டின் போஸ்' என பெருமையோடு அழைக்கப்பட்டுவரும் பசும்பொன் உ. முத்துராமலிங்கத்தேவர் அவர்களைப்பற்றி தமிழகமும், பர்மாவும் நன்கறியும். இவர் நேதாஜியின் தமிழுருவம்! முன்னேற்றக்கட்சித் தலைவர். சிறந்த அரசியல் மேதை; செந்தமிழ்ப் புலமை பெற்றவர். இடிமுழக்கம் செய்து வரும்சிங்க ஏறு! இவரைப்பற்றிய வாழ்க்கை வரலாற்றைச் சுருக்கமாக திரு. கே. இராமமுத்துராசன் 'தேவர்' என்ற நூலில் எழுதியுள்ளார். தமிழர் அனைவரும் அவசியம் படிக்கவேண்டிய நூல். இன்றே வாங்கிப்படியுங்கள்!

அன்புள்ள,
எஸ். கே. வி. தேவர்,
தேவர் நூல் விற்பனை உரிமையாளர்.
316, மோகல் வீதி, இரங்கோன்.

"பர்மா நாடு"

[வெள்ளிவிழா மலர்]

இருபத்தைந்து ஆண்டுகளின் சேவை அனைத்தும் திரண்டு வெள்ளி விழா மலராக உருக்கொண்டு பலருக்கும் பயனளிக்கும்வகையில் கவர்ச்சிகரமான முறையில் தமிழிலும், ஆங்கிலத்திலும் கட்டுரைகளைத் தாங்கி 1956ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14ந் தேதி தமிழ் புது வருடத் தினத்தில் வெளிவருகிறது. மலர் வெளி வரும் நாளில் வெள்ளி விழாவையும் மிக்க சிறப்பாக நடத்திவைக்கவேண்டு மென்பது நம் அன்பர்களின் திட்டம். வெள்ளி விழா மலரிலும் விழாவிலும் பல புதுமைகளைக் காணலாம்.

பல உலகப் பெரியார்களின் அரிய கட்டுரைகள், பெரியார்களின் சரித்திரங்கள், பர்மாவில் உள்ள தமிழ் மக்களின் ஸ்தாபனங்கள்பற்றிய விவரங்கள், படங்கள், கிழக்காசியாவில் உள்ள பல நாடுகளின் சரித்திரங்கள், அரசியல், வர்த்தகம், கைத்தொழில், விவசாயம், பொருளாதாரம், விஞ்ஞானம், கல்வி, கலை, இலக்கியம், சிறுகதை, தொடர்கதை, காவியம், நகைச்சுவை, நாடகம், சினிமா, சித்திரம், வர்ண ஓவியங்கள், வேடிக்கைச் சித்திரங்கள், புகைப் படங்கள், கவிதைகள் ஆகிய பலவற்றுடன் "பர்மா நாடு" வெள்ளி விழா மலர் பரிமளிக்கும்.

கட்டுரையாளர்கள் சுருக்கமாகவும், தெளிவாகவும் எழுதியனுப்பவேண்டும். இதில் சிறந்த கதை, கவிதை, கட்டுரைகளுக்கு விழாவின்போது பரிசுகள் வழங்கப் பெறும்.

விளம்பரம் செய்க!

விளம்பரங்களுக்கென "பர்மா நாடு" வெள்ளி விழா மலரில் சொற்ப பக்கங்களை ஒதுக்கியிருக்கிறோம். ஆகவே வர்த்தக அன்பர்கள் தங்கள் விளம்பரங்களைச் செய்வதற்கு முந்திக்கொள்ள வேண்டுகிறோம். விளம்பர ஒப்பந்த விவரங்களுக்கு எழுதவும். இரண்டு வர்ண கலர் விளம்பரங்களும் ஏற்றுக்கொள்ளப் பெறும்.

"பர்மா நாடு" அன்பர்களுக்கு!

"பர்மா நாடு" பத்திரிகையில் தொண்டாற்றியத் தோழர்கள், அன்பர்கள், அபிமானிகள், கட்டுரையாளர்கள், கலைஞர்கள், பத்திரிகை ஏஜெண்டுகள், விளம்பரம் கொடுத்துதவிய வர்த்தகர்கள், நமது ஆசிரியரின் பிரிய நண்பர்கள் அனைவரும் பர்மாவிலோ அல்லது வேறு எந்த நாட்டில் எங்கு இருந்தாலும் கடிதமூலம் நெருங்கிய தொடர்புகொள்ள வேண்டிக்கொள்ளுகிறோம்.

—"பர்மா நாடு"

482, டல்லவுசி வீதி, (முதல் மெத்தை, 30-வது வீதி முகனை)
205, மவுந்தாலே வீதி, (நேரு பிரஸ்) இரங்கோன்.

விஞ்ஞானமே நீ சிறிது—

(24ம் பக்க தொடர்ச்சி)

வாயுமண்டலத்தின் இரகசியத் தத்துவங்களைக் கண்டு மழை. புயல் உண்டாவதை முன்னறிந்து விவசாயி, கப்பல் மாலுமி, ஆகாய விமானி சுகமே தங்கள் தங்கள் காரியங்களை வெற்றியுடன் நடத்தி வரவும் கற்றுக்கொடுத்தாய்! தூரதிருஷ்டிக் கண்ணாடிகளால் நட்சத்திரங்களையும், சூரிய கிரகங்களையும், அவைகளின் குறுக்களவு, தொலைவு, உஷ்ணம் முதலியவற்றைத் தெரிந்துகொள்ளவும் செய்தாய்! வெகு பலத்துடன் அமுக்கும் சமுத்திர நீரின் கீழ் மனிதன் நேரில் சுமார் 2 மைல் தூரம் சென்று நீர்வாழ் வன வற்றின் விசித்ர உலகைக் கண்டு வரவும், நீர்மூழ்கிகளால் சமுத்திரத்திற்குள் ஆங்காங்கு பிரயாணஞ் செய்யவும் கற்றுக்கொடுத்தாய் !

ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் செய்தி அனுப்ப மாதக்கணக்காய்ச் சென்றதை தற்போது டெலிபோன், டெலிடைப், கம்பியில்லாத் தந்தி முதலியவற்றால் உடனுக்குடன் சேர வைத்தாய்! இருந்தவிடத்திலிருந்து கொண்டே வெகு தொலைவில் உண்டாகும் காட்சியையும், பேச்சையும் கண்டு கேட்டு ஆனந்திக்கவும் செய்துவிட்டாய்! கட்டுக்கடங்காமல் சிதறியோடி வீணாகும் மலைச்சரிவு நீரைச் சேகரித்து விவசாயத்தையும், மின்சாரத்தையும் பெருக்கிக் கொள்ள அணைக்கட்டுக்களையும் கட்டிக்கொடுத்துவிட்டாய்!

கண்ணுக்குப் புலனாகாத எக்ஸ்—ரே போன்ற கருவிகளால் உடம்பின் உட்கூறுகளையும். அவைகளில் ஏற்பட்டிருக்கும் குணவேறுபாடுகளைப் படம் பிடித்துக் காட்டி தக்க இரண சிகிச்சை குறிப்பிட்ட இடத்தில் மாத்திரம் செய்து கோடிக்கணக்கான மக்கள் உயிர்வாழ வைத்தாய்! பிறந்த குழந்தை இறந்துவிடும் என்ற மனப்பான்மையை மருத்துவ சிகிச்சைகளால் அறவே போக்கிவிட்டாய்! உடம்பிலும் இரத்தத்திலும் நேரடியாக ஆரோக்கியத்திற்கு தேவையான மருந்துகளை உடம்பு ஊசி, நம்பு ஊசிகள் மூலம் உட்செலுத்தவும் கற்றுக்கொடுத்துவிட்டாய்!

இயற்கையை வென்று, கையாண்டு சகல வசதிகளையும் மென்மேலும் அற்புதமாக ஆக்கிக் கொள்ள சகலவிதமான சக்திப் பொருள்களையும் காண்பித்துக் கொடுத்துவிட்டாய்! மண்ணெண்ணெய், பெட்ரோல், நிலக்கரி முதலிய எரிபொருள் சக்தியால் நீராவி இயந்திரங்கள், மின்சார இயந்திரங்கள், நீர் வீழ்ச்சி இயந்திரங்கள் முதலியவற்றால் பலவித வாகனங்களுக்கும் இதர வேலைகளுக்கும் வேண்டிய விசையை சக்தியை கொடுத்திருக்கிறாய். எரி பொருள்கள் ஒருவேளை அற்றுப்போய் மனிதர்கள் சக்தியைப் பெற சங்கடப்படுவார்கள் என்றே மற்றொரு ஆச்சரியமான யுகாந்தகாலம் வரை கிடைக்கக் கூடிய வகையில் சக்திபெற அருள்செய்தும் விட்டாய்? அதுதான் அணுசக்தி. சகல இயற்கைப் பொருள்கள் யாவும் அணுக்கள் கொண்டவை. அணுவைச் சுற்றி பல மின் அணுக்கள் மின் சக்தியின் பந்தத்தால் மையப் பொருளொன்றை சூழ்ந்து நிற்கின்றன. இப்படி அபார மின் சக்தி வாய்ந்து நிற்கும் அணுவின் மையப்பொருளை வெகு வேகத்துடன் கூடிய வேறொரு மின் அணுவைக்கொண்டு தகர்த்து உடைத்தெறிந்தால் இலேசான வேறு பல இயல் அணுக்கள் உண்டாகி அபாரமான சக்தி வெளியேறுகிறது. இவ்வாறு மாறி மாறி உண்டாகும் சிற்றணுக்கள் மையப் பொருளைத் தகர்த்துக்கொண்டே போகவிட்டால் சக்தி கட்டுக்கடங்காமல் வெளி வந்து கடைசியாக அணுகுண்டாக மாறி அளவு கடந்த அனர்த்தத்தை விளைவிக்கும் கொடிய அரக்கனாகிவிடுகிறது. ஒரு கிராம் கனமான அவ்வளவு அற்பப் பொருளை மின் அணுக்குண்டால் தகர்த்துப் தவிடுபொடியாக்கி முழுவதையும் சக்தி மயமாக்கிவிட்டால் அச்சக்தியைக் கொண்டு ஒரு பெரிய யுத்தக் கப்பலை உலகத்தையே ஒரு தடவை சுற்றிவரச் செய்ய முடியுமென்றால் அணுசக்தியின் அபாரத்தை அளவிடத்தான் முடியுமா? அக்காலத்தில் ஈயத்தைத் தங்கமாக்க முயற்சித்து (வெப்பத்தால் மாத்திரம் புடமிட்டு) ஏமாந்து போனதைத் தற்சமயம் மேற்கூறிய அணுக்குண்டுகளால் பொருளின் மையப் பாகத்தை உடைத்தெறிந்து வேறொரு பொருளாக மாற்றவும், பிளாட்டினம் என்ற பொருளைத் தங்கமாக மாற்றவும் முடிந்தது.

விஞ்ஞானமே சற்று நில்!

நீ இயற்கையை வென்றுவிட்டாய் ஆமை வேகத்தையெல்லாம் மனோ வேகத்திற்குக் கொண்டுவந்துவிட்டாய். சுட்டு தகிக்கும் ஒளிச் சுடரை குளிர்ந்து சுடாமல் எரியும் கனலற்ற சுடராக்கவும் செய்துவிட்டாய் அற்புதங்கள் என்ற நிகழ்ச்சிகளை இன்று மனிதன் செய்யக் கூடிய சர்வ சாதாரணமானவை என்று காட்டிக் கொடுத்துவிட்டாய். இன்னும் எத்தனை எத்தனை திடுக்கிடத்தக்க காரியங்களைச் சாதிக்கப்போகிறாயோ? தெரியவில்லை! மின்சார புத்தானை அமுக்கியவுடன் சாப்பாடு, நள பாகத்துடன் பக்குவமாய் சமைக்கப்பட்டுத்தானாகவே வாயினுட் தள்ளும் வகையிலும் மனிதனுக்குக் காரியங்களைச் சுலபமாக்கிவிட்டாய். ஒருவனுடைய இந்திரியத்தை கண்ணாடிக் குழாயில் எடுத்து மற்றொரு பெண் குறியில் சேர்த்து திடகாத்திர குழந்தை உண்டாகும்படிக்கும் காட்டி கொடுத்துவிட்டாய்!

உன் பேருதவி கொண்டு மனிதன் வாழ்க்கையை மிக மிக ஆடம்பரமாய் நடத்த முயன்றுவிட்டான். ஏன்? தன்னையே மறந்துவிட்டான். மனிதப் பண்பாட்டைக் காற்றில் பறக்க விட்டுவிட்டான். அகத்திலுள்ள ஆத்துமாவை விற்க ஆரம்பித்துவிட்டான். நான், எனது என்ற அகந்தை குடிகொண்டுவிட்டது. தருமம் குன்றி அதர்மம் அதிகரித்துவிட்டது. உண்மை எங்கோ ஓடி ஒழிந்தது. புத்தானை அமுக்கி வேலை வாங்கிக்கொள்வதுபோல் தனக்கு வேண்டியவற்றிற்கெல்லாம் எதிர்பார்த்து நிற்க ஆரம்பித்துவிட்டான். தன் சுயநலம் பூர்த்தியாக அடாத காரியங்களைச் செய்ய ஆரம்பித்துவிட்டான். ஏன்? முழுச் சோம்பேறியாகவும், மோசக்காரனாகவும் மாறிவிட்டான்!

இவைகட்கெல்லாம் விஞ்ஞானமே நீ எண்ணெய் வார்த்ததுபோலாகிவிட்டாய். மிருகங்களின் கஷ்டங்களை நிவர்த்திசெய்ய இயந்திரங்களைக் கைக்கொடுத்தாய். ஜீவகாருண்யந்தான்! வேலைகள் வெகு சுலபத்தில், அற்ப நேரத்தில், அதிகப்படியாக நடைபெற்றன. ஆனால் இதன் பலாபலன் குடிசைத் தொழில் போன்ற ஏழை மக்கள் கைத்தொழில் பாழாயின. ஒரு சிலரால் வேலை நடந்து ஏராளமான பேர் வேலையில்லாத் திண்டாட்டம் தாண்டவமாட ஆரம்பித்தது. மனிதன் தன் ஐம்புலன்களை உபயோகப்படுத்தவே தேவையற்றுப் போய்விட்டது. தன் அவயங்களைக்கூட அசைக்க சாவகாசமும், சந்தர்ப்பமும் இல்லாத அவ்வளவு சௌகரியங்களை அடைந்துவிட்டான்!

, விஞ்ஞானமே! நீ ஆக்க வேலைகளுக்கு உபயோகித்ததுபோக, மனிதன் நீ அளித்த சௌகரியங்களால் இறுமாப்புக்கொண்டு உன்னையே நாசவேலைக்கு உபயோகிக்கவும் முன்வந்துவிட்டான். ஒரு கத்தி மனிதனுக்கு சீவ, வெட்ட, அறுக்க முதலிய அவசியமான வேலைகளுக்கு உபயோகமாவதுபோல் மற்றொருவனைக் குத்திக் கொலை செய்யவும் உபயோகமாகிறதல்லவா? இது மனிதன் குற்றமேயன்றி, கத்தியின் குற்றமா? அந்தோ! மனிதன் உயரிய பண்பாட்டை மறந்து, இழந்து தீயவற்றைச் சோதிக்க ஆரம்பித்துவிட்டான்! அதனால் நல்ல காரியங்களுக்குக் கண்டுபிடித்து, ஆயுதங்களைத் தீயக் காரியங்களுக்கு உபயோகிக்க முன்வந்துவிட்டான்!

பெரிய வல்லரசுகள் மண்ணாசை கொண்டு சுயநலப்பற்றால், விஞ்ஞானமே! உன்னைக் கெட்ட காரியங்களுக்கு கையாயுதமாக்க முன்வந்துவிட்டனர். நீ குரங்கின் கைப் பூமாலையாகிவிட்டாய்! அணுசக்தியால், அபார வேலைகள் செய்து உணவுப் பொருள்களைப் பெருக்காது, மலை மேடுகளைச்சமதளமாக்கி விளைநிலமாக்காது, சமதளத்தைப் பள்ளமாக்கி ஏரி, குளம், கண்மாய்கள் உண்டாக்கித் தண்ணீரைத் தேக்கி வைத்து விவசாயிகளுக்கு உதவாமல், தேவைப்படும் ஜனங்களுக்கு நொடிப்பொழுதில் தேவைப் பொருள்களைக் கொண்டுசேர்க்கும் வெகு விரைவான வாகனங்களை உற்பத்தி பண்ணாமல், சில வல்லரசுகள் அணுகுண்டுகளாகவும், ஹைட்ரோஜன் குண்டுகளாகவும் நாசவேலைகளுக்கு இரகசியமாகச் செய்துவைத்துக்கொண்டிருக்கின்றனர். அணுகுண்டை 1942-டிசம்பர் மாதம் 2ந்தேதி கண்டுபிடித்தனர். 1945-ஜூலை மாதம் 18ந்தேதி அதிகாலை 5-30 மணிக்கு மெக்சிகோ பாலைவனத்தில் 'அணுக்குண்டு வேலை செய்

யுமா?' என்று ஒத்திகை பார்த்தார்கள். 1945 ஆகஸ்டு மாதம் 6ந்தேதி ஜப்பான் ஹிரோஷிமாவை அணுகுண்டால் தாக்கி ஆயிரக்கணக்கான மக்களை நொடிப்பொழுதில் தொலைத்துவிட்டனர். அணுசக்திக் கதிர்கள் ஏற்பட்டு வெகுதூரம் வரை நோய்கள் பலவற்றை உண்டாக்கி மீண்டவர்களையும் தொலைக்க ஆரம்பித்தது. சமுத்திரம் கூட அண்டசராசரம் இடிந்து விழுந்ததுபோல் குமுறி வெகுதூரம் வானளாவி எழுந்தது. விஷப்புகை கிளம்பிற்று. நாடு நகரம், மரம், செடி யாவற்றையும் பஸ்மீகரப்படுத்திவிட்டது! இன்னும் ஆஸ்திரேலியா பாலைவனத்தில் அணுகுண்டுப் பரீட்சை நடத்தி வருகின்றனர். ஒவ்வொரு தேசத்திலும் அணுசக்தி ஆக்கவேலைகளுக்குக் கண்டுபிடிப்பதாக சோதனைக் கூட்டங்களில் இரகசிய வேலைகள் நடந்து வருகின்றன. எந்த நாட்டிலும் அணுசக்தியால் ஆக்க வேலை இதுவரை நடைபெறவில்லை. விஞ்ஞானிகள் பலர் இந்த அடாத செய்கைகளுக்காளாகாமல் நாடுவிட்டு நாடு ஓடியிருக்கிறார்கள். ஒரு சிலர் வல்லரசின் கொடுங்கோலுக்கு மீற முடியாமலும், தேசபக்தியாலும், இவ்வேலைகளில் ஈடுபட நேர்ந்தது! விஞ்ஞானமே! இன்னும் பல இதைவிட விபரீதச் செயல்களைக் கற்றுக்கொடுத்துவிட்டால் என்னென்ன அநியாயங்கள் நடைபெறுமோ தெரியவில்லை. போதும்! போதும்!! நீ சற்று ஓய்வு கொள்!!! சாதாரண மனிதன் உன் முற்போக்கால் நாச வேலைகளைக் கண்டு மனம் சகியாது, உன்னை வெறுத்து நீ ஒழிந்தே போகக்கூடாதா என்பது மிகையாகாது! ஆனால் ஒரு விஞ்ஞானியே உன்னைப் பார்த்து நீ சிறிது ஓய்வு எடுத்துக் கொள் என்றால் அவன் மனோவேதனையைக் காட்டுகிறதே யன்றி உன் மீதுள்ள வெறுப்பாகுமா? அல்ல! அல்ல!! ✲ ✲ ✲

முத்தமிழ், முக்கனிகள்! மா, பலா, வாழை என்ற முக்கனி போன்றவை, இயல், இசை, கூத்து, தமிழ் மொழிக்கு!

—அண்ணா

ஃ ஃ ஃ

இன்பங்களைப் பெற முயல்வதினும் இலட்சியங்களைப் பெருக்க முயல்வதே நலம்.

—ஆவ்பரி

இன்பத் தமிழ்!

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

தமிழுக்கும் அமுதென்று பேர்!—அந்தத்
தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்!
தமிழுக்கு நிலவென்று பேர்!—இன்பத்
தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர்!
தமிழுக்கு மணமென்று பேர்!—இன்பத்
தமிழ் எங்கள் வாழ்வுக்கு நிருமித்த ஊர்!
தமிழுக்கு மதுவென்ற பேர்!—இன்பத்
தமிழ் எங்கள் உரிமைச்செம் பயிருக்குவேர்!
தமிழ் எங்கள் இளமைக்குப் பால்!—இன்பத்
தமிழ் நல்ல புகழ்மிக்க புலவர்க்கு வேல்!
தமிழ் எங்கள் உயர்வுக்கு வான்!—இன்பத்
தமிழ் எங்கள் அசதிக்குச் சுடர்தந்ததேன்
தமிழ் எங்கள் அறிவுக்குத் தோள்!—இன்பத்
தமிழ் எங்கள் கவிதைக்கு வயிரத்தின் வாள்!
தமிழ் எங்கள் பிறவிக்குத் தாய்!—இன்பத்
தமிழ் எங்கள் வலமிக்க உளமுற்ற தீ?

முன்னோடியாக விளங்குக!

“கடந்த கால் நூற்றாண்டு காலமாக பர்மாவிலும் யுத்தகாலத்தில் தமிழகத்திலும் நல்ல சேவைசெய்து புகழ்பெற்ற 'பர்மா நாடு' மீண்டும் தொண்டாற்ற வெளிவருகிறது. என்ற செய்திகேட்டு நெஞ்சம் நெகிழ்ந்துபோனேன். இதைவிட இன்பம் தரும் செய்தி என் போன்ற இளைஞர்க்கு வேறு என்னவேண்டும்?

இந்நாட்டின் உழவுத்தொழில், கைத்தொழில், பொருளாதார முன்னேற்றம் ஆகிய துறைகளில் உடல்தேய உழைத்து, இந்த நாட்டையே தாய்நாடாகக்கருதி, சுவிகாரம் செய்துகொண்டு 'குடிஉரிமை' கோரி நிற்கும் மக்களுக்கும் 'பர்மா நாடு' முன்னின்று உதவிபுரியுமாக! இளமைத் துடிப்புள்ள என்போன்ற இளைஞர்களைத் தட்டிஎழுப்பி நாட்டுப்பணிக்கும், சமூக நலப்பணிக்கும் திறனுடையவர்களாக உருவாக்கும் அளவில் முன்னோடியாக விளங்குமாக! 'பாமா நாடு' வாழ்க!

—மு. பொன்னுச்சாமி,
மாந்தலே.

சேவையே எங்கள் லட்சியம் !

அயல்நாடுகளுக்கு விமானம், கப்பல் ஆகியவற்றின் மூலம் பிரயாணம் செய்பவர்களுக்கு வேண்டிய சகலவிதமான பிரயாண வசதிகளையும், நல்லவிதமாகச் செய்துகொடுத்து வருகிறோம்

☞ பிரயாணிகள், பிரயாண சம்பந்தமான நடைமுறைகளைச் சரிவரத் தெரிந்து கொள்வதற்கும், அவர்களுக்குத் தடையோ சிரமமோ ஏற்படாதிருக்கவும் சட்டபூர்வமான ஆலோசனைகளையும் கொடுத்துதவுகிறோம்.

செ. முஹம்மது யூனுஸ்,
☞ கார்டியன் டிராவல் ஏஜென்ஸி,
நெ. 299, பார் வீதி, (ரெயில்வே பிளாக்) இரங்கூன்.



GUARDIAN TRAVEL AGENCY,

No. 299, Barr St. (Railway Block) Rangoon

ஸ்ரீ கிருஷ்ண விலாஸ்

சென்னை மசாலா பொடிகள்

கரிமசாலை, சாம்பார், ரசம் மசாலை, எலுமிச்சம் பழம், மாங்காய் காய்கறி ஊறுகாய் தினுசுகளும் வத்தல் வகையருக்களும் சுத்தமான பசு நெய்யும், சென்னை அப்பளங்களும் எங்களிடம் கிடைக்கும்.

அன்பர்களின் ஆதரவை விரும்பும்,

பி. கே. ஜி. தேவர்.
கீலிக்கடை,
324, முகல் வீதி, இரங்கூன்.

அசோகா கபே,

180, டலவுசி வீதி, கிழக்கு இரங்கூன்.

சுதந்திர இந்தியா சுபீட்சமாக வாழ்க!

நாவிற்கு இனிய காப்பி, பலகாரங்களும், சைவப் சாப்பாடும், மாலையில் பால், ரொட்டி, வகையருக்கள் தயாரிக்கின்றோம்.

அன்பர்கள் அவா அறிந்து ஆவன செய்வதே எங்களின் விருப்பம் !

நண்பர்கள் வரவு நல்வரவாகுக !

குறிப்பு:—ஆர்டர்களை உடனுக்குடன் கவனிக்கப்படும்.

Prop:-V. M. GOVINDASAMY

ASOKA CAFE,

180, DALHOUSIE ST. RANGOON.

அகில பர்மா பர்மிய இந்து லீக்கின் இலட்சியம்

தலைவர் சயாஊ இராமாவின் ஒப்பற்ற சேவை

பர்மிய குடிஉரிமை பெற்றோர், பெறமுயலுவோர் கவனிக்க !

[பர்மியத் தேனி]

'இவ்வுலகிற் பிறந்த மக்கள் அனைவரும் புகழ்பட வாழ்தல் வேண்டும், அவ்வாறு வாழ்வதே மக்கட் பிறப்பின் நோக்கமாகும்" வான்புகழ் வள்ளுவர் உரைத்த "தோன்றிற் புகழோடு தோன்றுக! என்பதற்கொப்ப— மக்கள் எல்லோரும் புகழுடன் வாழ்வதற்கு வழி வகுத்து கலங்கரை விளக்கம் போல் வழி காட்டும் சயா ஊ இராமா அவர்களையும், தலைவரைப் பின்பற்றி இரங்கோன் கிளைக் கழகத் தலைவர் ஏ. கே. பெருமாள் அவர்களின் சிறந்த பேராற்றல் மிக்க தொண்டையும் பாராட்டுகிறோம்.

சுதந்திர பர்மாவின் அரசியல் நிர்ணய சட்டம் பல்லோராலும் போற்றுதற்குரிய அளவில் அமைந்துள்ளது. பர்மாவின் இலட்சியமாக "சோஷலியம்", இந்த அமைப்பில் பர்மா சோஷலிஸ்ட் நாடாக மலர்ந்துவிட்டதில் ஆச்சரியமில்லை. புத்தன் பிரான் போதனையைப் பின்பற்றும் பர்மாவில் எல்லோருக்கும் சமத்துவமான உரிமையும் பாதுகாப்பும் அளிக்கப்பட்டுள்ளது. நாட்டுமக்கள் எல்லோரும் பர்மா நாடு செழிக்க ! மக்கள் எல்லோரும் வாழ் வாங்கு வாழ வழிவகுக்த அரசியாலருடன் தோளோடு தோள் கொடுத்துப் பாடுபட்டால் நம் நாடு! சுவர்ணபூமி, பாரெங்கும் போற்றப்படும். இப்பொன்னாடு சீருஞ் சிறப்புடன் விளங்க முடியும். அந்நன்னாள் இதோ நெருங்கிவிட்டது. இத்திருப்பணியில் முன்னின்று உழைக்கக் கடமைப்பட்டுள்ள சுவிகாரப்புத்திரர்களான பிரசா உரிமை பெற்றோர், குடி உரிமைபெற முயன்று மனுக்களை சமர்ப்பித்துள்ளோர், இனி எதிர் காலத்தில், குடி உரிமை கோரி மனுச் செய்ய

ப. ஹ. ச. தலைவர் செயா ஊ"இராமா" இரங்கோன் தலைவர் ஏ. கே. பெருமாள், பர்மிய தலைவர் மோன் தான் ஆகியோர் வீற்றிருக்கின்றனர்.



சென்னை ஆவடியில் நடந்த 60-வது காங்கிரஸ் மகாசபைக்குத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஸ்ரீ உச்சரங்க ராய் நவல் சங்கர் தேபர் அவர்களை திரு. காந்தி அண்ணாமலை பேட்டி கண்டு—பர்மா வாழ் இந்தியர் நிலைகுறித்து பேசிய காட்சி.

திட்டமிட்டிருப்போர் எல்லோருக்கும் இது தங்கள் கடமையாகும். பொறுப்பும் அதற்குற்ற வாழ்வும் இவ்வாறான அடிப்படையில் அமைய வேண்டும் என்பதை அழுத்தமாகக் கூற விரும்புகிறோம்,

இந்நாட்டின் ஜீவாதாரமான பிரசா உரிமை பெறும். சட்டத்தில் கண்டுள்ள மூன்று வகை பிரிவினருள் (1) இந்நாட்டின்—பர்மிய மாதா—அல்லது பிதாவுக்குப் பிறந்த ரத்தக்கலப்பின் மூலம் உரிமை வேண்டுவோர் (2) இந்தியாவிலோ அல்லது பிற நாட்டிலோ பிறந்து பெற்றோருக்குப் பர்மாவில் பிறந்த வாழ்ந்து வருவோர் (3) இந்தியாவிலோ அல்லது இதர நாடுகளிலோ பிறந்து பர்மாவில் குடியேறி தொடர்ச்சியாக ஐந்து ஆண்டுகளுக்கும் அதிகமான காலம் வசித்து இனி எதிர்காலத்தில் பர்மாவையே தாய் நாடாகக் கருதி வாழ விரும்புவோர், பிரசா (குடி) உரிமையில் இடம்பெற்றுள்ளனர். இம்மூன்று வகை வகுப்பினரில் முஸ்லீம்களாக இருப்போருக்கு ஆதரவளிக்கும் தோரணையில் பர்மா முஸ்லீம் காங்கிரஸ் பா—மாக்கா இருந்து நல்ல பணியாற்றி—அதன்மூலம் பிரஜா உரிமை பெற்றோர்க்குக் கிடைக்கவேண்டிய நியாயமான உரிமைகளையும், பலவித சலுகைகளையும் பெற்று வருவது போல் பெரும்பாலராகவுள்ள இந்து பிரஜைகளின் பிரஜா உரிமையைப் பாதுகாப்பதற்கும் ஒரு ஸ்தாபனம் வேண்டும் என்பது உணரப்பட்டது. இதன் எதிரொலியாக மோல்மேனில் பர்மிய, இந்திய, சீன மக்கள் எல்லோராலும் ஒருங்கே நன்கு மதிக்கப்படும். சயா ஊ ராமா அவர்கள் உள்ளத்தில் இப்பெரும் பிரச்னை எழுப்பியது. பல தோழர்களின் பெருமுயற்சியாலும் உதவியாலும் ஓயாது உழைத்து இறுதியில் எதிர்காலச் சரித்திரத்தில் இடம்பெறும். **அகில பர்மா பர்மிய இந்து லீக்"** (பா—ஹ—ச) 1952-ல் நவம்பர் மாதம் 23-ந்தேதி ஸ்தாபிதமானது. இதனைத் தொடர்ந்து மோல்மேன் தலைமை ஸ்தாபனத்தின் கிளைகளாக மோல்மேன், தட்டோன், பக்கோ ஆகிய மூன்று பெரிய ஜில்லாக்களிலும் கிளை ஸ்தாபனங்கள் உருவாகியுள்ளன

சயா ஊ இராமா அவர்களின் நல்ல பணியாற்றும் திறமையால் பிரஜா உரிமை கோரும் மக்கள் மனதிலே அசைக்க முடியாத நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது. சயா ஊ ராமாவின் அரிய சேவை காந்தி மகானிடம் கற்றுக்கொண்ட சத்திய வாழ்வும், கருணையுமே காரணம் இதனால் இங்கு அல்லலுறும் இந்து பர்மிய மக்களை பலம் கொண்ட சமுதாயமாக உருவாக்க திட்டமிட்டார். இன்று இவர் ஸ்தாபித்த லீக் ஆயிரமா

பிரம் மக்களைத் தம் வசம் திருப்ப சக்தியுள்ளதாக அமைந்தது. நூற்றுக்கணக்கான தோழர்கள் சயா சொன்னால் நிறைவேற்றக்கூடிய பொறுப்புடன் நடந்துகொள்வதின் மூலம் சொற்ப காலத்தில் சுமார் 52 பிரிவுக்களைக் கொண்ட ஸ்தாபனங்கள் மூன்று ஜில்லாக்களிலும் ஏற்பட்டுள்ளன.

இலட்சியம் என்ன ?

ப—ஹ—ச என்று அழைக்கப்படும் பர்மா பர்மிய இந்து லீக்கின் இலட்சியங்கள் பின்வருமாறு விளக்கப்படுகிறது! (1) இந்நாட்டில் வாழும் எல்லா பர்மிய இந்து மக்களையும் ஒன்று திரட்டி அவர்களின் பிரதிநிதித்துவ லீக்கின் மூலம் பர்மா யூனியன் சர்க்காருடன் பரிபூரணமாக ஒத்துழைப்பது (2) சட்டப்பூர்வமாக நியாயமாக நமக்குக் கிடைக்க வேண்டிய எல்லா அரசியல் உரிமைகளையும் சமாதான முறையில் அடைவதற்கு முயல்வது. (3) பர்மா அரசியல் சட்டத்தின் சட்டதிட்டங்களின் அடிப்படையில் பலம் மிகுந்த சுதந்திர பர்மவை சிருஷ்டிக்கும் பெரும் தொண்டில் ஒத்துழைப்பது. (4) பல திறப்பட்ட பர்மிய இந்துக்களுக்கிடையே ஒற்றுமையைப் பெருக்கவும், பலப்படுத்தவும் முயல்வதோடு, இதர மத—சமூக மக்களோடு ஒன்றுபட்ட வாழ்வைச் சிறப்பிக்கவும் முயல்வது.

இவ்வாறான உயரிய இலட்சியங்களுடன் உருவான இந்த ப—ஹ—ச அகில பர்மா பர்மிய இந்து லீக் அங்கத்தினர்கள் இந்நாட்டின் சுபீட்சத்திற்கும், அமைதியான வாழ்வுக்கும் சுதந்திரப் பாதுகாப்பிற்கும் இந்நாட்டு மக்களுக்கு இருக்கும் பொறுப்பைவிட அதிகமான பொறுப்பை ஏற்றுக்கொள்ளவேண்டும். இவ்வாறு தங்களின் நாட்டிற்கு தாங்கள் ஆற்றும் சேவையின் மூலம்—பர்மிய மக்கள் போன்று நாமும் இந்நாட்டு மக்கள் என்ற மதிப்பைப்பெறவேண்டும். லீக்கின் உயரிய இலட்சியங்களோடு புத்தபிரான் மனிதகுல மக்கள் எல்லோருக்கும் அருள்வாக்கை மனதில் தியானம் செய்துகொள்ளவேண்டும்.

"மனிதன் கோபமற்ற தன்மையைக்கொண்டு கோபத்தை ஜெயிப்பானாக. கொடுமையற்றதன்மையினால் கொடுமையை வெல்வானாக. பொய்யனைத்தனது உண்மையால் வெல்வானாக" இந்த சிறந்த போதனையால்—ப. ஹ. ச. தலைவர்களும், தொண்டர்களும் முயற்சித்து தலைமை ஸ்தாபனத்துடன் எண்ணற்ற கிளை ஸ்தாபனங்களைப் பெருக்கிவருகிறார்கள். விபரம் காண்க.

தலைமை ஸ்தாபனம்: மோல்மேன்

தலைவர் சயாஊ இராமா, செயலாளர் செய்ன்த்தான், முயற்சியாளர் கோத்தான் ஆங் (பூபதி).

தட்டோன் ஜில்லா

தலைவர் ஊ ஆங்பா, செயலாளர் ஊமாங்பூ.

பிகு ஜில்லா

தலைவர் ஊகாங்காய்யா, துணைத்தலைவர் ஊசிங்காரு, செயலாளர் ஊஸோமின்ட், கூட்டுச்செயலாளர்கள் ஊஆங்டுன், ஊமாங்மாங்.

இன்சீன் ஜில்லா

தலைவர் டி. எஸ். பிள்ளை, துணைத்தலைவர் ஊஸோதேய்ன், செயளாளர் முத்துராமலிங்கம், கூட்டுச்செயலாளர் கோவிந்தசாமி.

இரங்கோன் ஜில்லா

தலைவர் ஏ. கே. பெருமாள் (ஊலா), துணைத் தலைவர் எஸ். டி வேலு, செயலாளர் கே. ஆர். ஜெயராம் (தேய்ன் ஆங்), துணைச்செயலார் ஊப்பாடு (வி. முத்துசாமி), பொருளாலர் ஊஸோலா (சோகன்லல் பாபு), சட்ட ஆலோசகர் திரு ஆர். சௌபே, (அட்வகேட்).

இரங்கோன் ஜில்லாக்களின் கிளைகள்

1. **மேற்கு கமாயுட்** தலைவர் என். பக்கிரிசாமி கோனர், செயலாளர் பி. எஸ். மாரிமுத்து.

2. **கிழக்கு கமாயுட்** தலைவர் கே. ஏ. ராமசாமி, செயலாளர் எஸ். பாலா.

3. **கீமந்தான்** தலைவர் போட்டின் செயின் (வி. முத்தையா); செயலாளர் கொவுன் மவுங் (பு. கே கிருஷ்ணன்).

4. **சிர்லாய்க், கீமந்தான்** (1) ஊஒன் மவுங் (ஹாஜி) செயலாளர் கொத்தெயின் சுவே (மணி).

5. **தெங்காஞ்ஜின்** (1) தலைவர் வழிவிட்டான் தேவர், செயலாளர், எஸ். பஞ்சாச்சரம் பிள்ளை.

6. **தெங்காஞ்சின்** (2) தலைவர், ஆர். ஜி. பி. வேலு, செயலாளர் கே. பொன்னையா.

7. **தாம்வே** (தட்டிப்பட்டான்) தலைவர் கே. ஆர். வேலு (ஹாஜி) செயலாளர் வெங்கடாசலம்.

8. **காந்தார்** தலைவர் எஸ். கிருஷ்ணராவ், செயலாளர் பி. ஆர். வேலு (மவுங்லாமின்ட்).

9. **இன்சீன் ஜில்லா** (ரயில்வே லைன்) தலைவர் எம். கன்னியப்ப முதலியார், செயலாளர் ஜி. பாலையா நாயுடு.

மற்றும் பல இடங்களிலும் கிளை ஸ்தாபனங்கள் உருவாக்க வேலைகள் நடக்கின்றன.

சுதந்திர இந்தியா சுபீட்சமாக வாழ்க!

கடிகார ரிப்பேர் நிபுணர்

எமது மேற்பார்வையில் P. ORR. அண்டு சன்ஸ் பேவரி லூபா கம்பெனி மவுங்கோ பிரதர்ஸ், ரோவ் அண்டு கோ. முதலிய இன்னும் அநேக பெரிய கம்பெனிகளில் கடிகார ரிப்பேரிங் செய்து புகழ்பெற்று மிகவும் திறமையும் 40 வருட அனுபவமும் வாய்ந்த நிபுணர் மிஸ்டர் அந்தோனி அவர்களைக்கொண்டும் இன்னும் நல்ல கைதேர்ந்த ஆட்களைக்கொண்டும் பலவகை கடிகாரங்களையும் நல்ல முறையில் உத்திரவாதத்துடன் ஒரிஜனல் சாமான்களுடனும் நம்பிக்கையுடனும் கடிகாரம் ரிப்பேர் செய்ய தகுந்த இடம்.

நேஷனல் வாட்ச் ரிப்பேரிங் ஹவுஸ்

அதிபர்:
எம். ஏ. ஜி. சாமி. நெ. 324, மொகல் வீதி, இரங்கூன்.

பாரத சுதந்திரம் பல்லாண்டு வாழ்க!

பர்மா பிரஜா உரிமை பெற விரும்புகிறீர்களா?

1. பர்மா பிரஜா உரிமை.
2. அன்னியர் ரிஜிஸ்டரேஷன் சர்டிபிகேட் (F. R. C.)
3. இந்தியா முதலிய அன்னிய நாடுகள் சென்றுவர பாஸ்போர்ட்.
4. இந்தியாவிலிருந்து தங்கள் தாய், தந்தை மனைவி, மக்கள் ஆகியவர்களை பர்மாவிற்கு அழைத்துக் கொள்ள அனுமதிப் பத்திரம் முதலியன பெற விரும்புவோர் கீழ்க்கண்ட இடத்திற்கு வந்து அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்துகொள்ளலாம். சிக்கனமாகவும் காலதாமதமின்றியும் எல்லா ஏற்பாடுகளும் செய்து தரப்பெறும்.

எஸ். ஆர். நாயுடு,

21, சூலேபகோடா ரோடு, ஆற்றங்கரை பிளாக்,
(யூனியன் பேங்கிற்கு எதிரில்) இரங்கூன்.

நினைவும்! நிழலும்!

இ.எம். பாஞ்ச்பிர்

தாயின் மணிக்கொடி பாரீர்— அதைத்
தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர்!

என்ற தன்னிகரிலாப் பாடலைப் பாடி தமிழ் நாட்டிலே தமிழ் மக்களிடையே மங்கித் தூங்கிப்போயிருந்த சுதந்திரக் கனலை எழுப்பிவிட்டு எங்கும் எழுச்சியை எழுப்பியவர் எழில்மிகு கவி மன்னன்-சுதந்திர சிங்கம் கவி பாரதி.

எட்டையபுரம் தந்த அந்த எந்தலின் இளம் இதயத்திலே; இங்கிலாந்தின்-எத்தனையோ நாட்கள் பிரயாணம் செய்யும் தூரத்திலே—உள்ள ஒருசிறு தீவில் வாழும் மக்களின் கையிலே, பரந்து விரிந்த பண்பும், எழிலும் சூழும் பாரதத்தின் தலைவிதியை நிர்ணயிக்கும்பொறுப்பை விட்டுவைக்க—நிர்ணயிப்பதைப் பார்க்கும் அளவு இடம் கொடுக்கவில்லை-அவர் இதயம். வடக்கே வீசிய சுதந்திரக் குரலை-தெற்கேயும் வீசச் செய்ய வேண்டும் என்ற தீர்மானமான முடிவுக்குவந்தார். அந்த முடிவை அரசியலின்-அடிமை விரும்பிகளின் தடையினை மீறி தமிழ் மக்களின் உள்ளத்திலே-ஓடும் இரத்தத்திலே கலந்தோடச் செய்யும் பணியிலே புகுந்தார். அந்தச் சிறந்த பணிக்கு தாய்மொழியையே தன்னிகரிலா ஆயுதமாகப் பிரயோகம்செய்ய எண்ணினர். அந்த எண்ணத்தின் எதிரொலி எகோபித்த எழுச்சிக் குரலை எழுப்பினர்-எப்படி?-இன்பத் தமிழிலே இராகம் அமைத்து எண்டிசையும் எழுச்சிப் பண் முழங்கச் செய்தார்! ஆம்! இறவாத புகழுடைய எதிர்காலத்திலே நிகழப்போகும் யாவையும் சேர்த்து சீரிய கவிதைக் கொத்தாகச் செய்தார். அந்தக் கவிதைகள்-அவர் இதயத்தின் அடித் தளத்திலே இருந்து எழுந்த எழுச்சிக்குரலின் இன்பக் கனவுகள்:

அச்சமில்லை! அச்சமில்லை!
அச்சமென்ப தில்லையே!

மலைமுடுக்கெங்கும்-முத்தமிழ் பேசும் நற்றமிழர் அகமெங்கும், அதரமெங்கும் அதிர்ந்தன-அடித்து முழங்கின. எண்டிசையும் பண் அதிர பாரதமே பாட்டொலிக்க பரங்கியன் கண்டான்-பதை பதைத்தான். பற்றிப் பிடித்துச் சென்றான் பலரை-பல்லோரை! ஆனல் பணிந்தனரா மக்கள்-பயந்தனரா மக்கள்-பதைத்தனரா மக்கள்-பின்னர் என்ன நடந்தது?

முன்னைவிட எழுச்சி முழக்கம் விண்ணைப் பிளந்தது, மலை முடுக்கு சந்து பொந்தெல்லாம்! நாடு கடத்தப்பட்டனர் தலைவர்கள்! காராக்கிரகத்திலே கல்லுடைத்தனர் கண்மணிகள்! செக்கிழுத்தனர் சீரியோர்! குண்டடிபட்டனர் சிலர்! உயிரை உரமாகக் கொடுத்தனர் உணர்ச்சியுள்ளோர்!

அப்படி உணர்ச்சியுள்ளோரின் பட்டியலிலே முதலிடம் பெற்றுவிட்ட முத்தமிழ்ச் சிங்கம், 'வீரபாண்டியன்' என்ற வெற்றிப்பட்டயத்துக்கு உரித்தான திடந்தோளன், தீரன், கட்டபொம்மன்!

சுதந்திரம் என்றால் என்ன என்று கேட்கும் அளவுக்கு அந்நியர் மோகத்திலும், பதவிப் பித்திலும் இச்சைகொண்டு மக்கள் அந்நிய நாட்டினரின் நச்சுக்கலந்த இனிப்பு மாத்திரையை என்? எதற்கு? என்றுகூடக் கேட்காமல் விழுங்கி வெள்ளையரையே கண்கண்ட தெய்வமாக மதித்துக்கொண்டிருந்த அந்த நாளிலே-"சுதந்திரக் குரல்" கொடுத்தது ஒரு இளஞ் சிங்கம் என்றால் எத்துணை தீரமும்-வீரமும்—அந்த இளஞ் சிங்கத்தின் உதிரத்திலே நிரம்பி இருந்தால் எழுப்பி இருக்கமுடியும் எழுச்சிக்குரலை—எழுச்சிக்குரலா அது! "வெள்ளையனே வெளியேறு! வீர நாட்டை விட்டோடு!" என்ற வீர முழக்கமல்லவா அது! உணர்வின் ஓங்கார நாதமல்லவா அது! எண்ணத்தின் அடித்தளத்திலிருந்து அரும்பிக்கொண்டு வந்த அசைக்க முடியா ஆங்காரக் குரலல்லவா! அந்தக் குரல்....! யார் எழுப்பியது? ஏன் எழுப்பினன்?

மறவர் குலத்துதித்தமாணிக்கம்—தமிழகம் தந்த தவச் செல்வன்—என்றும் சரித்திரத்தின் ஏடுகளிலே சிங்கார எழுத்துக்களை சிரிக்கவைக்கும் பாக்கியம் பெற்ற சீருடைய கட்டபொம்மன் எழுப்பினன்!

அருமைத் தமிழ்நாடு—அதன் கண் வாழும் குறுநில மக்கள்—அந்நிய நாட்டினருக்கு அடிமையாக இருக்கக்கூடாது—அவர்கள் சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்பட்டு கப்பம் கட்டக் கூடாது—என்பன போன்ற எண்ணங்கள் அந்த இளவல் இதயத்திலே எழுந்தன. எழுந்ததுதான் தாமதம்! அதைச் செயலில் காட்டவும் துணிந்தான்; கிராமங்கள் தோறும் சென்றான்; வீடு வீடாகச் சென்றான்—எங்கும் எட்டுத் திக்கும் தமிழக மூலை முடுக்கு எங்கும் 'சுதந்திர கீதம்'—'எழுச்சிக்குரல்' வெள்ளையனே வெளியேறு!" என்ற வீரமுழக்கம் கேட்டது. சுதந்திர முரசம் ஒலித்தது. கண்டான் வெள்ளையன், காலாட் படையை ஏவினன். கிராமங்கள் இல்லங்கள்—காடுகள் புதர்கள்—இப்படி இன்னோரன்ன இடங்களை எல்லாம் சுற்றிவளைத்தான்; காடுகளைக் கொளுத்தினன். புதர்களை வெட்டி எடுத்தான். கட்டப்பொம்மனைக் காட்டிக் கொடுப்பவருக்கு பதவியும்; பணமும், பாதி கிராமமும் என்று பறைசாற்றினன். எங்கும் இதே பேச்சு. வெள்ளையரின் வேவுகாரர்கள் வீட்டுக்கொருவராக மறைமுகமாக நிறுத்தப் பட்டனர். இப்படி எத்தனை முறைகளை அனுசரித்தும் வீரனை வலைக்குள் கட்டமுடியவில்லை வெள்ளையரால்.

ஆனல் நல்ல மரத்திலே புல்லுருவியும் அவசியம் இருக்குமல்லவா! அதுபோல புறம் கூறு மறத்தமிழரிடையே அறம் மீறும் அற்பன் ஒருவனல் காட்டியும்-கட்டியும் கொடுக்கப்பட்டான் கட்டப்பொம்மன்.

கட்டுக்குள் நிற்பானே கட்டப்பொம்மன்—அவன்
கருத்துக்குள் தோன்றுமோ அடிமைக்குணம்?
வட்டிப் பணம் கட்டி தன்னாட்டோர்—வாழ்ந்திட
வீரன் மனம் ஒப்பவில்லை!

காட்டிக் கொடுத்தான் கருங்காலி—அவனைக்
கட்டியும் கொடுத்தான் கயவாளி
நாட்டிற்கே துரோகம் செய்துவிட்டான்—அந்த
நற்றமிழ் வீரனைத் தூக்கேற்றிவிட்டான்!

என்று சில அடிகள் இளவல் கட்டடப் பொம்மனின் வீரம் நிறை வாழ்க்கைக்கு ஒரு எடுத்துக் காட்டாகவும்—தாயகத்தின் விடுதலைக்காக எத்துணை மாபெரும் தியாகம் செய்தாக வேண்டும் என்ற தெரிவிப்பாகவும்—பிறந்த பொன்னாட்டின் விடுதலைக்கு—நீ இறந்துவிடு என்ற இன மொழிக்கொப்பவும் உதாரண புருஷனாக விளங்கிய அந்த மாவீரன்-வீரபாண்டியக் கட்டப்பொம்மன் ஊன்றிச் சென்ற சுதந்திர வித்திலிருந்து முளைவிட்டுக் கிளம்பியவர் யார்?

நெல்லை மாவட்டம் தந்த சொல்லழகர்!-வழக்கறிஞர்-வள்ளல்-வாய்மையாளர்-வ.உ. சிதம்பரம் பிள்ளை.

வாய்மையும், தூய்மையும், நேர்மையும் நிரம்பிய உள்ளத்தையும்-எண்ணத்தையும் உடைய வ. உ. சி. ஒரு வழக்கறிஞர். இதன் பயனாக அரசாங்க துரோகி ஆனர்! வழக்கு மன்றத்திலே இருந்த வழக்காடும் ஸ்தானத்தை இழந்தார். ஒரு சில தேசபக்தர்கள் போன்ற ஏனையோர் அவரை அணுகவும், பேசவும் கூட அஞ்சினர். ஏன்? நாவிதன் முதல் நடுத்தெரு பெருக்கும் தோட்டி வரை அவர் இல்லம் செல்லக்கூடாது என்று தடையிடப்பட்டனர் அரசியலாரால்.

அவர் செல்லுமிடமெல்லாம் வேவுகாரர்கள் பின்தொடர்ந்து அனுப்பப்பட்டனர். அவர் பேச்சுக்கள் ஒவ்வொன்றும் எழுத்துக்கு எழுத்து மொழி பெயர்க்கப்பட்டு அரசியலாரின் பார்வைக்கு அனுப்பப்பட்டு தூண்டித் துருவப்பட்டன. குற்றமில்லாவிடினும் குற்றச் சாட்டு சுமத்தப்பட்டது. கண்டான் வெள்ளையன். கனல் கக்கினன்-கட்டுப்பாடு இட்டான். காந்தி பக்தரைப் பேசாதே என வாய்ப்பூட்டுப் போட்டான். எதற்கும் அஞ்சினரா! அறிஞர் என்ன செய்தார்? முன்னைவிட அதிகமாக முன்னின்று உழைக்கலானர். உதிரத்தை உழைப்பாக-ஆவியை அருஞ்செல்வமாக-பேச்சைப் பெரும் ஆயுதமாகப் பிரயோகித்தார்.

எங்கும் சுதேசி மயமே இருக்க எண்ணினர். விதேசிகளை வெறுத்தார். அதன் முதல் அறிகுறியாக பல பங்குகளைக்கொண்ட ஒரு

கம்பேனியை நிறுவி அதன் மூலமாக அந்நிய நாட்டுப் போக்குவரத்திலே மாறுதலை உண்டாக்கினர். தானே கப்பலின் மாலுமியாகவும் மாறினர். இதனல் வெள்ளைக் கப்பல் கம்பேனி பெரிதும் பாதிக்கப்பட்டது. இது கண்ட அரசாங்கம் அநியாயக் குற்றஞ் சுமத்தி அவரை அழைத்துச் சென்றது சிறைக்கூடத்துக்கு.

அங்கே! அன்புத் தமிழ்த் தலைவன்-அருமை நாட்டின் அடிமை நிலை போக்க அல்லும் பகலும் அயராது உழைத்த அஞ்சா நெஞ்சன்-என்ன செய்தான் தெரியுமா? தாய்நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்ட குற்றத்திற்கு கல்லுடைத்தான் கடும் வெயிலிலே!-செக்கிழுத்தான் இருட்டறையிலே-சிரமிக்கப்பட்டான் சீரியோன். அவ்வளவு துன்பத்திலும் மறந்தானு நாட்டை-நாட்டின் விடுதலையை?

இல்லை-நாட்டின் விடுதலையைத் தனது கல்லறைமீது கட்டிச் சுமக்க எண்ணி தன் உயிரையே பணயமாகக் கொடுத்தான் பண்புள்ளோன்.

தமிழ் நாட்டின் ஏடுகளிலே வைர எழுத்தாணிகொண்டு எழுதும் அளவுக்குத் தன்னுடைய உழைப்பைக் கொடுத்துவிட்டு சென்முன் அந்த உத்தமன்-உயர்வுள்ளோன்-உலகோர் வியக்கும் உன்னதன்.

என்முல் இப்பேர்ப்பட்ட அந்த மகத்தான மாவீரர்கள், மறத்தமிழ்ச் சிங்கங்கள், மண்ணவரும் விண்ணவரும் போற்றும் மாணிக்கங்கள் தங்கள் உயிர்களையே பணயமாகக் கொடுத்து எங்கணும் எழுச்சியை மூட்டி-உணர்ச்சியை ஊட்டி தாங்கள் கண்ட கனவை நனவாக்கும் பணியை எதிர்காலத்தவர்கள் கையிலே விட்டுச் சென்றனர்.

ஆண்டு சிலவற்றிற்கப்புறம் அவர்கள் கனவு....................“ஆடுவோமே பள்ளுப்பாடுவோமே—ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோம்!” என்ற பாரதிவாக்கும்,

“வெள்ளையனே வெளியேறு! குருதி கொட்ட நேரினும் கொடுக்கமாட்டோம் கப்பம்” என்ற கட்டபொம்மனின் திட்ட முடிவும்,

“அன்னை விலங்கொடிக்க
அயராது உழைப்பேன்
என்னை அர்ப்பணிப்பேன்
எந்தன் திரு நாட்டிற்கு” என்ற கலங்கா வீரன், கப்பலோட்டிய முதற்றமிழன் வ. உ. சி. யின் வாக்கும் நிறைவேறின! சுதந்திர சூரியன் உதயமானுன் 1947 ஆகஸ்டு 15ந் தேதி இரவு மணி 12க்கு.

தியாகிகள் வளர்ந்துவிட்ட அந்த சுதந்திரக் கனலின் ஜ்வாலையிலே ஆரோகணித்துப் பறக்க ஆரம்பித்தது அருமை நாட்டின் அன்புக்கொடி. அதைக் கண்டு அந்தத் தியாகிகளின் ஆவியும்-அகில பாரதமும் சேர்ந்து பாடியது.

“வெற்றி எட்டுத் திக்கும் எட்ட
கொட்டு முரசே” என்ற பாரதியின் மணி மந்திரத்தை நாம் இன்று-எட்டாம் ஆண்டு இன்ப சுதந்திர தினத்தன்றும் அந்தத் தியாகிகளின் நினைவுமாலையாகப் பாடி கடல்கடந்த நாட்டில் வாழும் நற்றமிழர்களாகிய நாம் நாட்டுப்பற்றைத் தெரிவித்துக்கொள்வோமாக!

வாழ்க பாரதம்! வாழ்க தாயகம்!!

★

நிழலிலே அழுத்தி வைக்கும்
இருட்டுபோல், நீல மொட்டில்
குழிபோடும் வண்டு, நேற்று
கற்றது தமிழை, இன்று
பழச்சுளை இறங்கும் பாடல்
பலப்பல அதற்குச் சொந்தம்!
பிழையிலாத் தமிழி னேடு
பிறந்தென்ன முகிலே நீ தான்!

—கவிஞர் சுரதா.

★

அழகிய அச்சு வேலைகளுக்கும்

ஆபீசுக்கு வேண்டிய கார்டுகள்,
ஆர்டர் புத்தகங்கள், கேஸ்மிமோ, லெட்டர் பேப்பர்,

இன்வாய்ஸ் புக், ரப்பர் ஸ்டாம்ப், சீல்,
இன்னும் பலவிதமான கலர் வேலைகளும்,

ஈயம், பித்தளை, பிளாக்குகளும், சுத்தமான முறையில் செய்துதரப்படும்

பாரதி பிரஸ்,

நெ. 191, பார் வீதி (நடுபிளாக்) இரங்கூன்.

வாழ்க பல்லாண்டு இந்தியா நாடு!

"பக்தாத் ரெஸ்டாரெண்ட்"

பிரேஸர் வீதி, முகல் வீதி முகனை, இரங்கூன்.

சிருகாமான உணவு வகைகளும் காப்பி, சாய், பால், ஓவல், ஹார்லிச்ஸ், மைலோ முதலான வகைகளும்—ஐஸ்கரீம், பாலுதா, மில்க்ஷேக், முதலான குளிர் பானவகைகளும் கிடைக்கும்.

திருமண முதலான வைபவங்களுக்கு நம்பிக்கையுடன் நல்லமுறையில் மேல் காட்டியவைகள் அனைத்தும் அவ்வப்போது அன்பர்களின் விருப்பப்படி தயாரித்துக்கொடுக்கப்படும்.

அதிபர்:—

முஹம்மதுசுல்தான்(ஏ)மவுங்மவுங் அண் சன்ஸ்,
பக்தாத் ரெஸ்டாரெண்ட்,
இரங்கூன்.

AZAD PHOTO STUDIO

205, MAUNG TAULAY STREET,
205, மவுந்தாலே வீதி, இரங்கூன்
RANGOON

சுதந்திர தின
வாழ்த்து.

எல்லா போட்டோக்களும்
உத்திரவாதத்துடன்
செய்துதரப்படும்.

HEALING
ANTISEPTIC

கிருமி நாசமளிக்கும்
ஆற்றும் தன்மையுள்ள
ஜெர்மெக்ஸ்
சிராய்ப்புகள், வெட்டுகள், படை, சொரி, கரப்பான்,
கட்டிகள், கடி விஷக்கடி சதைத் தடிப்பு, முகப்பரு
போன்ற இதர சரும உபாதைகளுக்கு

LITTLE'S ORIENTAL BALM & PHARMACEUTICALS LTD.,
POST BOX NO 67, MADRAS

DJK-22

சுதந்திரச் சிற்பிகளுக்கு எமது வணக்கம்

உலகில் உயர்ந்த மலை இமயமலை



காப்பி பலகாரங்களுக்கு
சிறந்த இடம்:

பர்மா சிற்றுண்டி சாலை,
216-18, பிரேசர் வீதி,
இரங்கோன்.

வாழ்க தாயகம்! வளர்க சுதந்திரம்!!

வேதம் அண்கோ புஸ்தகசாலை

ஸ்தாபிதம் 1932.

எங்களிடம்,

தமிழ், தெலுங்கு, ஹிந்தி, ஆங்கிலம், பர்மா ஸ்கூல் புஸ்தக வகைகளும் தமிழ், தெலுங்கில் அரசியல், சமூக சீர்திருத்த, புராண, இலக்கிய வைத்திய, ஜோதிட, சினிமா, நாடக, நாவல்ஸ், அம்மானை, கதை புஸ்தக வகைகளும், தின வார, மாத பத்திரிகை வகைகளும், இந்தியா மருந்து வகைகளும் விலை, சகாயமாய்க் கிடைக்கும்.

24 முகல் வீதி அண்ட் 226, பிரேசர் வீதி,

இரங்கூன்.

பாரத சுதந்திரம் நீடு வாழ்க!

குறைந்த கட்டணம்! சிறந்த சலவை!

BRODWAY PIN-MEN

☞ உங்கள் விலையுயர்ந்த பட்டுப்புடவை சில்க் சஸ்கீன் உடைகள், நேர்த்தியாகவும் சுத்தமாகவும் சலவை செய்து குறித்த நாளில் கொடுக்கப்படும்.

இன்றே விஜயம் செய்யுங்கள்

பிராட்வே பின்மென்

132, சூலேபகோடா ரோடு,

[சென்டரல் பயர் ஸ்டேசனுக்கு எதிரில்]

ரெங்கோன்.

அகில பர்மா தமிழர் சங்கம் வாழ்க!

சங்கப்போஷகர்களும், தலைவர்களும்



திருமிகு
இ. வெள்ளைச்சாமித் தேவர்

தலைவர்

திரு. சு. ரா. வெ. காளிமுத்துப் பிள்ளை.



திருமிகு
வை. மு. முத்துக்குமார் நாடார்

முன்னாள் தலைவர்



திரு. ஆர். எப். ராமலிங்கத்தேவர்

முன்னாள் தலைவர்



திரு. ஏ. எஸ். ஏகாம்பரம்

நீடூழி வாழ்க
சுதந்திர இந்தியா!

எங்களது இரட்டை யானை மார்க்கு மோகன் லீலா அகர்பத்தி, கிங் ஆப் ஈரான் அத்தர் உயர்ந்த வாசனைக்கும், நம்பிக்கைக்கும் சிறந்தது. பர்மாவில் பேரும் புகழும் பெற்று 1951-ம் ஆண்டில் யூனியன் ஆப் பர்மா கவர்ன்மென்டார்கள் நடத்திய அகில பர்மா பொருள்காட்சியில் நற்சாட்சிப் பத்திரமும், தங்கமெடலும் பரிசும் பெற்றுள்ளது. எப்பொழுதும் எல்லா இடங்களிலும் இரட்டை யானை மார்க்கு உள்ள மோகன் லீலா அகர்பத்தி, கிங் ஆப் ஈரான் அத்தர்களைக் கேட்டு வாங்கி உபயோகித்து மகிழ்ச்சி அடையுங்கள்.

Always Use
TWO ELEPHANTS
MOHAN LEELA AGARBATHY

အမြဲတမ်း
ဆင်နှစ်ကောင်တံဆိပ်
မိုဟန်လေလ - အမွှေးတိုင်
ကိုသုံးကြပါ

ஸோல் புரோப்ரைட்டர்:—
எம். அப்துல் ஹமீதுகான் சாகிப்,

தி. பெங்களூர் அகர்பத்தி
வாசனை சாலை,
270, முகல் வீதி, இரங்கூன்.

சுதந்திர இந்தியா சுபிட்சமாய் வாழ்க!

MADRAS COTTON TRADING Co.,
COTTON AND TEXTILE MERCHANT,
187, MOGUL STREET, RANGOON.

கல்யாணம் மற்றும் விசேஷ வைபவங்களுக்கு உரிய பட்டு, நூல், ஜவுளி தினுசுகளும், பிரிண்டட் சில்க் ஜார்செட் வகையறுக்களும் எங்களிடம் கிடைக்கும். மற்றும் மெத்தை, தலையணை, குஷின், சுத்தமான இலவம்பஞ்சால் தயாரித்து தரப்படும். பெட்சீட் (படுக்கை விரிப்பு) கொசு வலைகளும் கிடைக்கும்.

ஆர்டர்களை உத்திரவாதத்துடன் செய்துதருவதில் எங்களின் ஸ்தாபனம் பிரக்கியாதி பெற்றுள்ளதென்பதை எங்களின் வாடிக்கைக்காரர்களுக்கும் அன்பர்களுக்கும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

மெட்ருஸ்காட்டன் டிரேடிங் கம்பெனி,
நெ. 187, முகல் வீதி, இரங்கூன்.

வாழ்க பல்லாண்டு இந்திய சுதந்திரம்!

210 நோய்களுக்கு நிகரற்ற நிவாரணி!
"இமயகிரித் தைலம்"

☞ இது பையிலிருந்தால் அரிய சஞ்சீவி கையிலிருப்பது போலாகும்.

தலைவலி, உடம்பு வலி, ஜலதோஷம், ஜன்னி, காது வலி, கைகால் வலி, பல் வலி, வெட்டுக்காயம், காலரா எதுவாக இருந்தாலும் எமது "இமயகிரித் தைலம்" நொடிப்பொழுதில் போக்கி உங்கள் மனதைத் திருப்திப்படுத்தும்!

போலிகளைக் கண்டு ஏமாறுதீர்கள். "இமயகிரி" முத்திரையைக் கவனிக்கவும்.

புட்டி 1-க்கு விலை கியா 1—75.

விற்பனை நிலையம்,
319, அப்பர் பசுமந்தான் ரோடு, இரங்கோன்.

கிடைக்கும் இடங்கள்:—
வேதம் அண்ட் கோ, தேவர் கதம்ப நிலையம், பாரதி புத்தக நிலையம் (175, பேயர் வீதி) நேஷனல் ஸ்டோர், சூலேபய்யா கோவில், மற்றும் கிளிக்கடைகளிலும் கிடைக்கும்.

INDEPENDENCE GREETINGS!

SHAMIE CONFECTIONERY

RANGOON.

"ஷாமியின்"

சுதந்திரதின வாழ்த்து!

சுதந்திர இந்தியாவின் 8-வது சுதந்திர தினத்தை கொண்டாடும் எல்லாஇந்திய நண்பர்களுக்கும் எங்கள் வாடிக்கைக் காரர்களுக்கும் எங்களின் இதயங் கனிந்த சுதந்திர வாழ்த்து!

வாழ்க பாரத சுதந்திரம்!

அன்பர்களுக்கு

எமது சுதந்திர வாழ்த்துக்கள்!

ஸ்ரீ மாரியம்மன் விலாஸ்

காப்பி ஓட்டல்,

641, மெர்ச்சண்ட் வீதி, இரங்கூன்.

இடம் மாற்றம்

614, எண்ணுள்ள இடத்தில் அமைந்திருந்த ஹோட்டல் தற்பொழுது 641-நெ. மெர்ச்சண்ட் வீதியில் அமைந்திருக்கிறது. அன்பர்களும், வாடிக்கைகாரர்களும் வருகைதர எதிர் பார்க்கிறோம்.

இந்தியா சுதந்திரம் நீடு வாழ்க!

ஸ்ரீ இராம கிருஷ்ண விலாஸ்

காப்பி & சாப்பாடு ஹோட்டல்,

136-138, பிரேசர் வீதி,

இரங்கூன்.

நகரில் நல்ல சாப்பாட்டுக்கும், காப்பி, சிற்றுண்டிகளுக்கும் சகல சமூகத்தினரின் அபிமானத்தைப்பெற்று சிறந்து விளங்கி வரும் ஸ்தாபனம்.

ஐக்கிய நாடுகளின் சபையை அலங்கரித்த பெண்ணரசி—

ஸ்ரீமதி விஜயலெட்சுமி பண்டிட்.

உலகக் கொந்தளிப்பு ஐந்து பாகங்களில் வெடி வைத்திருக்கும் ஆபத்தை விளக்கும் சித்திரம் ஒரு சிறு நெருப்பு பொறி விழுந்தால் உலக யுத்தம் மூண்டுவிடலம் என்பதை எச்சரிக்கிறார் சித்திரக்காரர்.

நெருப்பு விபத்தின்போது அ. ப. த. சங்கத்தின் பெரும் சேவை கண்டு மகிழ்ந்து உணவு அளிக்கும் பொறுப்பை தாங்களும் ஏற்க முன்வந்த சீனப் பிரமுகர் மிஸ்டர் டான்-சென்-மின் அவர்களும் இரு சீன நண்பர்களுடன் நமது ஆசிரியர்.

ப. ஹ. ச. தலைவர்

மோல்மேன், சயா ஊ இராமா

இந்தியாவின் இரும்பு மனிதர் !



சர்தார் வல்லபாய் பட்டேல்.

தடிபிடித்த தந்தை !

தாண்டி யாத்திரையில் மகாத்மா.

அன்பின் அணையாச் சுடர் !

தோற்றம், 29—8—1936, இரங்கூன்.
மறைவு, 19—4—1943, (சென்னை).

நமது "பர்மா நாடு" ஆசிரியர்க்கு 'பர்மா நாடு"வும், செல்வன் சாலமோன் தேவதாஸ் காந்தியும் இரு கண்களாகும். இவ்விரண்டின் மீதும் உயிர். இமைபோல் பாதுகாத்து வளர்த்துவந்த இரண்டிலொன்றை இழப்பது தெய்வசித்தம் போலும். இந்நிலையில் பாசமும், கடமையும் போட்டியிட்டன. இறுதியில் கடமை வென்றது. ஆம்; சென்னையில் மீண்டும் "பர்மா நாடு" மறுமலர்ச்சி கண்டது. ஆனால், தம் ஒரே திருநிறைச் செல்வனை இழந்தார் நம் ஆசிரியர்.

எதிர்காலத்தில் 'பர்மா நாடு'வை ஏற்று நடத்த விருந்த சிந்தனைச் சிற்பி —செல்வன் காந்தி இறைவனடி சென்று விட்டான்.

யுத்தப் பிரளயத்தின் போது பர்மாவில் எல்லாவற்றையும் துறந்து அகதியாகச் சென்ற ஆசிரியர் தம் அன்பின் அழியாச் சின்னமாக எஞ்சி நின்ற செல்வனையும் இழக்கநேரிட்டது. ஆனால் இன்றைக்கும் நம் ஆசிரியரின் மனத்திரையில் தேவதாஸ் காந்தியின் உருவம் அன்பின் அணையாச் சுடராகப் பிரகாசிக்கிறது.

அன்புச் சிறுவனின் ஆன்மா அமைதியுறுமாக. தேவதாஸ் சாந்தியின் அமரவாழ்வில் நம் ஆசிரியர் அமைதி காண்பாராக!

வாழ்க சுதந்தரம் வையம் தழைக்க.

எதிர்பாருங்கள்! **ஜமால் சினிமாவில்** எதிர்பாருங்கள்!!

(தமிழ் திரைப்பட மாளிகை)

உன்னத பட அணிகள் !

"நல்ல காலம்"

M.K. ராதா, பண்டரிபாய், T.S. பாலையா, கலைவாணர் N.S.K., T. A. மதுரம் மற்றும் பலர்

'நம் குழந்தை'

V. நாகையா, மனோஹர், S. வரலக்ஷ்மி, N. S. கிருஷ்ணன், T. A. மதுரம், முதலியோர் நடித்தது.

'போர்ட்டர் கந்தன்'

M. K. ராதா, G. வரலக்ஷ்மி, T. S. துரைராஜ், M. N நம்பியார், முத்துலக்ஷ்மி முதலியோர் நடித்தது.

'மங்கையர் திலகம்'

சிவாஜி கணேசன், பத்மினி, ராகினி, M. N. ராஜம், சாரங்கபாணி, தங்கவேலு முதலியோர் நடித்தது.

'விளையாட்டு பொம்மை'

T. R. மஹாலிங்கம், குமாரி கமலா, தங்கவேலு, T. K. ராமசந்திரன், K. சாரங்கபாணி, முதலியோர் நடித்தது.

ஸ்ரீ ஜெயந்தி பிக்ஸர்ஸ் (மதராஸ்) ரிலீஸ்.

வாரப்பதிப்பு

நமது அடுத்த இதழ் (வாரப் பதிப்பு) செப்டம்பர் 5-ல் வெளிவருகிறது இதனைத் தொடர்ந்து பிரதி திங்கள்தோறும் வெளிவந்துகொண்டிருக்கும்.

நேரு பிரஸ்,

205, மவுந்தாலே வீதி,

இரங்கோன்.